


Follow us:

# தமிழன்

THAMILAN தමිළන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 460 பிலவ வருடம், மாசி மாதம் 09ஆம் திகதி திங்கட்கிழமை
(21.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 19, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30




# இலங்கை மீது கடும் குற்றச்சாட்டுகள்!



## ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலுள்ள விடயங்கள் கசிந்தன

- நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உரிய திட்டங்கள் இல்லை
- உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை
- பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் அவசர திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்தும் வலியுறுத்தல்

02 பக்கம்



## ஜெனீவாவுக்கான இலங்கையின் பதில் நாளை வெளியாகும்

02 பக்கம்

## 5 கப்பல்கள் எரிபொருட்களுடன் அடுத்த வாரம் இலங்கைக்கு

எரிபொருளை ஏற்றிய 05 கப்பல்கள் எதிர்வரும் வாரத்திற்குள் நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. 02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..



'மனித உரிமைகள் ஆணைக்குழுவும் எதோ சொல்லுது... நாங்களும் எதோ கேட்டுக்கொண்டிருக்கிறம்...'

## இலங்கையில் உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு தமிழர்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தும்!



### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலக தமிழர் பேரவையும் தமிழக முதல்வருக்கு கடிதம்



இலங்கையில் தற்போது உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு தமிழர்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தக்கூடும் என தமிழக முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில்... 02 பக்கம்

## புற்றுநோய் வைத்தியசாலையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சில பகுதிகளில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளிலும் தற்போது மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 02 பக்கம்

## அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு அரச வாகனங்களைப் பயன்படுத்தாதீர்!

### அரச சேவைகள் அமைச்சின் செயலாளர் உத்தரவு

02 பக்கம்

## உஷ்



நீர்கொழும்பில் உள்ள பிரபல சொகுசு ஹோட்டலை முழுமையாக கையகப்படுத்த சீனாவைச் சேர்ந்த குழுவொன்று நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி ஊழியர்கள் அனைவரும் அங்கிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதற்கான காரணம் தெளிவாகத் தெரியவில்லை.

எனினும் தற்போது அந்த ஹோட்டலில் சீனர்கள் குழுவொன்றே தங்கியுள்ளது. வேறு எந்த சுற்றுலாப் பயணிகளோ அல்லது ஊழியர்களோ அங்கு வருகை தரவில்லை எனத் தெரியவந்துள்ளது.

## நாட்டில் கிராம சேவகர் 9,000 வெற்றிடங்கள்

நாடளாவிய ரீதியில் கிராம உத்தியோகத்தர்களுக்கான 9,000 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுவதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. இதன் காரணமாக பல கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான பணிகளை ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே ஆற்றவேண்டியுள்ளதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.எச்.எம். சித்ரானந்த தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## மைத்ரியின் ஆவேசம்!



வவுனியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, வவுனியா கந்தசுவாமி கோவிலில் சிதறு தேங்காய் அடிக்கிறார்.

## வத்திக்கானில் பாப்பரசரை சந்திக்கும் பேராயர் ரஞ்சித்

### ஜெனீவாவிற்கும் செல்லத் திட்டம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு செல்லத் தீர்மானித்துள்ளார். 02 பக்கம்

## மின்சாரம், எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துக!

### அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஆலோசனைக் கோவை

மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பில் அனைத்து அரச நிறுவனங்களுக்கும் ஆலோசனைக் கோவையை வழங்குவதற்கு அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. 02 பக்கம்



## வத்திக்கானில் பாப்பரசரை...

மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இன்னும் சில தினங்களில் வத்திக்கான் சென்று, பரிசுத்த பாப்பரசரை சந்திக்கவுள்ளார். இதன்போது ஈஸ்டர் தினத் தாக்குதல் சம்பந்தமாக சர்வதேச விசாரணைக்கு தேவையான அனுமதியை பாப்பரசரிடம் பெற்றுக்கொள்ள பேராயர் தயாராகி வருவதாக தெரியவருகிறது.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்போதைய அரசாங்கத்தில் நீதி கிடைக்கும் என எதிர்பார்க்கவில்லை எனவும் இதனால், புதிய அரசாங்கம் ஒன்றிலாவது அந்த நீதி கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை நேற்றுமுன்தினம் கூறியிருந்தார்.

அத்துடன் அரசாங்கமும் சட்டமா அதிபர் திணைக்களமும் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஆதாரங்களை மறைத்து வைத்துள்ளதாகவும் பேராயர் குற்றம் சுமத்தியிருந்தார்.

## மின்சாரம், எரிபொருளை...

இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, இந்த ஆலோசனைக் கோவை வெளியிடப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

அதன்கீழ் அரச நிறுவனங்களில் குளிரூட்டிகள் மற்றும் தேவையற்ற மின் விளக்குகளின் பயன்பாட்டை இயன்றளவு குறைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

## நாட்டில் கிராம சேவகர்...

வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கைகள் தற்போது நிறைவடைந்துள்ளன.

எனினும், இதுவரை நேர்முகப் பரீட்சை இடம்பெறவில்லை.

பரீட்சைகள் திணைக்கள அதிகாரிகள் கடந்த சில மாதங்களாக வேலைப்பளுவில் உள்ளதால் நேர்முகப் பரீட்சைக்கான திகதியொன்றை ஒதுக்க முடியாதுபோனதாக உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சித்ரானந்த மேலும் கூறியுள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் ஜூலை மாதம் இதற்கான திகதியை ஒதுக்கி நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 5 கப்பல்கள்...

குறித்த கப்பல்களினூடாக டீசல், பெற்றோல் மற்றும் விமானங்களுக்கான எரிபொருள் என்பன கொண்டுவரப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நாட்டில் போதுமான எரிபொருள் காணப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை மின்சார சபைக்கு தேவையான எரிபொருளை வழங்கவுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இதற்கான கட்டணத்தை மின்சார சபை செலுத்த வேண்டுமென அவர் கூறியுள்ளார்.

இதனிடையே, நாளாந்த எரிபொருளுக்கான கேள்வி மிக வேகமாக அதிகரித்துள்ளது.

நாட்டில் நாளாந்தம் 6,000 மெட்ரிக் தொன் எரிபொருள் தேவையே காணப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் வரை, 9,000 மெட்ரிக் தொன்னாக அதிகரித்ததாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

## ஜெனீவாவுக்கான...

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமை பேரவையில் வெளியாவதற்கு முன்னரே இலங்கை அதற்கான தனது பதிலை பகிரங்கப்படுத்தும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை குறித்த முன்கூட்டிய பதிலொன்றை வெளிவிவகார அமைச்சர் வெளியிடுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது நாளை வெளியாகலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.







பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் மற்றும் மண்ணெண்ணெய் இல்லையென பாவனையாளர்கள் தெரிவித்தனர்.

## அத்தியாவசியமற்ற...

அரச வாகனங்களை அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு பயன்படுத்த வேண்டாம் என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி அரச நிறுவனங்களின் பிரதானிகளுக்கு விசேட சுற்று நிருபமொன்றை அனுப்பி அறிவுறுத்தியுள்ளார்.

அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு எரிபொருளைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, அரச வாகனங்களை பயன்படுத்தும் அரச நிறுவனங்களின் தலைவர்களை கொழும்பில் நடைபெறவுள்ள விசேட மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு அழைப்பதை கட்டுப்படுத்துமாறும் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறியிடம் இதுபற்றி வினவிய போது, எரிபொருள் பாவனையை குறைத்து எரிபொருளின் விலையை குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசாங்க உத்தியோகத்தர்களை அரசாங்க வாகனங்களில் கொழும்பில் கூட்டங்களுக்கு அழைப்பதற்குப் பதிலாக எதிர்காலத்தில் ‘சூம்’ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அந்தக் கூட்டங்கள் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புற்றுநோய்...

இலங்கையில் புற்றுநோயாளர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ள முதன்மையான சிகிச்சை மத்திய நிலையமாக மஹரகமயில் உள்ள அபேக்ஷா வைத்தியசாலை விளங்குகிறது.

கடந்த சில மாதங்களாக வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக வருகைதரும் நோயாளர்களுக்குத் தேவையான சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், நோயாளிகள் கூறுவதைப் போல் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றதா என வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் விஜித் குணசேகரவிடம் வினவியபோது, நோயாளர்கள் கூறும் மருந்து வகைகள் வைத்தியசாலையில் உள்ளதாக பதிலளித்தார்.

எனினும், தனிப்பட்ட நோயாளியின் பெயரில் கொண்டுவரப்படும் சில மருந்து வகைகள் கிடைப்பதில் சற்று தாமதம் நிலவுவதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனிடையே, பதுளை பொது வைத்தியசாலையிலும் புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

## இலங்கையில்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உலக தமிழர் பேரவையும் தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் உலக தமிழர் பேரவையின் சுரேன் சுரேந்திரனும் இந்த கடிதத்தை எழுதியுள்ளனர்.

அவர்கள் அதில் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தமிழர்கள் மீண்டும் முக்கியமான தொரு கட்டத்தில் உள்ளனர். யுத்தம் முடிவடைந்து 12 வருடங்களாகின்ற நிலையில் பொருளாதார வாய்ப்புகள் மோசமாக உள்ளன.

யுத்தம் தொடர்பான பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் என்பது சிறிதளவும் இல்லை.

தமிழர்கள் தங்கள் இருப்பு தொடர்பில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கல் மக்களின் குடிசார் எண்ணிக்கையை மாற்றுவதை நோக்கமாக கொண்ட அரச அனுசரணையுடனான முயற்சிகள் காரணமாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தங்களின் நிலத்தையும் அடையாளத்தையும் பாதுகாக்கவேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.

இலங்கையில் தற்போது உருவாக்கப்படும் புதிய அரசமைப்பு தமிழர்களின் நிலையை மேலும் பலவீனப்படுத்தும் என்ற அச்சம் காணப்படுகின்றது. இது மாகாணசபை முறையை இல்லாமல் செய்யும் அல்லது பலவீனப்படுத்தும் என்ற அச்சம் காணப்படுகின்றது. இந்தியாவின் நேரடி தலையீட்டுடன் தமிழ் மக்கள் பெற்றுக் கொண்ட ஒரேயொரு அரசமைப்பு அதிகார ஏற்பாடு மாகாணசபை.

இவ்வாறான மோசமான சூழ்நிலையில் நாங்கள் இந்தியாவினதும் தமிழ்நாட்டினதும் ஆதரவையும் வழிகாட்டுதல்களையும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்மக்கள் தங்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களில் குறிப்பிட்ட அளவு சுயாட்சியை அபிலாஷையாக கொண்டுள்ளனர். மேலும், அவர்கள் இலங்கையில் தாங்கள் சமபிரஜைகளாக வாழ்வதற்கும் தங்கள் தனித்துவமான அடையாளத்தை பாதுகாப்பதற்கும் இந்த அதிகாரமளித்தல் அவசியம் எனக் கருதுகின்றனர்.

தமிழ்நாடு மற்றும் இந்திய சிந்தனை மற்றும் கொள்கை நிலைப்பாடுகளுடன் எப்போதும் எதிரொலிக்கும் நிலைப்பாடாக இது காணப்படுகின்றது.

இந்தியா இலங்கை மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கை கொண்டுள்ளது. மேலும் நீதி, சமாதானம், கௌரவம் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஆகியவை குறித்த தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வை காணுமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளது.

இலங்கையின் ஐக்கியம் மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டினை ஆதரிக்கும் கொள்கையையும் தமிழர் அபிலாஷைகளுக்கான அர்ப்பணிப்பையும் இந்தியா, ஜெனீவா அமர்வு உட்பட பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளது. இவை பரஸ்பரம், பிரத்தியேகமான தேர்வுகள் இல்லை. இலங்கை தொடர்பான கொள்கையை இந்தியா வகுப்பதில் தமிழ்நாடு எப்போதும் முக்கியமானதாக காணப்படுகின்றது. இந்த சூழமைவில் தமிழக முதல்வர் கடைப்பிடிக்கும் பாதை மற்றும் யதார்த்தபூர்வமான அணுகுமுறை எமக்கு மகத்தான ஆறுதலை தருகின்றது.

இந்த இக்கட்டான நேரத்தில் இந்த பிரச்சினையில் தொடர்ந்தும் கவனம் செலுத்துவது தமிழ் மக்களின் நீண்டகால செழிப்பு மற்றும் அமைதிக்கு மிக முக்கியமானது. இது பாக்குநீரிணை மற்றும் இந்தியாவின் இருபுறமும் உள்ள தமிழர்களின் நலன்களுடன் உள்ளார்ந்த முறையில் இணைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மீது...

(நா.தினுஷா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் இலங்கை மீது மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இலங்கை மீதான இந்த குற்றச்சாட்டுகள், எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவுள்ளன. கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக கொழும்பில் உள்ள வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை, இலங்கையின் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது.

இதனையடுத்து வெளிநாட்டமைச்சின் அதிகாரிகள், அரசாங்கத்தின் அவதானிப்புகள் மற்றும் விளக்கங்களை ஜெனீவாவுக்கு அனுப்பியுள்ளனர்.

கடந்த ஆண்டு அறிக்கையுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டும் சர்வதேச தரத்துக்கு ஏற்ப பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் தவறியதை ஐ.நா. ஆணையாளரின் அந்த அறிக்கை விரிவாக ஆராய்ந்துள்ளது.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தங்கள் குறித்து ஐக்கிய நாடுகளின் பேரவை மகிழ்ச்சியடையவில்லையென தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும் சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளன. நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உரிய திட்டங்கள் இல்லை என தெரிவித்து உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை.

அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை .

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் 17 பக்க அறிக்கை பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவசர சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசியம் குறித்து அதிகளவு வலியுறுத்தியுள்ளது.

பொலிஸாரினால் தடுத்துவைக்கப்படுபவர்கள் கொல்லப்படுவதும் சட்டவிரோத படுகொலைகளும் அதிகரித்துள்ளதாக மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசாங்கம் நிலைமாறுகால நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான முறையான நம்பகரமான புதிய திட்டமொன்றை இலங்கை உருவாக்கவில்லை .

கடந்த வருடம் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவமயப்படுத்தும் செயற்பாடுகள் தீவிரமாகியுள்ளன. சுயாதீன ஊடகங்கள் உட்பட சிவில் சமூகத்தினர் செயற்படுவதற்கான தளத்தை மேலும் அதிகரிக்கவேண்டும்.

### பயங்கரவாதத் தடைச் சட்டம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் 17 பக்க அறிக்கையில் சர்வதேச தரத்துக்கு ஏற்ப, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் தவறியுள்ளமை குறித்து விசேடமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்தங்கள் குறித்து அதிருப்தியையும் ஆணையாளர் முன்வைத்துள்ளார். இச்சட்டம் தொடர்பாக அரசாங்கம் பலமுறை உறுதியளித்த திருத்தங்கள் அதில் உறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பாதிக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இலங்கைக்கான ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை தற்காலிகமாக திரும்பப் பெற வேண்டும் என்று ஐரோப்பிய நாடாளுமன்றம் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக் குழு கடந்த 8ஆம் திகதி பிரஸ்ஸல்ஸில் கூடிய போது இதற்கான குறிப்பு வெளிப்பட்டது.

இதனைவிட ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் புதிய அறிக்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு தின படுகொலைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை முயற்சியின் விளைவாக, இந்த விவகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது குறித்த விசாரணைகளில் சட்டமா அதிபர் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என மனித உரிமைகள் பேரவை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீதான குற்றச்சாட்டுகளை நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை விடுத்துள்ளமை சட்டமா அதிபர் குறித்த விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. அவர்கள் மீது 855 குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் பதிவு செய்தார். ஆனால் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

இதேவேளை, எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 49ஆவது அமர்வில், இலங்கை விவகாரம் குறித்த வாக்கெடுப்பு இடம்பெறாது. எனினும், இந்த ஆண்டு செப்டெம்பரில் இலங்கை தொடர்பான மற்றொரு தீர்மானத்துக்கு முன்னோடியாக இந்த அமர்வு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தற்போது விற்பனையில்




தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# இன்றைய ராசி பலன்

**21.02.2022 திங்கட்கிழமை மாசி 09**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| | | |
|---|---|---|
| **நட்சத்திரம்: சித்திரை** | **விருத்தி** | இரவு 7.57- 22.02.2022 |
| மாலை 4.17 வரை | பி.ப. 1.06 - 22.02.2022 | மாலை 6.34 வரை |
| **சுவாதி** | காலை 10.52 வரை | **முற்கரணம்: கௌலவம்** |
| மாலை 4.17 - 22.02.2022 | **திதி: அமர பட்ச பஞ்சமி** | காலை 8.33 வரை |
| மாலை 3.36 வரை | இரவு 7.57 வரை | **பிற்கரணம்: தைதுலம்** |
| **யோகம்: கண்டம்** | **அமர பட்ச ஷஷ்டி** | காலை 8.33 - இரவு 7.57 |
| பிற்பகல் 1.06 வரை | | |

| | | |
|---|---|---|
| **சுப நேரங்கள்** | பிற்பகல் 1.54 - 3.23 | லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி |
| காலை 6.26 - 7.27 | **எமகண்ட காலம்** | |
| மாலை 4.53 - 6.22 | காலை 10.55 - பி.ப. 12.24 | |
| **அசுப நேரங்கள்** **ராகு காலம்** | **துர் முகூர்த்தம்** | |
| காலை 7.56 - 9.25 | பிற்பகல் 12.48 - 1.36 | |
| **குளிகை காலம்** | மாலை 3.11 - 3.59 | |

**மேஷம்:** சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் வெற்றி கிடைக்கப் பெறலாம். நிறைவேறாத வேலைகள் இன்று நிறைவு பெறலாம். வணிகத்தில் பிறரின் ஆலோசனையை விட சுய எண்ணங்களே நன்மை தரலாம்.

**ரிஷபம்:** வேலை தேடுவோருக்கு புதிய பணிக்கான வாய்ப்பு கிடைக்கலாம். அறிவார்ந்தவர்களின் ஆலோசனை நன்மை தரும். உடல்நலம் சீராகும். கோபத்தை தவிர்ப்பது நன்மை.

**மிதுனம்:** வேலைத்தளத்தில் மேலதிகாரிகளிடம் அனுசரிப்பு தேவைப்படலாம். குடும்ப உறவுகள் வலுப்படும். இளம் வயதினருக்கு நட்பு விடயங்களில் கவனம் தேவைப்படலாம். அமைதியாக பணிகளை செய்வது நல்லது.

**கடகம்:** வேலைத்தளத்தில் ஒரு முக்கிய பொறுப்பு உங்களுக்கு கிடைக்கலாம். வணிக விற்பனை அதிகரிப்புடன், வணிக சந்திப்புகளும் உண்டாகலாம். சில செயல்களில் மேலதிக செலவு ஏற்படலாம். நிதி பரிவர்த்தனையில் கவனம் தேவைப்படலாம்.

**சிம்மம்:** இணைய வணிகத்தில் உற்சாகம் அதிகரிக்கலாம். பிள்ளைகளுடன் மகிழ்வான நாளாக அமையலாம். சமுதாய நற்பெயர் உருவாகலாம். இறையருளால் மனநிம்மதி கிடைக்கலாம்.

**கன்னி:** பணியிடங்களில் பிறரை சார்ந்திருக்கும் சில விடயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். உங்களுக்கு தகுதியில்லாத வேலைகளும் கிடைக்கலாம். வாயு சம்பந்தப்பட்ட வலி பிரச்சினை உண்டாகலாம். நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உண்டாகலாம். இறைவணக்கம் நன்மை.

**துலாம்:** பரம்பரை வணிகத்தில் பிள்ளைகளுக்கும் தொழில் பங்களிப்பு தரப்படலாம். ஊடகத்துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு புதிய கௌரவம் கிடைக்கலாம். புதிய வேலைவாய்ப்புகளும் கிடைக்கப் பெறலாம். தம்பதியரிடையே உறவுகள் சிறப்புறும்.

**விருச்சிகம்:** பெண்கள் தாழ்வு மனப்பான்மையை தவிர்ப்பது நன்மை. குடும்பத்தினர் சொல்லும் அனுபவ பாடங்களை ஏற்று நடப்பது நல்லது. உழைப்புக்கு ஏற்ற பலனும் இன்று கிடைக்காமல் இருக்கலாம். உடல் நலத்திலும் கவனம் தேவைப்படலாம். இறைவணக்கம் தேவை.

**தனுசு:** தொழிற்சாலை வர்த்தகம் சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரிய விற்பனை ஒப்பந்தங்கள் கிடைக்கலாம். புதிய தொழில் அல்லது வேலை தொடங்குவதற்கு இன்று நல்ல நாளாக அமையலாம். வணிக பயணம் இலாபம் தரலாம். இல்ல சூழல் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** சிறு வணிகத்தில் விற்பனை அதிகரிக்கலாம். பணியில் புதிய தொழில்நுட்பங்கள் உங்களால் பயன்படுத்தப்படலாம். ஒழுக்கத்துக்கு அவப்பெயர் தரும் விடயங்களில் ஒதுங்கி கவனமாக இருப்பது நன்மை.

**கும்பம்:** பிள்ளைகளுக்கு தங்கள் பணிகளில் நல்ல வாய்ப்புகள் உருவாகலாம். பணியில் உங்கள் உழைப்பின் பலன் வேறு ஒருவருக்கு கிடைக்கலாம். சில எதிர்ப்பு செய்பவர்களும் நட்பாக மாறலாம். பிறரை குறை கூறுவதை தவிர்ப்பதும் நல்லது.

**மீனம்:** தொழில் மற்றும் பணியில் உங்களுக்கு அதிருப்தி உண்டாகலாம். கடன் கொடுக்கும் விடயங்களில் கவனம் தேவைப்படலாம். உணர்வுபூர்வமான முடிவுகளை தவிர்ப்பது நன்மை. ஆன்மீக வழிபாடு தேவை.

**சந்திராஷ்டமம்: பூரட்டாதி நட்சத்திரம் பாதம் 4இற்கு அ.கா. 4.32 - காலை 10.25 உத்தரட்டாதி நட்சத்திரத்திற்கு காலை10.25 -22.02.2022 காலை 9.48 வரை**

# வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டம்






வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று (20) கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த பேரணியானது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்தியில் நிறைவடைந்தது. கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் குறித்த போராட்டம் ஆர்ப்பாட்டப் பேரணியாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பேரணியில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாம லாக்கப்பட்டவர்களின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

கொட்டும் மழையின் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மழையில் நனைந்தவாறு போராட்டத்தினை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

டிப்போ சந்தியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயலகத்திற்கான மகஜரை வேலன் சுவாமிகளிடம் கையளித்தனர்.

போராட்டத்தின்போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் சங்க செயலாளர் லீலாதேவி குறிப்பிடுகையில், நேற்று போராட்டம் நிறைவடைந்தது. இந்தப் போராட்டத்திற்காக பல்வேறு தரப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். ஆனால், குறித்த அழைப்பினை ஏற்று பலர் இங்கு வருகை தந்திருந்தனர். இன்றைய போராட்டத்தில் பொதுமக்கள் ஆதரவு தந்திருக்கவில்லை. ஒருசில அரசியல்வாதிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில், பொதுமக்களுக்கு ஒரு செய்தியை நாங்கள் தருகின்றோம். இந்தப் போராட்டத்தில் உங்கள் பங்களிப்பு கடந்த காலங்கள் போன்று இல்லை. உங்கள் வீட்டிலும் இதுபோன்று சம்பவங்களும் காணாமலாக்கப்படுதலும் இல்லாதிருக்கவும் பேரப்பிள்ளைகள் அடுத்த சந்ததிக்கு இவ்வாறு நடந்தேறக்கூடாது என்பதற்காகவுமே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

உங்கள் வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பம் மரம் அழிக்கப்பட்டு அரச மரம் முளைக்கும்போதுதான் அதனை நீங்கள் உணர்வீர்கள். அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் எமக்கு போதாது. உண்மையில் இந்தப் போராட்டத்தை அவர்கள் முன்னின்று நடத்தியிருக்கவேண்டும். அவர்கள் தமது ஆதரவாளர்களை அழைத்து வந்து இந்த போராட்டத்தை வலுபெற வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த போராட்டத்தில் கலந்துகொண்ட வவுனியா மாவட்ட சங்கத் தலைவி குறிப்பிடுகையில், எமது உறவுகள் இறந்துவிட்டனர் என்பதாக அரசாங்கம் கூறுகின்றது. யுத்தத்தில் இறந்தவர்களை நாங்கள் கேட்கவில்லை. சரணடைந்த - கையளிக்கப்பட்ட எமது உறவுகளையே நாங்கள் கேட்கின்றோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை எமக்கு வெளிப்படுத்த வேண்டும். அதற்காகவே நாங்கள் சர்வதேசத்தை நாடி நிற்கின்றோம் - என அவர் தெரிவித்தார்.

# மாகாண சபை - உள்ளூராட்சி சபை தேர்தல்களை தாமதமின்றி உடனடியாக நடத்த வேண்டும்

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா வலியுறுத்து

(வவுனியா நிருபர் )



அனைத்து மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களையும் தாமதமின்றி நடத்த வேண்டும் - என தொழிலாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட தொழில் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (19) நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வு நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எந்தநேரத்திலும் எந்தவொரு தேர்தலுக்கும் தயாராக உள்ளது. தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னரே தேர்தலுக்கான கூட்டணி தொடர்பில் தீர்மானிக்கப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தம்மைப் பலப்படுத்திக்கொண்டதன் பின்னர் ஏனைய கட்சிகளுடன் கூட்டணி அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும். இந்தத் தேர்தல் முறைமையின் கீழ் எந்தக் கட்சியும் கூட்டணி அமைக்காமல் வெற்றிபெறுவது கடினம்.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசாங்கம் நடத்தும் என நம்புகின்றேன். மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் சில சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதே எனது முடிவாகும்.

வடமாகாண யுத்தத்திபோது இடம்பெற்ற மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், மனித உரிமைகள் தொடர்பான தெரிவுக் குழுவின் அறிக்கையை உச்ச நீதிமன்ற நீதிபதி நவாஸ் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார். அந்த அறிக்கையின் அடிப்படையில் அது செயற்படுத்தப்பட வேண்டும்.

மேலும், வவுனியா மாவட்டத்திலுள்ள தொழில் அலுவலகத்தில் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளேன். அதனடிப்படையில் வடமாகாணத்திலுள்ள தொழில் அலுவலகங்களில் நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், தொழில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வவுனியா தொழிலாளர் அலுவலக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறை பேராசிரியர் சின்னத்துரை விஜயகுமார் அவரது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டி மத்தொனி மக்களால் அண்மையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். பேராசிரியர் மங்கல வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்படுவதையும் விழாவுக்கு தலைமைதாங்கிய ஓய்வுபெற்ற அதிபர் இளையதம்பி இராகவன், பேராசிரியர் சி.சிவலிங்கராசா, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை உப தவிசாளர் க.பொன்னையா ஆகியோர் உரையாற்றுவதையும் பேராசிரியருக்கு விருது வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது





தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்று இடம்பெற்றது. அத்துடன், நிர்வாகத் தெரிவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க கலாவினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. பின்னர் புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்பட்டது.

அதன்படி புதிய நிர்வாகத்தின் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக எஸ்.ஸ்ரீகஜன் (வீரகேசரி) தெரிவுசெய்யப்பட்டதுடன் செயலாளராக கே.ஜெயந்திரன் (தினக்குரல்) ஆகியோரும் உப தலைவர்களாக லியோ நிரோஷ தர்ஷனும் யாழ். தர்மினி பத்மநாதனும் உப செயலாளராக சு.சிவசண்முகநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொருளாளராக ப.விக்னேஸ்வரன் (சூரியன் எவ்.எம்.), உப பொருளாளராக எஸ். வாஸ் கூஞ்ஞை ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாகக்குழு உறுப்பினர்களாக ஆர்.சிவராஜா, எஸ்.அனந்த பாலகிட்ணர், என். ஜெயகாந்தன் இ.வீ.பிரியதர்ஷன், ஆர்.சேதுராமன், கி.லக்ஸ்மன் சிசில், பிரியங்கா சந்திரசேகரம், கே.ஹரேந்திரன், கே. பிரசன்னகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும், வடமாகாண இணைப்பாளராக கணபதி சர்வானந்தா, கிழக்கு மாகாண இணைப்பாளராக எஸ். சரவணன் மற்றும் மலையக இணைப்பாளராக சிவலிங்கம் சிவகுமாரன் ஆகியோருடன் ஒன்றியத்தின் மேலதிக இணைப்பாளராக யாழ். தர்மினி பத்மநாதனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த இரண்டு வருட கால கொரோனா நெருக்கடி நிலையின் பின் இடம்பெற்ற இக் கூட்டத்தில் பல ஊடகவியலாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது

திருட்டுச் சம்பவங்கள், பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் பிக்கு ஒருவரை கத்தியால் தாக்கி பலத்த காயங்களுக்குள்ளாக்கிய உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடுவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவலை விகாரை மாவத்தை பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் இரண்டு பயன்படுத்தப்படாத கைக்குண்டுகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பொலிஸாரால் தேடப்பட்டுவந்த பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் செசி மற்றும் எஞ்சின் இலக்கங்கள் மாற்றும் தொழிலில் ஈடுபடும் நபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளுக்கு மேலதிகமாக திருடப்பட்ட இரு தங்கச் சங்கிலிகள், மூன்று மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, சில கைப்பேசிகள், மோட்டார் சைக்கிள் பாகங்கள் பதிவு இலக்கத் தகடுகள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட மேலும் ஐந்து பொலிஸ் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் தகவல் உறுதிப்படுத்தப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# அரச ஊழியர்களுக்கு ஐயாயிரம் ரூபா: தொழிலாளர்களுக்கு வெறும் கோதுமை!

## சாடுகிறார் திகாம்பரம் எம்.பி.

(க.கிஷாந்தன்)

“ சலுகைகளுக்காக மக்களை காட்டிக்கொடுக்கும் அமைச்சர்களே மலையகத்தில் இருக்கின்றனர். அதனால்தான் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. இப்படியான அரசியல் வாதிகளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் ” - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பத்தனை – போகாவத்தையிலுள்ள கலாசார மண்டபத்தில் நேற்று (20) இடம்பெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.உதயகுமார்



உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

“நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பொருட்களின் விலைகள் உச்சந்தொட்டுள்ளன. இதனால் பெருந் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். அரச ஊழியர்களுக்கு ஐயாயிரம் ரூபா வழங்கப்படும் நிலையில், தோட்டத்தொழிலாளர்களுக்கு அற்பதொகையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. இது பெரும் அநீதியாகும். எமது மக்களை சிறுமைப்படுத்தும் செயலாகும். 50 வருடங்களாக அரசியல் செய்வதாக மார்தட்டிக்கொள்கின்றனர். ஆனால் நல்லாட்சியின்போது அந்த நான்கரை வருடங்களில் தான் மலையகத்தில் மாற்றம் ஏற்பட்டது. கிராமங்கள் உருவாக்கப்பட்டன. காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதனை காட்போட் என சின்ன பையன் ஒருவர் விமர்சிக்கின்றார். அது பொய், அந்த உறுதிப்பத்திரத்தை வங்கியில் அடகு வைத்து கடன் பெறலாம்.

எமது மக்களை ஏமாற்றி, அவர்களைக் காட்டிக்கொடுத்தே இவர்கள் செயற்படுகின்றனர். நாங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கினால் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்புகின்றனர். இப்படியான காட்டிக்கொடுப்பாளர்களுக்கு மக்கள் தக்க பதிலை வழங்குவார்கள்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, பெப்ரவரி 21ஆம் திகதி, திங்கட்கிழமை

# மூன்றாம் உலகப்போர் வந்தால் பேரழிவே?

ரஷ்யாவின் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனை வெற்றியடைந்ததை அடுத்து ரஷ்யா - உக்ரைன் நாடுகளிடையே போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கிடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்நிலையில், ரஷ்யா ஏவுகணை சோதனையில் தீவிரமாக ஈடுபட்டு வந்தது. கடந்த வெள்ளியன்று கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஒன்றை ரஷ்யா வெற்றிகரமாக சோதனை செய்து முடித்துள்ளது.

இதனுடன் டியூ95 அணுகுண்டுகளையும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் சோதனை செய்துள்ளது. இதுதொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு ஜெனரல் வலெரி தெரிவிக்கையில், ரஷ்ய ஏவுகணைகள் எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் திறன் பெற்றமை இந்த சோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

எதிரி நாடுகளிடமிருந்து ரஷ்யாவை பாதுகாக்கவே இதுபோன்ற சோதனை நடத்தப்படுவதாக கூறப்படுகிறது. ஆனால், சமீபத்தில் ரஷ்யா - உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கு இடையே எல்லைப் பதற்றம் அதிகரித்துள்ளதால் ஒருவேளை எதிர்காலத்தில் போர் மூண்டால் இந்த ஏவுகணைகள் மூலமாக ரஷ்யா, உக்ரைனை தாக்கும் அபாயம் உள்ளதாக உலக நாடுகள் அஞ்சுகின்றன.

உக்ரைன் கிழக்கு எல்லைப் பகுதியில், ரஷ்யா சுமார் ஒரு இலட்சம் படையினரை நிறுத்தியுள்ளது. நவீன ரக பீரங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களையும் ரஷ்யா நிலை நிறுத்தியுள்ளது.படையினர் பின்வாங்குவதாக கூறப்பட்டாலும் அது ரஷ்யாவின் பொய் என்கின்றன உளவு அமைப்புகள் .

மறுபுறம், படையினரை நிலைநிறுத்தியது தொடர்பாக இதுவரை ரஷ்யா போதிய விளக்கமளிக்கவில்லை என்றும் கூறியுள்ளது அமெரிக்கா. மேலும், உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தால் தக்க பதிலடி கொடுக்கப்படும் என அமெரிக்கா கூறியுள்ளது.

சில மேற்குலக நாடுகளைச் சேர்ந்த உளவு அமைப்புகள், 2022ஆம் ஆண்டில் ரஷ்யா உக்ரைன் மீது படையெடுக்கலாம் என்றும் கூறியுள்ளன. மேலும் நேட்டோ நாடுகளும், அமெரிக்காவும் உக்ரைனில் ஆயுதங்களைக் குவித்து, ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பதற்றத்தை அதிகரிப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. ரஷ்யாவோ, உக்ரைன் மீது படையெடுக்கும் திட்டம் எதுவும் தங்களுக்கு இல்லை என்று கூறிவருகிறது.

1990கள் வரை உக்ரைன் சோவியத் ஒன்றியத்தின் ஓர் உறுப்புநாடாகத்தான் இருந்தது. அதற்குப் பின் சோவியத் சிதைந்தபோது, சுதந்திரம் பெற்று தனி நாடாக தங்களுக்கென புதிய அரசமைப்புச் சட்டத்தோடு செயல்பட்டு வருகிறது. இப்போதும் உக்ரைன் தன் எல்லைகளை ரஷ்யாவோடும், ஐரோப்பிய ஒன்றியத்தோடும் பகிர்ந்துகொள்கிறது. ஆனால், கலாசார ரீதியிலும் சமூக ரீதியிலும் ரஷ்யாவோடு பல தொடர்புகளைக் கொண்டுள்ளது உக்ரைன். இப்போதும் ரஷ்ய மொழி பேசுவோர் கணிசமாக உக்ரைனில் வாழ்ந்து வருகின்றனர்.

2014ஆம் ஆண்டு ரஷ்யாவுக்கு ஆதரவாக இருந்த ஜனாதிபதி விக்டர் யனுகொவிச் (Viktor Yanukovych) பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில், உக்ரைனின் தெற்குப் பகுதியிலுள்ள கிரீமிய தீபகற்பத்தைக் கைப்பற்றியது ரஷ்யா. மேலும், கிழக்கு உக்ரைனில் கணிசமான பகுதிகளைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்தது ரஷ்யா. இதுதான் ரசோ யுக்ரேனியன் (RussoUkrainian) போராக உருவெடுத்தது.

பிரிவினைவாதப் போராளிகளுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடையிலான போரில் இதுவரை 14,000த்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இப்போதும் போர் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

2015ஆம் ஆண்டு உக்ரைனின் அப்போதைய ஜனாதிபதி பெட்ரோ பொரொஷென்கோ ரஷ்யாவின் விளாதிமிர் புட்டின் இடையில் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதுதான் மின்ஸ்க் ஒப்பந்தம் என்றழைக்கப்படுகிறது. உக்ரைன் மற்றும் ரஷ்ய ஆதரவோடு கிழக்கு உக்ரைனில் இருக்கும் பிரிவினைவாதப் படைகளுக்கு இடையிலான பிரச்சினையைத் தீர்ப்பது இந்த ஒப்பந்தத்தின் நோக்கம்.

அதன்பிறகு 20இற்கும் மேற்பட்ட முறை போர் நிறுத்தத்தைக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. தொடர்ந்து எல்லையில் இரு தரப்புப் படையினரும் கொல்லப்பட்டு வருகின்றனர். ரஷ்யா, உக்ரைன் இருநாடுகளுமே கிழக்கு உக்ரைன் பிரதேசம் குறித்து தங்களுக்கென தனித்தனிப் பார்வையைக் கொண்டுள்ளன. அது ஒன்றோடொன்று ஒத்துப்போகாமல் இருக்கிறது.

உக்ரைன் தன் நிலப்பரப்புகளை மீண்டும் தன் நாட்டோடு இணைக்கவும், தன் இறையாண்மையை நிலைநிறுத்தவும் விரும்புகிறது, ஆனால், ரஷ்யாவோ, கிவ் (Kyiv) நகரத்திலுள்ள அதிகாரிகளைக் கட்டாயப்படுத்தி கிழக்கு உக்ரைன் பகுதிக்கு சிறப்பு அந்தஸ்து அல்லது தன்னாட்சி அதிகாரத்தைப் பெற முயல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உக்ரைன் உள்நாட்டுத் தேர்தலை நடத்தவில்லை என்றும், கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து கொடுக்காமல் அலைக்கழிப்பதாகவும் ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், உக்ரைன் அரசாங்கமோ, கிழக்கு உக்ரைனுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிவிட்டதாகக் கூறுகிறது.

மின்ஸ்க் ஒப்பந்தத்தின்படி, உக்ரைன் தன் நிலப்பரப்புகளை ரஷ்யாவிடமிருந்து முழுமையாக பெறுவதற்கு முன், உள்நாட்டில் தேர்தலை நடத்த வேண்டும். கிழக்கு உக்ரைனில் தேர்தல்களை நடத்த வேண்டுமென்றால், அப்பகுதி முதலில் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என வலியுறுத்துகிறது உக்ரைன். இல்லையெனில் தேர்தல், ரஷ்யாவின் அழுத்தத்தின் கீழ் நடைபெறும் என உக்ரைன் தரப்பு கூறுகிறது.

உள்ளூர் அளவிலான தேர்தல்களை நடத்தாமல் உக்ரைன், கிழக்கு உக்ரைன் பகுதிகளைப் பெற அனுமதிக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என ரஷ்யா கடுமையாக எச்சரித்தது.

உக்ரைனின் இறையாண்மையைக் கட்டுப்படுத்த நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணையக்கூடாது என புதிய வாதத்தையும் முன்வைத்துள்ளது ரஷ்யா. மேலும் நேட்டோ அமைப்பு கிழக்கு நோக்கி முன்னேறுவதை நிறுத்துவது தொடர்பாக முறையாக உறுதியளிக்க வேண்டும் என்றும் தன் வாதங்களை முன்வைத்துள்ளது ரஷ்யா.

மேற்குலகத்தின் அதிரடிப் போக்குகள் தொடர்ந்தால் இராணுவ ரீதியில் தக்க பதிலடி கொடுக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் சமீபத்தில் எச்சரித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. பொதுவாக எந்தவொரு வல்லரசும் பலம் பொருந்திய நாடுகள் தமக்கு அருகில் இருப்பதை விரும்பாது. உதாரணத்திற்கு சீனா கனடாவுடன் கூட்டணி அமைப்பதை அமெரிக்கா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளது. அதேபோல் தமது எல்லைக்குள் அமெரிக்காவின் வருகையை ரஷ்யா விரும்பவில்லை. ஆக, இந்த இரண்டு நாடுகளின் அதிகாரப் போரின் இடையில் மாட்டிக்கொண்ட வெறும் பலியாடு மட்டுமே உக்ரைன்.

போர் ஒன்று வருமாயின் உக்ரைனைப் பாதுகாக்க ஏனைய உலக நாடுகள் எவ்வளவு தூரம் முன்வரும் என்பதும் ஒரு மிகப்பெரிய கேள்வி. ஏனெனில், ரஷ்யா போன்ற ஒரு நாட்டை எதிர்த்துப் போரிடும்போது அணு ஆயுத அச்சுறுத்தல்கள் உட்பட விளைவுகள் மிகப் பாரதூரமாக இருக்கும். இவற்றை எதிர்கொள்ள ஏனைய நாடுகள் தயாராக உள்ளனவா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றன.

முதல் இரண்டு உலகப்போர்களும் உருவான காலகட்டத்தில் தொழில்நுட்பம் அவ்வளவாக வளர்ந்திருக்கவில்லை. எனவே, ஆயுதம் தேவைப்பட்டது. ஆனால், இப்போது ஒரு போர் உருவாகும் என்றால் வெறும் தொழில்நுட்பம், உயிர் ஆயுதம் போன்றவற்றை மட்டும் வைத்தே ஒரு நாட்டின் ஒட்டுமொத்த இயக்கத்தையும் ஸ்தம்பிக்க வைத்து விடலாம். அந்த விதத்தில் ரஷ்யாவோடு மோதுவது பாரிய சேதங்களை ஏற்படுத்தும். எனவே, மூன்றாம் உலகப்போர் வந்தால் பேரழிவுதான்.

# உணவுக்காக உயிரைவிடும் கடல் யானைகள்

## புதிய கண்டுபிடிப்புகள்



சாரா கியென்லே

கடல் யானைகளில் (Elephant Seals) ஆண்களின் எடை மிக அதிகமாக இருக்கும். அதிகமான உணவுக்காக குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே வேட்டையாடுவதால், ஆண் கடல் யானைகள் அதிக அளவில் உயிரிழப்பைச் சந்திக்கின்றன.

கடலில் வாழ்ந்தாலும் கடல் யானைகள் பாலூட்டிகள். காற்றை மூக்கால் உறிஞ்சி நுரையீரல் மூலம் சுவாசிக்கும். கடலுக்கு அடியில் டைவ் செய்யும்போது மனிதர்களைபோல் ‘தம்’ கட்டி மூச்சை இறுக்கிப் பிடித்து, சுமார் 1,550 மீற்றர் ஆழத்துக்குச் சென்று வேட்டையாடும்.

வட கடல் யானைகள், தென் கடல் யானைகள் என இரு வகைகள் உள்ளன. அமெரிக்காவின் வட பசிபிக் கடற்கரையை ஒட்டி வட கடல் யானைகள் வாழ்கின்றன. அண்டார்க்டிகா கண்டத்தைச் சுற்றி தென் கடல் யானைகள் வாழ்கின்றன. உடல் முழுவதும் கொழுப்பு நிறைந்திருக்கும் கடல் யானையை 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் அதிகமாக வேட்டையாடியதால், இவற்றின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது.

வட கடல் யானைகளில் ஆண் சுமார் 1,500 - 2,300 கிலோ எடை இருக்கும். பெண் 400 - 900 கிலோ எடை இருக்கும். ஆண் கடல் யானைகள் சுமார் 5 மீற்றர் நீளமும் பெண் சுமார் 3.6 மீற்றர் நீளமும் வளரும்.

கலிபோர்னியாவிலுள்ள அனோ நியூவோ ஸ்டேட் பார்க் உயிரியல் பூங்காவில் ஆய்வு நடத்தப்பட்டது. சாரா கியென்லே தலைமையில் 39 ஆண் கடல் யானைகளிடமும் 178 பெண் கடல் யானைகளிடமும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2006ஆம் ஆண்டுமுதல் 2015ஆம் ஆண்டுவரை நடந்த ஆய்வில் பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன. ஆண் கடல் யானைகள் வேட்டையாடும் இடங்களில் பெண் கடல் யானைகள் வருவதில்லை என்பது ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. பொதுவாக ஆண் கடல் யானைகள் கடற்கரை, கரையை ஒட்டிய கடற்பகுதிகளில் மட்டுமே இரை தேடி நீந்தின.

பெண் கடல் யானைகள் உணவு தேடி நீண்ட தொலைவு கடலுக்குள் சென்றன. சில பெண் கடல் யானைகள் கடற்கரையிலிருந்து ஆயிரம் கிலோ மீற்றர் வரைகூட இரை தேடிச் சென்றன. சுமார் 500 முதல் 600 மீற்றர் ஆழம்வரை சென்று கணவாய் மீன்களைப் பிடித்து உண்டன.

தாராளமாக உணவு கிடைப்பதால் ஆண் கடல் யானைகளின் எடை மிக அதிகமாக இருந்தது. நீண்ட தொலைவு பயணித்து உணவை உட்கொள்ளும் பெண் கடல் யானைகளைவிட, சுமார் ஆறு மடங்கு கூடுதல் எடையை ஆண் கடல் யானைகள் பெறுகின்றன.

கூடுதல் உடல் எடையுடன் இருக்கும் ஆண் கடல் யானைகள், பெண் கடல் யானைகளைவிட விரைவில் மரணமடைந்தன. இரை தேடிக் கடலில் நீந்தும்போது ஆண் கடல் யானை இறக்க 0.45 சதவீத வாய்ப்பும் பெண் கடல் யானை இறக்க 0.12 சதவீத வாய்ப்பும் இருப்பதாக ஆய்வில் தெரிந்தது. அதாவது, பெண் கடல் யானைகளைவிட ஆண் கடல் யானைகள் ஆறு மடங்கு அதிகமாக இறப்பை எதிர்கொள்கின்றன.

ஏன் ஆண் கடல் யானைகள் அதிகளவில் மரணம் அடைகின்றன? முழுமையான காரணத்தை இன்னும் கண்டறியவில்லை என்கிறார் கியென்லே. எனினும், கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கூடுதல் மீன் வளம் இருப்பதால், வெள்ளைச் சுறாக்கள் குவிகின்றன. கடல் யானைகளைக்கூட இந்த வெள்ளைச் சுறாக்கள் வேட்டையாடக்கூடியவை. எனவே, சுறாக்களின் பிடியில் அகப்பட்டு ஆண் கடல் யானைகள் அதிகளவில் மரணமடைவதாக கியென்லே நினைக்கிறார். அதாவது அதிக உணவு கிடைக்கும் என்பதற்காக ஆபத்தான பகுதிக்குச் செல்லும் ஆண் கடல் யானைகள், உயிரிழந்துவிடுகின்றன.



# நம்பிக்கைக்குரிய போலி முகங்கள்!




செயற்கை நுண்ணறிவின் மூலம் போலி மனித முகம், உருவம், குரல் போன்றவற்றை உருவாக்குவது அதிகரித்திருக்கிறது. இத்தகைய போலி முகங்களை டீப் பேக் என்பர். இது குறித்த கவலை தரும் ஆய்வு முடிவு ஒன்று பி.என்.ஏ.எஸ்.ஜேர்னல் என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது.

செயற்கை நுண்ணறிவு மென்பொருட்கள், இன்று அசல் மனிதர்களின் சில ஆயிரம் படங்களை முன்மாதிரியாக வைத்து, செயற்கையாக முகங்களை வரைகின்றன. இந்த போலி படங்கள், இனம் பிராந்தியம் சார்ந்த மனித அடையாளங்களை சாமர்த்தியமாக பிரதிபலிக்கின்றன.

வல்லுநர்களே கூட அவற்றைப் பார்த்து, இது நிஜமனிதர்களின் படங்கள் என்று நினைத்து ஏமாறுவதுண்டு. மூன்று தனித்தனி ஆய்வுகளில், 600 பேருக்கும் மேற்பட்டவர்களிடம் இது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. அவர்களிடம் நிஜ மனிதர்கள், செயற்கை நுண்ணறிவு வரைந்த போலி மனிதர்களின் படங்களை ஆய்வாளர்கள் காட்டினர்.

இதில், எது அசல், எது போலி? என்று கேட்டனர். அதில், 48 முதல் 59 சதவீதத்தினர்வரை அசல், போலியை துல்லியமாகக் கண்டறிந்தனர். ஒரு குழுவிடம் எந்த முகங்களுக்குச் சொந்தமானவர்களை நீங்கள் நம்பிக்கைக்குரியவர் என்று கருதுவீர்கள்? என்று ஆய்வாளர்கள் கேட்டனர். அதில், அசல் முகங்களை சொன்னவர்களைவிட, போலி முகங்களை நம்பிக்கைக்குரியவை என்று சொன்னோரின் விகிதம் 8 சதவீதம் கூடுதலாக இருந்தது.

இந்த முடிவு, ஆய்வாளர்களை கவலைகொள்ளச் செய்துள்ளது. இந்த டிஜிட்டல், வைரல் யுகத்தில், போலி மனித உருவங்களை வைத்து நிதி மோசடி, ப்ளக் மெயில் ஆபாச வதந்தி பரப்புதல் போன்றவை எளிதாகிவிடும் அபாயம் உள்ளது என அவர்கள் எச்சரித்துள்ளனர்.

# தொடுதிரையாகும் மின்னணு துணி

ஜவுளித் துறையில் புதுமை படைக்கிறது ஸ்மார்ட் டெக்ஸ்டைல்ஸ் தொழில்நுட்பம். துணியைப் போலவே நெய்யக்கூடிய வகையில் வடிவமைக்கப்படும் மின்னணு கருவிகள்தான் இவை. அண்மையில், பிரிட்டனிலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலை விஞ்ஞானிகள் 46 அங்குல ஸ்மார்ட் டெக்ஸ்டைல் துணியை வடிவமைத்துள்ளனர். இதில் மிக நுண்ணிய எல்.இ.டி. குமிழ்கள், உணரிகள் மற்றும் மின்னாற்றல் சேமிப்பான்கள் போன்றவற்றை இழையோடு சேர்த்து நெய்து சாதனை படைத்துள்ளனர்.

இந்தத் துணி ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியும் ரகம் அல்ல. இதிலுள்ள எல்.இ.டி., விளக்குகள் நூலிழை போலவே வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை பலவகை இழைவடிவிலான உணரிகள் மூலம் ஒளியை உமிழ வைக்க முடியும்.


எனவே, இந்தத் துணியை வழக்கமான துணி போலவே நெய்யவும், கையாளவும் முடியும். இதை வைத்து விளம்பர பதாகைகளை நடைபாதையில் மிதி பட்டால் ஒளிரும் கால்மிதி, திரைச்சீலை என்று பல விதங்களில் பயன்படுத்த முடியும் என கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய நாளில்...

- 1803 – கண்டி மீது பிரித்தானியர் போர் தொடுத்தனர்.
- 1804 – நீராவியால் இயங்கிய முதல் தொடருந்து இயந்திரம் வேல்சில் இயக்கி சோதித்துப் பார்க்கப்பட்டது.
- 1842 – தையல் இயந்திரத்துக்கான 1ஆவது அமெரிக்கக் காப்புரிமத்தை யோன் கிரீ னா பெற்றார்.
- 1848 – கார்ல் மார்க்சும் பிரெட்ரிக் எங்கெல்சும் பொதுவுடைமை அறிக்கையை வெளியிட்டனர்.
- 7 7 – முதலாவது தொலைபேசி விபரக்கொத்து அமெரிக்காவில் கனெடிகட்டில் வெளியிடப்பட்டது.
- 1972 – சோவியத்தின் ஆளில்லா லூனா 20 சந்திரனில் இறங்கியது.
- 1995 – இசுட்டீவ் பொசெட் என்பவர் அமைதிப் பெருங்கடலின் குறுக்கே வெப்பக்காற்று வாயுக்கூண்டில் பயணம் செய்த முதல் மனிதராக கனடாவின் லீடர் நகரில் தரையிறங்கினார்.

# நக்கல் நமசிவாயம்

பெற்றோல் இல்லாவிட்டால் கியூவில நிக்கலாம்...கரண்ட் இல்லாவிட்டால் என்ன செய்யிறது?



# மக்களின் பிரச்சினைகளை தட்டிக்கேட்க சுதந்திரக் கட்சி ஒருபோதும் பின்வாங்காது

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி வவுனியாவில் தெரிவிப்பு







(வவுனியா நிருபர்)

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்க மாட்டோம். நாங்கள் மக்களது பிரச்சினையை கதைப்போம். மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் அதனை பேச முன்னிற்போம் - என முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட மாநாடு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது. இதில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்னி மாவட்டத்துடன் நான் சம்பந்தமுள்ளவனாக இருக்கின்றேன். இதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. நான் ஜனாதிபதியாகும் முன் பல அமைச்சுப் பொறுப்புகளில் இருந்தேன். சுகாதாரம், நீர்ப்பாசனம், விவசாயம் என பல பொறுப்புகளில் இருந்தேன். அதன்போது வன்னி பிரதேசத்திற்கு வந்து பல சேவைகளை செய்துள்ளேன். 2015ஆம் ஆண்டு என்னை ஜனாதிபதியாக தெரிவுசெய்ய அதிக வாக்குகளை நீங்கள் வழங்கினீர்கள். நான் ஜனாதிபதியாக இருந்தபோது பல சந்தர்ப்பங்களில் வன்னிக்கு வந்துள்ளேன்.

ஜனாதிபதியாக இருந்தபோது இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திகளை செய்துள்ளேன். வடக்கு, கிழக்குக்கென ஓர் அமைப்பினை நான் நிறுவினேன். யுத்தம் நடந்த பகுதிகளில் அபிவிருத்திகளை துரிதப்படுத்துவதற்கு அந்த அமைப்பை நிறுவினேன். என்னால் பல அபிவிருத்திகளை செய்ய முடிந்தது. சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற வேறுபாடு என்னிடம் இல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற எந்த வேறுபாடும் இல்லை. அனைவரையும் இந்த நாட்டு மக்கள் என்றுதான் பார்க்கின்றேன். எனது உள்ளத்திலிருந்து சொல்கின்றேன். நிரந்தர சமாதானத்தை உருவாக்க வேண்டும் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைத்தேன். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி நிதியம் மூலம் நிதி வழங்கினேன். சீனாவிலிருந்து அதற்கு உதவிகளை பெற்று பொலன்னறுவையில் சிறுநீரக வைத்தியசாலையை நிறுவினேன்.

எனது ஆட்சிக்காலம் ஏழை மக்களுக்கு சுபீட்சமுள்ள ஒரு காலமாக இருந்தது. அன்றாட தேவைகளுக்கான பொருட்களின் விலை அதிகரிக்கவில்லை. விவசாயத்துக்கு தேவையான பெருட்களுக்குத் தட்டுப்பாடு இருக்கவில்லை. வவுனியா போன்றே மற்றைய பிரதேசங்களிலும் விவசாயம் செய்யக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். விவசாயிகளுக்காக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். உங்களிடத்தில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. விலைவாசி அதிகரிப்பு பிரச்சினை இருக்கிறது. மின்சாரத் தடை ஏற்படுகிறது. பெற்றோலுக்கு நீண்ட வரிசையில் நிற்கவேண்டியுள்ளது. இப்படி பல பிரச்சினைகள் உள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வளர்த்து மக்களுக்கு சிறந்த ஆட்சியை ஏற்படுத்த மாவட்டம் மாவட்டமாக செல்கின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்துங்கள். உங்களுடன் சகோதரமாக வேலை செய்ய இன்னும் பல சகோதரக் கட்சிகளை இணைத்துக்கொண்டு உங்களிடத்தில் வரவிருக்கின்றோம். வருகின்ற தேர்தலுக்காக இவ்வாறு செயற்படுகின்றோம்.

நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற கட்சியாக இருக்கின்றோம். தற்போதுள்ள ஆட்சியாளர்களுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்க மாட்டோம். நாங்கள் மக்களது பிரச்சினையை கதைப்போம். மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் அதனை பேச முன்னிற்போம். நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும் இதையே பேசுகின்றோம். நாங்கள் எமது கட்சியின் அங்கத்தவர்களை ஒன்றுசேர்த்து ஓர் தீர்மானத்தை எடுத்து ஆட்சியாளர்களுக்கு கொடுத்துள்ளோம்.

இந்த அரசாங்கத்தின் நல்ல விடயங்களுக்கு மாத்திரம் ஆதரவு கொடுக்கின்றோம். மக்களுக்கு பிரச்சினை ஏற்பட்டால் அதனை தட்டிக் கேட்கப் பின்னிற்க மாட்டோம். உங்களுக்குள்ள சகல பிரச்சினைகளையும் தீர்க்க எமது கட்சியுடன் இணையுங்கள். இந்த மக்கள் சந்தோஷமாக இல்லை. அவர்கள் சந்தோஷமாக இருந்தால்தான் கட்சி, அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் சந்தோஷமடைய முடியும். மக்களுடன் பேசும்போது பல கவலைகளை கூறுகிறார்கள். நாட்டில் இறையாண்மை பிரச்சினையாக இருக்கின்றது. கஷ்டம் அதிகரித்துள்ளது. வேலைவாய்ப்பு பிரச்சினை உள்ளது. வேலை இல்லாமையால் பலர் நாட்டை விட்டு வெளிநாடு செல்கிறார்கள். நாட்டை அபிவிருத்தி செய்து இந்த நாட்டில் ஒன்றாக இருக்கவேண்டும் என்பதே எமது ஆசை - என்றார்.

இந்நிகழ்வில், அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, துமிந்த சில்வா, நிமால் சிறிபால டி சில்வா, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் உள்ளிட்ட உயர்மட்ட உறுப்பினர்கள், கட்சி அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாதனை வீரர் சுல்பிகாருக்கு கொழும்பில் வரவேற்பு



(அஷ்ரப் ஏ சமத்)

சாதனை வீரர் சுல்பிகாரை வரவேற்கும் நிகழ்வு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று (20) நடைபெற்றது. இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய தனி நபர் சைக்கிள் சவாரியை எட்டு நாட்களுக்குள் (1407KM) வெற்றிகரமாக நிறைவு செய்த இலங்கையின் சாதனை வீரர் சுல்பிகாரை வரவேற்கும் சிறப்பு நிகழ்வு ஜே.ஜே.பௌண்டேசன் ஏற்பாட்டில், பிரபல தொழிலதிபர், சமூக சேவகர் கலாநிதி ஐ.வை.எம். அனீப் தலைமையில் கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இன்று நடைபெற்றது.

சுதந்திர தினத்தினை முன்னிட்டு கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் தனது சைக்கிள் சவாரியை ஆரம்பித்து மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில், அம்பாறை, ஹம்பாந்தோட்டை வழியாக கடந்த 19ஆம் திகதி மீண்டும் சுதந்திர சதுக்கத்தை வந்தடைந்தார். இவரது இச் சாதனையை பாராட்டி அதே தினத்தில் கொழும்பில்



பொத்துவில் அஸ்மின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் யூ.எல்.யாக்கூப், சிரேஷ்ட அறிவிப்பாளர், சட்டத்தரணி, கவிஞர் ஏ.எம். தாஜ், சிரேஷ்ட அறிவிப்பாளர் "மனித நேயன்" இர்சாத் ஏ. காதர், பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டு சாதனையாளர் சுல்பிகார் குறித்து பாராட்டி பேசினர். ஜே.ஜே. பவுண்டேசன் பணிப்பாளர் கலாநிதி அனீப் சாதனை வீரர் சுல்பிகாருக்கு நினைவு சின்னம் வழங்கி, பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# சிரேஷ்ட ஒலிபரப்பாளர் மர்ஹூம் சனூஸுக்காக ஜாவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் துஆப் பிரார்த்தனை



(அஷ்ரப் ஏ சமத், ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவை முன்னாள் கட்டுப்பாட்டாளரும் முஸ்லிம் சேவையின் முன்னாள் பொறுப்பாளரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான மர்ஹூம் அல்ஹாஜ் சனூஸ் முஹம்மத் பெரோஸுக்கான துஆப் பிரார்த்தனையும் நினைவுநாள் நிகழ்வும் ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஜாவத்தை ஜும்ஆ மஸ்ஜிதில் இடம்பெற்றது.

ஒன்றியத்தின் தலைவர் சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளருமான அல்ஹாஜ் யூ.எல்.யாக்கூப்பின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை அஷ்செய்யத் ரஸ்மி மௌலானா நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து உலக அறிவிப்பாளர் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் பீ.எச்.அப்துல் ஹமீத், இ.ஒ.கூ. தமிழ் சேவையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ஆர்.யோகராஜன், சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் புத்தசாசன கலாசார அலுவல்கள் அமைச்சின் இணைப்புச் செயலாளருமான ஜெரஞ்சன் யோகராஜன், சிரேஷ்ட ஒலிபரப்பாளரும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன தொழில்நுட்ப உத்தியோகத்தருமான எம்.ஐ.சிஹாமுதீன், தென்றல் சேவையின் உதவிப் பணிப்பாளரும் சட்டத்தரணியும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான ஏ.எம்.தாஜ், இ.ஒ.கூ.தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான கே.ஜெயகிருஷ்ணா ஆகியோர் மர்ஹூம் பெரோஸ் பற்றிய நினைவுகளை மீட்டினர். மர்ஹூம் பெரோஸின் புதல்வர் பஸ்ஹான் குடும்பத்தின் சார்பாக ஏற்புரை வழங்கினார்.

# தெளிவத்தை ஜோசப்பின் 88ஆவது பிறந்ததின விழா





ஈழத்து படைப்பிலக்கியவாதி தெளிவத்தை ஜோசப்பின் பிறந்ததின விழா அண்மையில் கொழும்பு கொட்டாஞ்சேனை வைஷ்ணவி உணவகத்தில் வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது.

சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப்பின் 88ஆவது பிறந்த நாளை முன்னிட்டு இந்நிகழ்வில் வாழ்த்துகளும் பாராட்டுகளும் வழங்கப்பட்டதோடு, அவருடைய இலக்கிய சாதனைகளுக்காக கனடாவில் வாழும் பொறியியலாளரும் இலங்கை இந்திய காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினருமான பெரியசாமியின் புதல்வருமான பெரியசாமி பாலேந்திரா மற்றும் மலையக புரட்சிப் பாவலன் பட்டணம் பி.ஆர்.பெரியசாமியின் புதல்வருமான பி.சிவஞானம் இணைந்து அனுப்பிய பணப் பரிசும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இந் நிகழ்ச்சியை மூத்த ஊடகவியலாளர் எச்.எச்.விக்கிரமசிங்க திறம்பட ஒழுங்கு செய்து கச்சிதமாய் நடத்திச் சென்றார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வே.இராதாகிருஷ்ணன், பேராசிரியர் சோ.சந்திரசேகரன், முன்னாள் இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ், தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் நிகழ்ச்சியில் வாழ்த்துரைகளை வழங்கினார்கள். விழாவில், கனடா வாழ் இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதியாக மாத்தளை ஜெய்ஹிந்ராஜூம் கலந்து சிறப்பித்தார்.

தெளிவத்தை ஜோசப் இலங்கை அரசாங்கத்தினால் "சாகித்திய ரத்னா' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர். அவருக்கு 'கரிகாற்சோழன்' விருது, 'விஷ்ணுபுரம்' விருது, 'தமிழியல்' விருது என்பனவும் வழங்கப்பட்டிருந்தன. அவருடைய பல நூல்களுக்கு சாகித்திய மண்டலம் பரிசுகளும் வழங்கி கௌரவித்தது. அவுஸ்திரேலியா, கனடா, லண்டன் நாடுகளைச் சேர்ந்த கலை இலக்கிய அமைப்புகள், ஜோசப்பை தமது நாடுகளுக்கு வருமாறு அழைப்பு வழங்கி கௌரவித்துள்ளன.

அவருடைய "நாமிருக்கும் நாடே" என்ற சிறுகதைத் தொகுதியை வைகரைப் பதிப்பகம் யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக வெளியிட்டு வைத்தது. இதற்கான ஏற்பாடுகளை அப்போது செய்தவர் யாழ். பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராக பணியாற்றியவரும் தற்போது லண்டனில் வாழ்பவருமான பதுளை மு.நித்தியானந்தன். பழங்கால அரசர்கள் பல நாடுகளை வெற்றிகொண்டு அரசோங்கி இருந்தாலும் தமிழ் சமூகம் படைப்பிலக்கியதாரர்களுக்கே முக்கியத்துவமளித்து வந்துள்ளது. அவ்வாறே இன்று ஜோசப் போன்ற சமூக உணர்வுகளுடன் எழுதுபவர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள்.

ஆய்வேடுகளில் காணப்படாத, காணப்படக் கூடாத உணர்வுகளும் உயிரோட்டமும் கலைநேர்த்தியும் படைப்பிலக்கியவாதியான தெளிவத்தை ஜோசப்பின் எழுத்துகளில் உண்டு. அத்துடன் ஜோசப்பின் சிறுகதைகள், அவை நடந்த காலத்து சமூக நிலைமைகளை ஆவணப்படுத்தும் வரலாற்றுப் பதிவுகளாக கொள்ளத்தக்கவை என தனது வாழ்த்துரையின்போது, பேராசிரியர் சோ.சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

பி.பி. தேவராஜ் தமது உரையின்போது, 'இன்று மலையக மக்கள் எனப்படும் இந்திய வம்சாவளித் தமிழர்கள், இலங்கையின் பல்லின சமூகத்தின் ஓர் அங்கமாகிவிட்டனர். தமிழர் என்று பொது அடையாளத்துடன் அவர்களுக்கென தனியான சில கலை, கலாசாரப் பண்பாடுகளும் இருக்கின்றன. இவ்வகையில் மலையக மக்களின் கலாசாரம், சமூக பொருளாதார வாழ்க்கை என்பவற்றை பிரதிபலிக்கும் ஜோசப்பின் சிறுகதைகள், மலையக மக்களின் தனித்துவ அடையாளத்தைப் பேணுவதாயும் வலுப்படுத்துவதாயும் அமைகின்றன' என்றார்.

பேராசிரியர் தை.தனராஜ், வீரகேசரியின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன், சிரேஷ்ட பத்திரிகையாளர் என்.எம்.அமீன், ஈழத்து எழுத்தாளர் அல்லஸ் மத் உட்பட கலந்து கொண்ட அனைவரும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

தெளிவத்தை ஜோசப்பின் ஏற்புரையின் பின்னர் வர்த்தகப் பிரமுகர் எல்.வேலு நன்றியுரையாற்றினார். மதியபோசனத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நீராடிக் கொண்டிருந்த பெண்ணின் தங்கச் சங்கிலி அறுத்தெடுப்பு

(அநுராதபுரம்)

நீராடிக் கொண்டிருந்த பெண் ஒருவருடைய இரண்டரை பவுன் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்ற சம்பவமொன்று அநுராதபுரத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மல்வத்து ஓயாவில் நீராடிக் கொண்டிருந்தபோதே இவ்வாறு தங்கச் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இவ்வாறு தனது பிள்ளைகளுடன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அறுத்து தப்பிச்சென்றதாக குறித்த பெண் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மயக்க மாத்திரை கொடுத்து வர்த்தகரின் பணம் உள்ளிட்ட தங்க ஆபரணங்கள் திருட்டு

## இங்கிரியவில் சம்பவம்: சந்தேகநபரை தேடி பொலிஸ் வலைவீச்சு

(ஹேமந்த லியனபத்திரன)

பிரபல வர்த்தகர் ஒருவருக்கு மயக்க மாத்திரையை கொடுத்து பணம் உள்ளிட்ட பெறுமதியான பொருட்களை திருடிய சம்பவம் களுத்துறை, இங்கிரிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றுள்ளதுடன் அப்புத்தளையை சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடமிருந்தே இந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வர்த்தகருக்கு அவரின் நண்பரினூடாக பெண் தோழியொருவர் அறிமுகமாகியுள்ளார். குறித்த பெண்ணுக்கும் வர்த்தகருக்கும் இடையில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்துள்ள நிலையில், இருவரும் நேற்று முன்தினம் இங்கிரியவிலுள்ள ஹோட்டலொன்றில் சந்தித்துள்ளனர்.

இதன் போது சந்தேகநபரான பெண் குறித்த வர்த்தகருக்கு மாத்திரையொன்றை வழங்கியுள்ளார். அந்த மாத்திரையை உண்ட வர்த்தகர் மயக்கமடைந்துள்ளார். வர்த்தகர் மயக்கமடைந்ததும் அவரிடமிருந்த 09 இலட்சம் ரூபா பணம், 37 பவுண் தங்க ஆபரணங்கள், இரண்டு மாணிக்கக்கல், கைபேசி என்பவற்றை திருடிக்கொண்டு, குறித்த வர்த்தகரின் சொகுசு வாகனத்தில் சந்தேகநபரான பெண் தப்பித்துச் சென்றுள்ளார்.

வர்த்தகரின் வாகனம் அந்தபாங்கொட பிரதேசத்தில் வைத்து கைவிடப்பட்டநிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தில் வர்த்தகரினால் 19 இலட்சம் ரூபா மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அந்த பணம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை என்பதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 12 வயது சிறுமி துஷ்பிரயோகம்

(கெலும் குணதிலக்க)

மெதகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நன்னபுராவ, திவியாபொல பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் மெதகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சிறுமியை துஷ்பிரயோகம் செய்த சம்பவம் தொடர்பில் அந்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சிறுமி மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மெதகம நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் ஒருவர் சிறுமியை அவரின் நண்பரின் இல்லத்துக்கு அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மெதகம பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேகநபரான எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர் அந்த பிரதேசத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மெதகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரபாத் திசாநாயக்க தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பெயர்மாற்றம்

நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ செயலாளர் பிரிவில் உள்ள மஸ்கெலியா குடாமஸ்கெலியா கிராம சேவகர் பிரிவு 320 குடாமஸ்கெலியாவை வசிப்பிட மாக கொண்ட மொஹமட் ஹஷன் பாத்திமா அஸ்ணா அடையாள அட்டை இலக்கம்-987414251 மற்றும் பிறப்பு சான்றிதழ் ஆகியவற்றில் உள்ள எனது பெயரை இன்று முதல் ஹெனாலின் ஹஷன் என மாற்றி உள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் இலங்கை மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

ஒப்பம்.

ஹெனாலின் ஹஷன்.

# உடபுஸ்ஸல்லாவை நகரில் 5 வர்த்தக நிலையங்கள் முற்றாக தீக்கிரை





(க.கிஷாந்தன்)

உடபுஸ்ஸல்லாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடபுஸ்ஸல்லாவை நகரத்தில் நேற்று முன்தினம் (19) மாலை ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 07 கடைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

இத் தீ விபத்தில் எவருக்கும் உயிராபத்தோ, காயங்களோ ஏற்படவில்லை என்பதுடன், பொருட்கள் மாத்திரமே முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

புடவைக் கடைகளும் பிளாஸ்டிக் கடைகளுமே தீ விபத்துக்குள்ளாகியுள்ளதுடன், இதனால் ஏற்பட்ட சொத்து இழப்பு பல இலட்சங்களை தாண்டியுள்ளதாகவும் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தீப் பற்றிய நேரத்தில் வேகமான காற்றும் வீசியதாலேயே இந்தக் கடைத்தொகுதி விரைவாக பற்றி எரிந்துள்ளது. பொலிஸாரும் – பொது மக்களும் தீயணைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் தீயை விரைவாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.





குறித்த கடைகள் அனைத்தும் தகரக் கொட்டில்களாலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதனாலேயே, தீ வேகமாக பரவியுள்ளதாக உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை என்றும் இனந்தெரியாதோரால் தீ வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

சேத விபரங்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் இடம்பெற்று வருவதுடன், சம்பவம் தொடர்பாக உடபுஸ்ஸல்லாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஏற்பட்ட தீ காரணம் தொடர்பாகவும், சேதவிபரங்கள் தொடர்பாகவும் உடபுஸ்ஸல்லாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாவலப்பிட்டி நகரில் வீதியோர கால்வாய்களை அகலப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



(கினிகத்தேனை நிருபர்)

நாவலப்பிட்டி நகர சபையூடாக நகரத்தின் மத்திய பகுதியில் மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் கால்வாயினை அகலப்படுத்தி கொங்கிரீட் இடும் வேலைத்திட்டம் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

நகரத்தின் இரு மருங்கிலும் முன்பிருந்த கால்வாயானது, மிக சிறியதாக காணப்பட்டது. குறித்த கால்வாய் அதிக நீரை வெளியேற்ற முடியாத பகுதியாகவும் காணப்பட்டது. இதனால் மழைக் காலங்களில் நீர் முறையாக வெளியேறாததன் காரணமாக அது வெள்ளநீராக வீதியில் செல்லும் நிலைமையும் ஏற்பட்டது.

மழைக் காலங்களில் நாவலப்பிட்டி நகர மத்தியின் முச்சந்தி தொடக்கம் கண்டி வீதியானது வெள்ள நீரால் ஆறாகவும் தோற்றமளிக்கும். இதன்போது வீதி தென்படாத ஒன்றாகவும் காணப்படும். இப்படியான நிலைமையானது குறித்த பிரதேசத்தில் மழை பெய்யும் ஒவ்வொரு தருணங்களிலும் ஏற்படும் ஒன்றாகவும் காணப்படுகிறது. இதன்போது கண்டியில் இருந்து நாவலப்பிட்டி நகருக்கு உட்பிரவேசிக்கும் வாகனங்களும் அதேபோல் வேறு நகர பிரதேசங்களில் குறித்த நகருக்கு உட்பிரவேசிக்கும் வாகனங்களுக்கும் பெரும் சிரத்தை ஏற்படுத்திவிடும்.

மேலும், நகரத்தில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபார ஸ்தாபனங்களுக்கும் மழை நீர் உட்புகுந்துவிடக்கூடிய நிலையும் ஏற்பட்டுவிடும். இதன்போது வியாபார உரிமையாளர்களும் வியாபார நிலையங்களை மூடிவிட வேண்டிய நிலைக்கு உள்ளாகிவிடுவர். அத்துடன் வெள்ளநீர் வற்றியபின் வியாபார நிலையங்களை சுத்தம் செய்யவேண்டிய நிலை ஏற்படுவதோடு, சில பொருட்களுக்கும் சேதம் ஏற்பட்டும் விடும்.



மேலும், மழைக் காலங்களில் வெள்ளநீர் வீதியில் காணப்படும் தருணங்களில் பாதசாரிகள் சிரமத்துக்கு உள்ளாகிவிடுவர். அத்துடன் வியாபார நிலையங்களுக்கு செல்லும் வாடிக்கையாளர்களும் தமக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவுசெய்ய முடியாத நிலையும் ஏற்பட்டு விடும்.

இப்படியான சூழ்நிலையிலே மழை நீர் மற்றும் மேலதிக நீரை முறையாக வெளியேற்றும் வகையில் முன்பிருந்த கால்வாய் மேலும் அகலப்படுத்தி நீர் வெளியேறும் வகையில் தற்போது கொங்கிரீட் இடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அவ்வாறு இவ்வேலைத்திட்டம் முறையாக நிறைவுறுமாக இருந்தால் அது தமக்கு பலவழிகளிலும் நன்மையை ஏற்படுத்தும் என்றும் இப்பிரதேச மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

## சட்டவிரோதமாக மணல் அகழ்ந்த ஐவர் பொகவந்தலாவையில் கைது

(மனுர சுதத் செல்லஹேவா)

கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஐந்து பேரை பொகவந்தலாவை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பில் பொகவந்தலாவை பொலிஸ் அதிகாரியொருவரை வினவியபோது, கெசல்கமு ஓயாவில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட 05 பேர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டதாக பொகவந்தலாவை பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

கெசல்கமு ஓயா பகுதியில் உள்ள எல்டோப்ஸ் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அள்ளியபோதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பொகவந்தலாவை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், அவர்களை பொலிஸ் பிணையில் விடுவித்து, அவர்களுக்கு எதிராக ஹட்டன் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பதுளை மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் 106 பேருக்கு கொரோனா தொற்று உறுதி நால்வர் உயிரிழப்பு

(பதுளை நிருபர்)

பதுளை மாவட்டத்தில் கொவிட் -19 தொற்றினால் மரணமாகியவர்களின் தொகை பதுளையில் 600ஐத் தாண்டியுள்ளது.

கொவிட் -19 தொற்றினால் கடந்த ஐந்து தினங்களில் ஏழு மரணங்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், கொரோனா ஆரம்பம் முதல் நேற்று முன்தினம் வரையிலான காலப்பகுதியில் கொவிட் தொற்றினால் சிகிச்சைப் பலனின்றி 607 பேர், பதுளை மாவட்டத்தில் மரணமாகியுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் பதுளை மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் நான்கு மரணங்கள் இடம்பெற்றுள்ளதுடன், 108 பேருக்கு கொவிட்- 19 தொற்று உறுதியாகியுள்ளதாக, பதுளை மாவட்ட சுகாதாரப் பணியகம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் நேற்று முன்தினம் விடுத்துள்ள கொவிட் -19 தொடர்பான அறிக்கையில் கொவிட் -19 தொற்றினால் 607 பேர் மரணமாகியுள்ளனர். இதற்கமைய பதுளை – 78 பேர், பண்டாரவளை – 78 பேர், எல்ல – 15 பேர், ஹல்துமுல்லை – 24 பேர், ஹாலி-எல – 58 பேர், அப்புத்தளை – 43 பேர், கந்தகெட்டிய – 08 பேர், லுணுகலை – 18 பேர், மகியங்கனை – 76 பேர், மீகாகியுல -17 பேர், பசறை – 40 பேர், ரிதிமாலியத்தை – 20 பேர், சொரணாதொட்டை – 12 பேர், ஊவா – பரணகமை – 40 பேர், வெலிமடை – 80 பேர் என்ற வகையில் 607 பேர் மரணமாகியுள்ளனர். இம் மரணங்கள் அவ்வப் பிரதேச செயலகப் பிரிவுகளின் மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கமைய தகனம் செய்யப்பட்டுள்ளன.

பதுளை மாவட்டத்தில் கொவிட்- 19 தொற்றினால் ஏற்பட்ட மரணங்களும், நோயாளர்களும் சடுதியாக அதிகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். கொவிட் -19 சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுமாறு, அவ்வப்பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்கள், பொதுமக்களை தெளிவுபடுத்தியும் வருகின்றனர்.

## இரு குழுக்களுக்கிடையே வாய்த்தர்க்கம்; நல்லதண்ணியில் ஒருவர் மீது கத்திக்குத்து

(செ.தி.பெருமாள்)

நல்லதண்ணி நகரில் நேற்று முன்தினம் (19) இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் ஒருவர் மீது கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வருகின்றார்.

இது குறித்து நல்லதண்ணி பொலிஸ் நிலைய அதிகாரி எஸ்.ஜ. பண்டாரவிடம் கேட்டபோது, நோட்டன் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை சிவனொளிபாதமலையை தரிசிக்க வந்த வேளையில், அவருடன் வந்த குழு வாகனத்தை தரிப்பிடத்தில் விட்டுச்செல்ல சென்றவேளையில் அங்கு வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கத்திக்குத்து வரை சென்றுள்ளது எனவும் இதனால் கத்திக்குத்துக்கு இலக்கானவர் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

நோட்டன் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இது குறித்து அட்டன் வலய அதிகாரி விதித்த த அல்விஸ் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் பாரபட்சம் இன்றி விசாரணை நடத்துமாறு பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

## நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு காரணம் கொரோனா அல்ல, அரசின் முறையற்ற தீர்மானங்களே

### நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம்




(க.கிஷாந்தன்)

நாட்டிலே தற்போது பொருளாதாரப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. இதற்கு கொரோனா மட்டும் காரணம் அல்ல. இந்த அரசின் முறையற்ற தீர்மானங்களே பிரதான காரணங்களாகும். எனவே, நாட்டுக்கும் எமது மலையக மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமானால் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வரவேண்டும். சஜித் தலைமையிலான அமைச்சரவையில் நானும் அமைச்சராக இருப்பேன். எமது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரத்தின் அமைச்சின் காலகட்டத்தில் அட்டன் மல்லியப்பு புருட்ஹில் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட புதிய வீடமைப்புத் திட்டத்துக்கான மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உண்மையை பேச வேண்டும், உண்மையாக இருக்க வேண்டும், உண்மையாக வாழ வேண்டும் என்பதே எமது பழக்கம். அந்தவகையில் மலையக மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்ற நோக்கில்தான் அரசியலுக்கு வந்தேன். மாறாக இருப்பவற்றை சுருட்டிக்கொண்டு செல்வதற்கு அல்ல.

எமது பெருந்தோட்ட மக்களை ஒரு சில அரசியல் தலைமைகள் லயத்தில்தான் வாழ வைத்தனர். ஆனால், எனக்கு அமைச்சு பதவி கிடைக்கப்பெற்று குறுகிய காலப்பகுதியிலேயே தனி வீடுகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இன்றளவிலும் அத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அமைச்சு பதவியை சரியாக பயன்படுத்தி, மக்களுக்கு சேவை செய்தேன். அதனால்தான் புதிய சின்னத்தில் போட்டியிட்டபோதும்கூட 83 ஆயிரம் மக்கள் எனக்கு வாக்களித்தனர். இனியும் எனது உயிர் இருக்கும்வரை மக்களுக்கு சேவை செய்வேன். நாட்டிலே தற்போது பொருளாதாரப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. இதற்கு கொரோனா மட்டும் காரணம் அல்ல. இந்த அரசின் முறையற்ற தீர்மானங்களே பிரதான காரணங்களாகும். எனவே, நாட்டுக்கும் எமது மலையக மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமானால், ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சி வரவேண்டும். சஜித் தலைமையிலான அமைச்சரவையில் நானும் அமைச்சராக இருப்பேன். எமது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார்.

## பதுளை மகளிர் பாடசாலை அதிபரை முழந்தாளிடச்செய்த வழக்கில் ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சர் விடுதலை

(பதுளை நிருபர்)

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபரை, முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சர் முழந்தாளிடச் செய்ய வைத்தமை தொடர்பான வழக்கில் முதலமைச்சர் விடுதலை பெற்றுள்ளார்.

பதுளை நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி சமிந்த கருணாதாச முன்னிலையில் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வழக்கில் போதிய சாட்சியங்கள் இன்மையினால், முன்னாள் ஊவா முதலமைச்சரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க முற்று முழுதாக விடுதலைப் பெற்றுள்ளார்.

பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலய அதிபர் ஆர்.பவானி, முன்னாள் ஊவா மாகாண முதலமைச்சருக்கெதிராக பதுளைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்டிருந்த, புகாரையடுத்து, பதுளை நீதவான் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கை, நீதவான் நீதிபதி பதுளை இணக்கச்சபையில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டிருந்தார். அவ் இணக்கச் சபையில் வித்தியாலய அதிபர் ஆர்.பவானியும், முன்னாள் ஊவா முதலமைச்சரும் சமாதான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர். அதையடுத்து இவ்வழக்கு இணக்கச் சபையில் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. அத்துடன் அதன் இறுதி அறிக்கையும், பதுளை நீதவான் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

நீதிபதி இவ் வழக்கினை பரிசீலனை செய்து, முன்னாள் ஊவா முதலமைச்சரை முற்று முழுதுமாக விடுதலை செய்து, தீர்ப்பு வழங்கினார்.

இத் தீர்ப்பு குறித்து முன்னாள் முதலமைச்சரும், தற்போதைய பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தசநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், இத்தீர்ப்பினை முற்று முழுதாக வரவேற்கின்றேன். நீதிக்கும் நியாயத்துக்கும் கிடைத்த தீர்ப்பே இதுவாகும். வித்தியாலய அதிபரது புகாரின்படி குறிப்பிட்ட சம்பவத்துக்கு, எனக்கு எதிர்ப்பு தெரிவித்து பதுளை மற்றும் பதுளைக்கு வெளியிலும் பல்வேறு வகையில் போராட்டங்கள், மறியல் போராட்டங்கள், கண்டனப் பேரணிகள் பல இடம்பெற்றன. இவை எதையும் நான் பொருட்படுத்தவில்லை. அலட்டிக்கொள்ளவும் இல்லை. தெய்வ நீதிக்கு பயந்து, உண்மை, சத்தியம் வெல்லும் என்ற நிலையில், அமைதியாகவே இருந்தேன். எனது அமைதிக்கு வெற்றி கிடைத்தது. அதிபர் கூறிய இச்சம்பவத்தை பூதாகாரமாக்கியதினால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எல்ல பிரதேச சபைக்கு போட்டியிட்ட எனது மனைவி தோல்வியுற்றார். பாடசாலைக்குச் செல்லும் எனது பிள்ளைகளுக்கு சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டன. பலத்த எதிர்ப்புகள் எனக்கெதிராக இருந்து வந்தன. காலப்போக்கில், அவ் எதிர்ப்புகள் படிப்படியாக மாற்றமடைந்து, பொதுத் தேர்தலையும் எதிர்கொண்டேன். அத் தேர்தலில் பதுளை மாவட்டம் சார்பாக போட்டியிட்ட நான் தமிழ், சிங்கள, முஸ்லிம் இன மக்களின் ஆதரவுடன் சாதனை வெற்றியைப் பெற்றேன். அன்று என்னை எதிர்த்தவர்கள் நிலைமையை உணர்ந்து என்னுடன் உறவாடி வருகின்றனர். என்னிடம் ஜாதி, மதம், கட்சிப் பேதங்கள் இல்லை. அனைவருடனும் மனித நேயத்துடன், மனிதாபிமானத்துடன் இருப்பதை பதுளை மாவட்ட தமிழ் மக்கள் பூரணமாக உணர்ந்துள்ளனர் என்று கூறினார்.

## சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற வேன் சாமிமலையில் விபத்து

### ஐவர் காயங்களுடன் வைத்தியசாலையில்




(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்றவர்களின் வேனொன்று தடம்புரண்டதில் ஐவர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு சாமிமலை நெடுஞ்சாலையில் பாக்ரோ தோட்டப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரி தெரிவித்தார். மாத்தறை கோட்டாகொட பகுதியில் இருந்து நேற்று முன்தினம் சிவனொளிபாதமலைக்கு யாத்திரை வந்தவர்கள் என்பதுடன், தரிசனம் செய்த பின்னர் மீண்டும் தங்களது இல்லத்துக்கு திரும்பும்வேளையில் வீதியை தவறவிட்டு சாமிமலை வீதியில் சென்ற நிலையில், சாரதிக்கு நித்திரை வந்ததால் வாகனம் பள்ளத்தில் விழுந்துள்ளது. மேலும் குறித்த வேனில் 12 பேர் பயணித்துள்ளதுடன், எழுவர் காயங்களின்றி உயிர்த்தப்பியுள்ளனர்.

தமிழன்
www.thamilan.lk

# வணிக உலகம்
Business world

## 99x's Hacktitude 2022 நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உயர்மட்ட கௌரவம்





99Xஇன் புத்தாக்கமான தொழில்நுட்பப் பயன்பாட்டினால், அண்மையில் நாடு முழுவதிலுமிருந்து 600 இளங்கலை பட்டதாரிகள் சுமார் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான Hackathon Hacktitudeல் கலந்துகொண்டனர். ஒன்பது மணிநேர இடைவிடாத குறியீட்டு முறைக்குப் பிறகு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் School of Computing (UCSC) தலனா தர்மதிலக்க, அஷான் ரத்னவீர மற்றும் விசால் ஜயதிலக்க ஆகியோர் சிறந்த விதத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

பதிவுசெய்யப்பட்ட 230 அணிகளிலிருந்து 12 அணிகள் மட்டுமே முழுப் புள்ளிகளைப் பெற முடிந்தது மற்றும் மேலும் கொழும்பு கிங்ஸ்பரியில் அண்மையில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இந்த சிறந்த 12 அணிகளே அங்கீகரிக்கப்பட்டன. UCSCஇன் வெற்றிபெற்ற குழு முழு அணிக்கும் Developer-Grade, High-end Apple MacBooksகளைப் பெற்றது. மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் பீடத்திலிருந்து (UOM-CSE) முதல் மற்றும் இரண்டாவது இடத்தைப் பிடித்தது, மேலும் இந்த ஆசிரியர்களுக்கு அதிக மதிப்பெண்கள் பெற்ற பல்கலைக்கழகமாக Hackitude Championship Trophyயும் வழங்கப்பட்டது.

"பெரும்பாலான இளங்கலை பட்டதாரிகளுக்கு அறிவும் ஆற்றலும் உள்ளது, ஆனால், வேலை சந்தையில் நுழையும்போது தேவையான திறன்கள் மற்றும் தகைமைகள் இல்லை" என்று 99X தலைமை மக்கள் அதிகாரி தமிதா ஜயசிங்க தெரிவித்தார். "இருப்பினும், Hacktitudeல் பங்கேற்பதன் மூலம், இந்த 600+ மாணவர்கள் தங்களைத் தாங்களே சவால் செய்து, தங்கள் தொழில்நுட்பத்திறனை மேம்படுத்திக் கொண்டனர். உண்மையான வாடிக்கையாளர் திட்டங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பங்கேற்பாளர்கள் வெளிப்படுத்துவதற்காக இந்த சோதனைகள் உருவாக்கப்பட்டன. வேலை சந்தையில் நுழைவதற்கு முன்பு அவர்களின் தொழில்துறையின் தயார்நிலையை மேம்படுத்த அனுமதிக்கிறது.

99X அணியினருக்கும் இது ஓர் ஊக்கமளிக்கும் மற்றும் உற்சாகமான நேரம் என்று அவர் கூறினார், குறிப்பாக, பங்கேற்பாளர்களால் பெறப்பட்ட ஏராளமான நேர்மறையான கருத்துகள், நிகழ்விலிருந்து தாங்கள் நிறைய கற்றுக்கொண்டதாக பகிர்ந்துகொண்டனர்.

அவர்களின் Hacktitude அனுபவம் குறித்து வெற்றிபெற்ற 'NamakNa' அணியின் தலன தர்மதிலக்க கருத்து தெரிவிக்கையில், "Hackathonனின் வடிவம் எங்கள் அனைவருக்கும் ஒரு புதிய அனுபவமாக இருந்தது. இது சவாலானது. ஆனால், மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது. Hacktitude என்பது இளங்கலைப் பட்டதாரிகளுக்கு உற்பத்தி தரக் குறியீட்டை உருவாக்குவதில் தங்கள் திறன்களை சோதித்து மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த போட்டி என்று நான் நினைக்கிறேன். அடுத்த ஆண்டிலும் பங்கேற்க ஆவலுடன் உள்ளோம். இதுபோன்ற அற்புதமான Hackathonனை ஏற்பாடு செய்ததற்கு 99X நன்றி."

தயாரிப்பு பொறியியலாளர்களைப் பயிற்றுவிப்பதற்காக 99X ஆல் உருவாக்கப்பட்ட முதல் வகையான தளமான DevGrade மூலம் முழு நிகழ்வையும் சாத்தியமாக்கியது. இதுவும் ஒன்பது மணிநேரத்தில் 600இற்கும் மேற்பட்ட இளம் டெவலப்பர்களின் பணியை ஆதரிப்பதில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த வெற்றியைக் கருத்திற்கொண்டு, 99X Hacktitudeஐ ஒரு வருடாந்த நிகழ்வாக மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது, மேலும் சிறு வயதிலிருந்தே ICT பற்றி அவர்களுக்குக் கற்பிக்க, பாடசாலை மாணவர்களுக்கும் இதை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

99X என்பது ஸ்காண்டிநேவிய சந்தையில் நன்கு வடிவமைக்கப்பட்ட, புத்தாக்கமான டிஜிட்டல் தயாரிப்புகளை உருவாக்கும் ஒரு தொழில்நுட்ப நிறுவனமாகும். முன்னணி சுதந்திர மென்பொருள் விற்பனையாளர்களுடன் (ISVs) இணைந்து உருவாக்கப்பட்ட 150இற்கும் மேற்பட்ட உலகளாவிய டிஜிட்டல் தயாரிப்புகளின் கோப்புறை (Portfolio) மூலம் அதன் நிபுணத்துவம் நிரூபிக்கப்பட்டுள்ளது. 99X350இற்கும் மேற்பட்ட தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு நிபுணர்களைப் பயன்படுத்துகிறது, அவர்கள் உயர் சாதனையாளர்கள், ஆக்கப்பூர்வமான சிந்தனையாளர்கள் மற்றும் குழு வீரர்கள். நிறுவனம் 2021ஆம் ஆண்டிற்கான ஆசியாவின் சிறந்த பணியிடங்களில் ஒன்றாகும் மற்றும் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகளாக இலங்கையில் சிறந்த பணியிட பெயர் வரிசையில் இடம்பிடித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## HNB Ithuru Ithuru முகவர் வங்கிச் சேவையை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த கைகோர்க்கும் HNB மற்றும் SLTMobitel



வங்கி மற்றும் தொலைத்தொடர்பு ஆகியவற்றில் இலங்கையின் இரண்டு ஜாம்பவான்களான HNB PLC மற்றும் SLTMobitel PLC ஆகியன HNB வாடிக்கையாளர்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட Mobitel mCash முகவர் மூலம் சேமிப்புக் கணக்கு வைப்புகளைச் செய்யும் முன்னோடி வங்கிச் சேவையான 'HNB Ithuru Ithuru' முகவர் வங்கிச் சேவையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் கைகோர்த்துள்ளன.

நாடு முழுவதும் சேமிப்பு நடைமுறையை பிரபலப்படுத்தும் நோக்குடன் HNB முகவர் வங்கிச் சேவை வசதியை அறிமுகப்படுத்துகிறது.

இந்த கூட்டாண்மை குறித்து கருத்து தெரிவித்த HNB முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனதன் அலஸ், "எல்லா இலங்கையர்களுக்கும் நிதிச் சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதற்கான புத்தாக்கமான வழிகளை தொடர்ந்து வழங்க Mobite உடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் வங்கிச் சேவையை மேலும் மேம்படுத்துவதில் அதிகளவில் முதலீடு செய்து வருகிறோம், மேலும் Mobiteஇன் விரிவான mCash வலைப்பின்னலில் இணைவதன் மூலம் அதை மேலும் விரிவுபடுத்த முடியும். இதன் பொருள், அத்தியாவசிய நிதிச் சேவைகளுக்கான சிறந்த அணுகலை வழங்குவது மற்றும் வாடிக்கையாளர்களுக்கு, குறிப்பாக, பின்தங்கிய கிராமப்புறப் பகுதிகள் மற்றும் நாடு முழுவதிலுமுள்ளவர்களுக்கு பெரும்பான்மையான வசதிகளை வழங்குவதாகும். இது அனைவருக்கும் கிடைத்த வெற்றி மற்றும் நாட்டிற்கு ஒரு முக்கியமான மைல்கல்" எனத் தெரிவித்தார்.

"கென்யா போன்ற ஆபிரிக்க சந்தைகளில் நம்பமுடியாத முன்னேற்றத்தை ஏற்படுத்த இதே மாதிரிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அங்கு வங்கி முகவர்கள் மூலம் சுமார் 7.27 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன. உகண்டா, தான்சானியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளும் தற்போது இந்த முறையை முன்னோடியாகக்கொண்டுள்ளன. எங்களின் முகவர் வங்கிச் சேவைகளின் ஆரம்பமானது நிதிச் சேவைகளுக்கான அணுகலுக்கும், ஒரே மாதிரியான வாய்ப்புகளுக்கான HNBயின் திருப்புமுனைத் தடைகளில் இதேபோன்ற மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்" என HNBஇன் பிரதம செயற்பாட்டு அதிகாரியும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான டில்ஷான் ரொட்றிகோ தெரிவித்தார்.

Mobitel உடனான HNBஇன் கூட்டாண்மையானது வங்கியின் பரந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். இது இலங்கை வங்கித்துறையில் ஒரு புதிய முன்னுதாரணத்தை உருவாக்குவதற்கு வங்கிச் சேவைகளை அதன் கிளைகளிலிருந்து எடுத்து வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை வழிநடத்துவதன் மூலம் அர்த்தமுள்ள, நீண்டகால உறவை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது - என டில்ஷான் ரொட்றிகோ தெளிவுபடுத்தியுள்ளார்.

வைப்புகளைச் செய்வதற்கு எந்தவொரு HNB பொது அல்லது சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருப்பவரும், Softlogic, Singer, Lankabell போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட Mobitel mCash முகவர்களுடனும், Mobitel அல்லது SLT விற்பனை நிலையங்களுடனும் தங்கள் கணக்கில் எளிமையான முறையில் வைப்பு செய்ய முடியும். பரிவர்த்தனையை மேற்கொள்ள வாடிக்கையாளர்கள், அவர்கள் வைப்பு செய்ய விரும்பும் தொகை, கையடக்கத் தொலைபேசி எண் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் அவர்களின் பெயர், பொது அல்லது சிறுவர் சேமிப்புக் கணக்கு இலக்கம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

வைப்பு செய்தவுடன், வாடிக்கையாளருக்கு வைப்புத்தொகையை உறுதிசெய்வதற்கான ரசீது வழங்கப்படும். HNB மற்றும் Mobitelஇலிருந்து இரண்டு தனித்தனி குறுஞ்செய்திகள் வைப்பு செய்வதை உறுதிசெய்யும் வாடிக்கையாளருக்கு தனித்தனியாக அனுப்பப்படும். அங்கு ஒவ்வொரு வாடிக்கையாளரும் ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 25,000 ரூபாவை வைப்புச் செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்.

(முகவர் வங்கியுடனான உலகளாவிய அனுபவம் நாட்டிலுள்ள எதிர்கால சந்ததியினருக்கு வலுவான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது) இலங்கை மத்திய வங்கியின் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் இயங்கும் HNB மற்றும் SLTMmobitel ஆகியவற்றுக்கு இடையேயான இந்த புதிய கூட்டமைப்பானது கிராமப்புறங்களில் வசிக்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் சமமான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நாடு முழுவதும் 256 வாடிக்கையாளர் நிலையங்களுடன் HNB இலங்கையின் மிகப் பெரிய தொழில்நுட்ப ரீதியாக புத்தாக்கமான வங்கிகளில் ஒன்றாகும். டிஜிட்டல் வங்கிச் சேவையில் புதிய முன்னுதாரணத்தை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளுக்கு உள்ளூர் மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. பிரித்தானியாவை தளமாகக்கொண்ட புகழ்பெற்ற பாங்கர் சஞ்சிகையால் தொகுக்கப்பட்ட உலகின் தலைசிறந்த 1,000 வங்கிகளின் பட்டியலில் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக வங்கி தரப்படுத்தப்பட்டது மற்றும் 2020ஆம் ஆண்டுக்கான உலகளாவிய நிதி விருதுகளில் இலங்கையின் சிறந்த துணைக் காப்பாளர் (Sub-Custodian) வங்கியாக அறிவிக்கப்பட்டது. HNB Fitch Ratings (Lanka) Ltd மூலம் AA- (lka) இன் தேசிய மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.

## அந்நியச் செலாவணி நெருக்கடி குறித்து அரசுடன் ஆடைத்துறை தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது: JAAF





ஒன்றிணைந்த ஆடைத் தொழிற்சாலை சங்கங்களின் மன்றமான (JAAF) தற்போதைய அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் அதிக எண்ணிக்கையிலான பங்குதாரர்களின் ஒத்துழைப்பிற்கும் அத்துடன், இலங்கையில் ஆடைகளுக்கான மிகவும் நிலையான மற்றும் நீண்டகாலப் பாதைக்கான சட்டச் சீர்திருத்தத்திற்கும் வலுவான உரையாடலுக்கு அழைப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

விநியோகச் சங்கிலி பங்குதாரர்கள், ஏற்றுமதி சார்ந்த ஆடை உற்பத்தியாளர்கள், கொள்வனவு அலுவலகங்கள் மற்றும் இலங்கையிலுள்ள சர்வதேச வர்த்தகநாமங்களின் பிரதிநிதிகள் உட்பட ஐந்து சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த ஐந்து அமைப்பான மன்றத்தின் சமீபத்திய வருடாந்த பொதுக் கூட்டத்தில் (AGM) இந்தக் கருத்துகள் வெளியிடப்பட்டன.

கூட்டத்தில் உரையாற்றிய JAAFஇன் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவரும் MASஇன் துணைத் தலைவருமான ஷராட் அமலியன், தொற்றுநோய் பரவினாலும் வணிகச் சமூகத்தைத் தொடர்ந்து அவர்கள் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளுக்காக பாராட்டினார். மேலும் இருதரப்பு வர்த்தகத்தையும் GSP+ஐயும் 2025இற்குள் 8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்காகக் கொண்டு வெற்றிகரமாக பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதையும் குறிப்பிட்டார்.

"மீண்டும் ஒருமுறை இலங்கை ஆடைகள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க செயற்றிறனைப் பெற்றுள்ளதுடன், கடந்த ஆண்டு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான ஏற்றுமதியை ஈட்டியுள்ளது. ஆனால், இன்னும் பல தடைகள் நம் முன்னால் உள்ளன. இந்த நிச்சயமற்ற காலங்களில் வெற்றிபெற அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைந்து செயல்படுவதும் அந்நிய செலாவணி பிரச்சினைகள் மற்றும் எங்கள் தொழில்துறையின் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்யக்கூடிய விதிமுறைகளை ஏற்றுக்கொள்வது குறித்தும் அதிகாரிகளுடன் தொடர்ந்து உரையாடலில் ஈடுபடுவது அவசியம்" என அமலியன் வலியுறுத்தினார். "வணிக உறவுகளை மேம்படுத்த பிராந்திய பங்காளிகள் மற்றும் சங்கங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம் நமது இருதரப்பு வர்த்தகத்தை மேலும் மேம்படுத்த வேண்டும். 2023இற்கு அப்பால் GSP+ சலுகைகளைப் பெறுவது நமது தொழில்துறையின் வளர்ச்சிக்கு முக்கியமானது" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், JAAFஇன் முன்னாள் தலைவர் ஏ.சுகுமாரன், "எதிர்வரும் ஆண்டில் தொழில்துறை தங்கள் விநியோகச் சங்கிலியில் இடையூறுகளைச் சந்திக்கும். தொழில்துறையின் தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களுக்கு நீண்டகால தீர்வுகளை உருவாக்குவதற்கு தொழில் பங்குதாரர்களிடையே தொடர்ச்சியான ஈடுபாடு ஒரு முன்நிபந்தனையாகும்."

"தொற்றுநோய் எங்கள் பரந்த உலகளாவிய விநியோகச் சங்கிலியின் பாதிப்பை உள்நாட்டில் அதிகரித்துள்ளது. இருப்பினும், தேசிய விநியோகச் சங்கிலிகளைப் புறக்கணித்து சர்வதேசமயமாக்குவதே சரியான தீர்வு என்று நாங்கள் நம்பவில்லை. நாம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சனைகளில் கூட உலகமயமாக்கலில் ஒப்பீட்டு நிதி நன்மைகள் உள்ளன. எவ்வாறாயினும், உலகளாவிய தளத்தில் திறம்பட போட்டியிடுவதற்கு இலங்கை நிறுவனங்களின் திறன் அடையாளம் காணப்பட வேண்டும் மற்றும் திறன் மேம்பாட்டை துரிதப்படுத்தக்கூடிய பகுதிகள் அவசியம்."


"குறைவான பரிவர்த்தனைகள் மற்றும் அதிக கூட்டு விநியோக சங்கிலி உறவுகளில் முதலீடு செய்வது முக்கிய தீர்வாகும். இது எங்கள் தொழில்துறையில் பல்வேறு சவால்களை சமாளிக்கும் திறன்கொண்ட - மீள்திறன்கொண்ட விநியோகச் சங்கிலிகளை உருவாக்குகிறது. அதன் வளர்ச்சியானது நாம் வாங்குபவர்களுடன் நாம் வைத்திருக்கும் நீண்டகால உறவுகளைப் பொறுத்தது. அதற்கு ஒரு சமநிலையான மூலோபாயம் அவசியம்" என கூறினார்.

AGMஇல், JAAFஇன் புதிய செயற்குழு 2022/2023இற்காக நியமிக்கப்பட்டது.

அதன் தலைவர் ஷராட் அமலியன், துணைத் தலைவர்கள் சைபுதீன் ஜாஃபர்ஜி மற்றும் பீலிக்ஸ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் தலைவர்கள் நோயல் பண்ரியாதிலக்க, அசிம் இஸ்மாயில் மற்றும் அஷ்ரப் உமர், முக்கிய நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளான கைத்தறி மற்றும் ஆடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் புபுது டி சில்வா, சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர் சங்கத்தின் ஜதீந்தர் பீலா, இலங்கை ஆடை ஏற்றுமதியாளர் சங்கத்தின் அருண் ஹைட்ராமணி மற்றும் இலங்கை ஆடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் வில்ஹெல்ம் எலாயஸ் ஆகியோர் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மகேஷ் ஹைட்ராமணி, மாணிக் சந்தியப்பிள்ளை, அஜித் விஜேசேகர, ஜாஃபர் சத்தார், அனிஸ் சத்தார், ரெஹான் லக்கானி மற்றும் மஹிகா வீரகோன் ஆகியோர் செயற்குழுவின் ஏனைய உறுப்பினர்களாவர்.

இதற்கிடையில் JAAFஇன் ஸ்தாபக பொதுச் செயலாளரான டுல்லி குரே தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்று எதிர்காலத்தில் ஆலோசகராக பணியாற்றுவார். அவருக்குப் பதிலாக இலங்கை ஆடை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் தொழிற்றுறையில் அனுபவமிக்கவருமான ஜொஹான் லோரன்ஸ் நியமிக்கப்படவுள்ளார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டமே இந்த மண்ணில் தொண்ணூறாயிரம் விதவைகள் உருவாகக் காரணம்

## சிறிதரன் எம்.பி. காட்டம்



(சாவகச்சேரி நிருபர்)

பயங்கரவாதத் தடைச் சட்டமே இந்த மண்ணில் தொண்ணூறாயிரம் விதவைகள் உருவாகக் காரணம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் (19) சனிக்கிழமை விழுது சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெற்ற "நீதிக்கான எங்களின் குரல்" நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அம்பிகா சற்குணநாதன் சில உரிமைகள் தொடர்பில் தமிழர்களுடைய வாழ்வியல் தொடர்பில் எம்மோடு இணைந்து குரல் கொடுத்த காரணத்துக்காக இன்று இலங்கை அரசால் அவர் விமர்சிக்கப்படுகின்றார். அரசாங்கம் ஒரு தனிநபருக்காக ஒரு பெண்ணுக்கு எதிராக அறிக்கைவிடும் அளவுக்கு இலங்கை மாறிவிட்டது. இது ஒரு நெருக்கடியான காலத்துக்குள் நாம் வாழ்ந்து வருகிறோம் என்பதனை பறைசாற்றி நிற்கிறது.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய சரிவு ஏற்பட்டுள்ளது. மின்சாரத் தடை, குடும்பப் பெண்கள் எரிவாயு உள்ளிட்ட பொருட்கள் வாங்க கியூவில் நிற்கும் நிலை உள்ளிட்ட பல நெருக்கடிகள் இலங்கையில் உள்ளன. சிங்கள மக்கள் இப்போதுதான் அதை உணர்கிறார்கள். நாங்கள் முப்பது ஆண்டுகளாக இதனையெல்லாம் அனுபவித்தவர்கள். ஒரு சவர்க்காரத்தை, எரிபொருளை கண்முன் காணாத நாட்களில் வாழ்ந்தவர்கள் நாங்கள். இங்குள்ள மக்களால் வாழ்வாதாரம் மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக என்னிடம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2015-2019 காலப்பகுதியில் பல வாழ்வாதாரத் திட்டங்களை முன்னெடுத்திருந்தோம்.

கிராமங்களில் சிறிய கைத்தொழில் நிலையங்களை உருவாக்கி மக்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்க வழிவகுத்திருந்தோம்.

தற்போதும் பல கோரிக்கைகள், கருத்திட்டங்களை முன்வைத்துள்ளோம்.

அத்துடன், மணல் அகழ்வு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பரவலாக இடம்பெறுகிறது. இங்கிருந்து தென் பகுதிக்கு மணல் கொண்டுசெல்லப்படுகிறது. வேலியே பயிரை மேய்வது போன்று சம்பந்தப்பட்ட தரப்பு மணல் கடத்தலுக்கு உறுதுணையாக செயற்படுகின்றனர். அவர்களுடைய வாகனங்களும் மணல் அகழ்வில் பங்காளர்களாக ஈடுபடுத்தப்படுகிறது. அதன் காரணமாகவே மணல் அகழ்வை முழுமையாக கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆனால், இதனை இப்படியே விட்டுவிட முடியாது. சட்ட ரீதியாக இவ்விடயத்தை அணுக முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கௌதாரிமுனை மண்ணினை சில அரசியல் பிரதிநிதிகள் கொள்ளையிட முயற்சித்தபோது கிளிநொச்சி நீதிமன்றத்தில் சுமந்திரன் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு ஒன்றரை வருட காலமாக அங்கிருந்து ஒரு லோட் மணலை கூட ஏற்ற முடியாத அளவுக்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய இடங்களிலும் இவ்வாறு சட்ட அணுகல் மூலம் மணல் அகழ்வை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம் – என்றார்.

# பாசையூர் கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அடையாள விளக்கு





(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் - பாசையூர் கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அடையாள விளக்கு கோபுரத்தின் செயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்துவைத்தார்.

நேற்று முன்தினம் (19) மாலை இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கச்சதீவு திருவிழாவில் பக்தர்கள் அனுமதிப்பது தொடர்பில் ஊடகங்கள் கேள்வியெழுப்பியபோது இன்னும் சில தினங்களில் ஜனாதிபதியுடன் கதைத்து முடிவை அறிவிப்பேன் என்று அமைச்சர் தெரிவித்தார்.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# யாழிலுள்ள மதஸ்தலங்களில் விசேட வழிபாடுகளை மேற்கொண்டார் மைத்ரி





(யாழ். நிருபர்)

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்ரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணத்தின் மதஸ்தலங்களுக்கு விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நல்லூர் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர் பின்னர் ஆரியகுளம் நாகவிகாரைக்குச் சென்று வழிபட்டார்.

அவருடன் நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

நேற்று மாலை பருத்தித்துறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட மாநாடு இடம்பெறவிருந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் இடம்பெற்ற இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டி



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டுவண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில் மாபெரும் இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை(19) மாலை மன்னார் திருக்கேதீஸ்வரம் இரட்டை மாட்டுவண்டி திடலில் இடம்பெற்றது.

குறித்த இரட்டை மாட்டுவண்டி சவாரிப் போட்டியானது A, B, C, D, E ஆகிய 05 பிரிவுகளில் இடம்பெற்றது.

இப்போட்டியில் வடமாகாணத்திலிருந்து மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்தும் காளைகள், போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த போட்டியின்போது 40 சோடிக் காளைகள் பங்குபற்றியிருந்தன.

இதன்போது வெற்றிபெற்ற காளைகள் மற்றும் உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கசூரினா கடலில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

(யாழ். நிருபர்)

மதுபோதையில் கடலில் குளித்த முதியவர் அலையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளாரென ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

குளியாப்பிட்டியை சேர்ந்த அன்ரன் ஜேக்கப் (வயது - 57 ) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவரென பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தொழில் நிமித்தம் குளியாப்பிட்டி பகுதியிலிருந்து மண்டைதீவு பகுதிக்கு வந்து, தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சிலருடன் முதியவர் காரைநகர் கசூரினா கடற்கரையில் குளித்துள்ளார். அவர் அலையில் சிக்கிக் கொண்டாரெனத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் அவர் ஏனையோரால் காப்பாற்றப்பட்டு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் ஏற்கனவே உயிரிழந்து விட்டாரென மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# அராலியில் சங்கிலி அறுத்த பெண் கைது

(யாழ். நிருபர்)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவிட்டு, அராலி வீதியில் பஸ்ஸுக்காக காத்திருந்த பெண் ஒருவரது தங்கச்சங்கிலி நேற்று முன்தினம் பெண் ஒருவரால் அறுத்துச் செல்லப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக்கோட்டை பொலிஸார், துணைவி பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணொருவரை அறுக்கப்பட்ட சங்கிலியுடன் கைது செய்தனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியாவிலுள்ள முன்னாள் அரசியல் கைதியிடம் மே 18இல் நினைவுகூர்ந்தவர்களின் பெயர் விபரங்களை கோரியது ரி.ஐ.டி.

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் வசித்துவரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரிடம், கடந்த மே 18 இல் உங்களுடைய வீட்டில் யாரை நினைவேந்தல் செய்தீர்கள் என்ற பெயர் விபரங்களை தாருங்கள் என்று பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் செல்வநாயகம் அரவிந்தன் (ஆனந்தவர்மன்) என்ற முன்னாள் அரசியல் கைதியிடமே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் விபரம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணை சம்பந்தமாக 2021.05.18ஆம் திகதி இனப்படுகொலை தினத்தை நினைவூட்டும் முகமாக அத்தினத்தில் விளக்கு வைத்து இறந்தவர்களுக்கு சமர்ப்பணம் செய்த காரணத்துக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்கிய போது, தனது குடும்ப அங்கத்தவர்களும் நெருங்கிய உறவினர்களும் யுத்தத்தின் மூலம் இறந்து விட்ட காரணத்துக்காகவே நான் இந்த தினத்தில் விளக்கேற்றி அஞ்சலி சமர்ப்பணம் செய்தேன் என்று வாக்குமூலம் கொடுத்து, அவ்வாக்குமூலத்தின்போது யுத்தத்தில் இறந்த குடும்பத்தினரதும் உறவினர்களினதும் விபரங்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கையளிப்பேன் எனவும் கூறியிருந்தீர்கள்.

ஆகையால், அப்பெயர்ப் பட்டியலை நாளை 22ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இறந்து போனவர்களின் முழு விபரங்களையும் கையளிக்குமாறு தகவல் தருகின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மே 18ஆம் திகதி குறித்த முன்னாள் அரசியல் கைதி தனது வீட்டில் இறந்தவர்கள் நினைவாக நீதிமன்ற கட்டளைகளை மீறாத வகையில் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 5 மாதக் குழந்தையுடன் கணவன் தலைமறைவு; மனைவி முறைப்பாடு

(யாழ். நிருபர்)

நீதிமன்றத்தின் இடைக்கால கட்டளைக்கமைவாக, 05 மாதக் குழந்தையை தன்னிடம் ஒப்படைக்காமல் கணவன் தலைமறைவாகிவிட்டாரென மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கணவன் - மனைவி முரண்பாடு காரணமாக, 05 மாதக் குழந்தையை கணவன் தன்னுடன் கொண்டுசென்றுள்ளார். இது தொடர்பில் மனைவி இளவாலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மல்லாகம் நீதிமன்றுக்கு விடயம் பாரப்படுத்தப்பட்டது. நீதிமன்றில் குழந்தையின்றி முன்னிலையான கணவனிடம், தாய்ப்பால் குடிக்கும் குழந்தை என்பதால் மனைவியிடம் குழந்தையை ஒப்படைக்குமாறு இடைக்காலக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னரே கணவன், குழந்தையுடன் தலைமறைவாகி விட்டாரெனத் தெரிவித்து மனைவியால் முறைப்பாடு மேற்கொள் ளப்பட்டுள்ளது.

# ஆசிரிய கலாசாலையில் திருவள்ளுவர் குருபூசை



(யாழ். நிருபர்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மாசி உத்திர நாளையொட்டி திருவள்ளுவர் குருபூசை கடந்த வெள்ளிக்கிழமை (18) கலாசாலையிலுள்ள திருவள்ளுவர் உருவச்சிலை முன்பாக நடைபெற்றது.

தமிழ் சிறப்புக் கற்கை ஆசிரிய மாணவர் இரா. நிசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஆசியுரையை கலாசாலை அதிபர் வீ. கருணலிங்கமும் வாழ்த்துரையை பிரதி அதிபர் ச. லலீசனும் நிகழ்த்தினர். ஆசிரிய மாணவர்களின் உரைகளும் இடம்பெற்றன.

நிகழ்வில் குருபூசையை முன்னெடுத்த தமிழ்ச் சிறப்பு கற்கைநெறியைச் சேர்ந்த ஆசிரிய பயிலுநர்களுக்கு பிரதி அதிபரின் அன்பளிப்பாக புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

# சௌபாக்கியா பற்றிக் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் இராஜாங்க அமைச்சர் தயாசிறியால் யாழில் திறந்துவைப்பு


















(யாழ். நிருபர்)

சௌபாக்கியா பற்றிக் உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையம் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவினால் நேற்று யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைத்திட்டத்தின்படி நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதனின் "என் கனவு யாழ்" எண்ணக்கருவில் குறித்த விற்பனை நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பிரதம விருந்தினராக கலந்துகொண்டு விற்பனை நிலையத்தினை திறந்துவைத்தார்.

நிகழ்வில் நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "Cultural சௌபாக்கியா" கலை நிகழ்ச்சியை பார்வையிட ஜனாதிபதி, பிரதமர் விஜயம்





வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் தனித்துவமான இடங்களை மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்ட "Cultural சௌபாக்கியா" கலாசாரக் கலை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பார்வையிட்டுள்ளனர்.

இலங்கையின் பெருமிதம் மற்றும் கலாசார அடையாளத்தைப் பாதுகாத்தல், வெளிநாட்டுத் தொடர்புகளைப் பலப்படுத்துதல், தனித்துவமான இடங்களை மேம்படுத்துதல் மற்றும் கலாசார பாரம்பரியத்தை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடன், புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, தேசிய பாரம்பரிய கலை மற்றும் கிராமியக் கலை விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சு மற்றும் அவற்றோடு ஒன்றிணைந்த நிறுவனங்கள் இணைந்து, இந்தக் கலாசாரக் கலை நிகழ்ச்சி மற்றும் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன.

இராஜதந்திரப் பிரதிநிதிகளின் பங்கேற்புடனான இந்தக் கலாசாரக் கலை நிகழ்ச்சி, தாமரைத் தடாக மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கில் நேற்று முன்தினம் (19) மாலை இடம்பெற்றது.

இலங்கையானது, இதுவரையில் 48 நாடுகளுடனான கலாசார ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் 48 இல் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கலாசார அமைச்சுக்குரிய நிறுவனங்கள், மத்திய நிலையங்கள் மற்றும் ஜனகலா கேந்திர நிலையத்தில் நடனம் பயிலும் மாணவ, மாணவியரின் நடன நிகழ்ச்சிகளும் இதன்போது அரங்கேற்றப்பட்டன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்கள், கலாசார விடயங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# தமிழ் - சிங்கள புத்தாண்டு காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருட்களுக்கு நியாயமான விலை

## லசந்த அலகியவன்ன தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

"அரிசி, சீனி உட்பட நுகர்வுப் பொருட்களுக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு மற்றும் பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டுள்ளன. ஏனைய பிரச்சினைகளும் விரைவில் தீர்க்கப்படும். அந்தவகையில் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும்." - என்று இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (20) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காக நிதி அமைச்சர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது.



அந்தக் குழு வாராந்தம்கூடி நிலைமைகளை சீர்செய்துவருகின்றது.

நாட்டில் கடந்த காலங்களில் இருந்த முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. அரிசி, சீனி மற்றும் சமையல் எரிவாயுவுக்கு இருந்த தட்டுப்பாடு நிலை சரிசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பொருட்களுக்கு இருக்கும் தட்டுப்பாட்டு நிலையும் சீர்செய்யப்படும். எனவே, எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் நியாயமான விலைக்கு பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே செயற்பட்டுவருகின்றோம்.

பெருந்தோட்ட மக்களுக்கு தற்போது மானிய விலையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது சம்பந்தமாகவும் ஆராயப்படும்.

தேயிலை ஏற்றுமதிமூலம் எமக்கு அந்நிய செலாவணி வருகின்றது. உலக சந்தையில் சிறந்த கேள்வி உள்ளது. இதற்கு பெருந்தோட்டத் தொழிலாளர்களே பங்களிப்பு வழங்கிவருகின்றனர்.

அதேவேளை, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, சந்திரிகா அம்மையார், மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்ரிபால சிறிசேன போன்ற ஜனாதிபதிகளின்கீழ் தொண்டமான் குடும்பம் செயற்பட்டுள்ளது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோர் மலையக மக்களுக்கு ஆற்றிய சேவைகளை மறந்துவிடமுடியாது. ரமேஷ் உள்ளிட்டவர்கள் அதற்கு உறுதுணையாக நின்றனர். தற்போது சிறந்த படித்த இளம் தலைவராக ஜீவன் தொண்டமான் செயற்பட்டுவருகின்றார் - என்றார்.

# அப்துல் ஹமீட் ஷோமன் பொது நூலகத்துக்கு இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் அன்பளிப்பு



ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்டுள்ள கலாசார இராஜதந்திர முயற்சிகளை மேம்படுத்தும் வகையில், இலங்கையின் 74ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் வகையில், இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட 902 சிறுவர் புத்தகங்களின் தொகுப்பு, அம்மானில் உள்ள அப்துல் ஹமீட் ஷோமன் பொது நூலகத்தின் சிறுவர் பிரிவுக்கு அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பிரபல எழுத்தாளர்களான காலஞ்சென்ற சிபில் வெத்தசிங்க, குசும் திசாநாயக்க, ஜே.பி. திசாநாயக்க உள்ளிட்ட பலரால் எழுதப்பட்ட சிறுவர் நூல்களுக்காக நூலகத்தில் தனியான இலக்கியப் பிரிவு அமைக்கப்பட்டிருக்கும். இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, தூதுவர் ஷானிகா திசாநாயக்க, இலங்கைத் தொகுப்பில் மேலும் பல புத்தகங்களை தூதரகம் சேர்ப்பிக்கும் என அங்கிருந்த அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

மேலும் நூலகத்துக்கு விஜயம் செய்யும் ஜோர்தானிய மக்களிடம் இலங்கை பொம்மைகளை மேம்படுத்துவதற்காக, டி.எஸ்.எல். லங்காவினால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களால் செய்யப்பட்ட பொம்மைகளை இலங்கைப் பிரிவில் வைப்பதற்காக தூதரகம் வழங்கியது.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பம்



(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மானிய விலையில் கோதுமை மா வழங்கும் திட்டம் நேற்று (20) ஆரம்பமானது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஷ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கூட்டுறவுச் சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் பாவனையாளர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன ஆகியோர் கலந்து கொண்டார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 80 ரூபா விலையில் மாதாந்தம் 15 கிலோ கோதுமை மாவை வழங்குவதற்கு நிதி அமைச்சு தீர்மானம் எடுத்திருந்தது. இதற்கு கடந்த வாரம் அமைச்சரவை அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே மேற்படி திட்டம் நேற்று (20)ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் ஆரம்பகட்டமாக நுவரெலியா – வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் வைபவ ரீதியாக இடம்பெற்றது. இதில் குறித்த தோட்டத்தில் 71 குடும்பங்களுக்கு இந்த கோதுமை மா வழங்கப்பட்டது.

அடுத்த கட்டமாக எதிர்வரும் காலங்களில் ஏனைய தோட்டங்களுக்கும் கோதுமை மா வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவன்ன, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ரமேஷ்வரன், தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர், நுவரெலியா மாவட்ட செயலாளர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவர் அனுஷியா சிவராஜா, முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்கள், கொட்டகலை, நுவரெலியா, அக்கரப்பத்தனை, நோர்வூட் ஆகிய பிரதேச சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள், கட்சி முக்கியஸ்தர்கள், அரச அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்ற பணியாளர்கள் எட்டுப் பேருக்கு கொரோனா

நாடாளுமன்ற பணியாளர்கள் எட்டு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை கடந்த வெள்ளிக்கிழமை (18) உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாடாளுமன்றத்தில் கடந்த சில தினங்களில் மாத்திரம் நூற்றுக்கும் அதிகமான பணியாளர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்ரிஜன் பரிசோதனையிலேயே இவர்கள் எட்டு பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது 32 பணியாளர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, நாடாளுமன்றத்தில் இதுவரை 54 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





எம்.வை.எம் நஸீர் எழுதிய "கல் எலிய முஸ்லிம் கிராம வரலாறும் பரம்பரையும்" நூல் வெளியீட்டு விழா நேற்று கல் எலிய தௌபீக்ஸன்ஸ் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் எம்.வை.எம் நஸீரிடமிருந்து பெற்றுக்கொள்வதையும் அருகில் விசேட அதிதியாக கலந்து கொண்ட எம்.எம். முஹம்மத் (நளீமி) தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சிறப்பித்த ஏ.எச்.எம். கலீல், எம்.ஏ.ஏ. நூறுல்லாஹ் (நளீமி) ஆகியோரையும் காணலாம்.

# மலே - கொம்பனித்தெரு வரையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் மேம்பால நிர்மாணத்தின் விசேட வேலைத்திட்டம்

மலே வீதியிலிருந்து கொம்பனித்தெரு புகையிரத நிலையம் வரை நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்தின் அடிப்பகுதியில் வாகனத் தரிப்பிடம் மற்றும் வாகன நிறுத்துமிடங்களின் இருபுறமும் கொள்கலன்களுக்கான சேவை பாதைகள் நிர்மாணிக்கப்படும். இதேவேளை, உத்தரானந்த மாவத்தையில் நிர்மாணிக்கப்படும் மேம்பாலத்துக்கு சமாந்தரமாக வீதியின் இருபுறங்களிலும் நடைபாதைகள் அமைக்கப்படும் என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு புறநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை வரை நிர்மாணிக்கப்படும் இரட்டை மேம்பால பணிகளை நெடுஞ்சாலைகள் அமைச்சரும் ஆளும் தரப்பு பிரதம கொறடாவுமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அண்மையில் பார்வையிட்டார்.

மலே வீதியை அணுகும் நீதிபதி அக்பர் மாவத்தை வரையான மேம்பாலம், கொம்பனித்தெரு ரயில் கடவையை கடக்கும்போது 5.3 மீற்றர் உயரத்துக்கு



நிர்மாணிக்கப்படும். இந்த விஜயத்தின்போது, மலே வீதியிலிருந்து கொம்பனித்தெரு புகையிரத நிலையம் வரையிலான மேம்பாலத்தின்கீழ் வாகனத் தரிப்பிடத்தை நிர்மாணிப்பது தொடர்பில் அமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார். அத்துடன், வாகனத் தரிப்பிடம் நிர்மாணிக்கப்படும் வீதியின் இருபுறங்களிலும் கொள்கலன் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கான சேவை பாதைகள் அமைக்கப்படும் என திட்டத்துக்கு பொறுப்பான பணிப்பாளர் நலிந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உத்தரானந்த மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மேம்பாலத்துக்கு சமாந்தரமாக வீதியின் இருபுறங்களிலும் நடைபாதைகள் அமைப்பது தொடர்பிலும் அமைச்சர் இதன்போது கவனம் செலுத்தினார்.

நீதிபதி அக்பர் மாவத்தையிலுள்ள மேம்பாலம் 207 மீற்றர் நீளமும் 8.4 மீற்றர் அகலமும் கொண்டது. உத்தரானந்த மாவத்தையில் அமைக்கப்படும் மேம்பாலம் 396 மீற்றர் நீளம் கொண்டது. இதன் அகலம் 9.4 மீற்றர்களாகும். இரண்டு மேம்பாலங்களையும் இணைக்கும் வகையில் அமைக்கப்படும் மேம்பாலத்தின் நீளம் 310 மீற்றர்களாகும். இதன் அகலம் 6.9 மீற்றர். இதற்கு 5,270 மில்லியன் ரூபா செலவிடப்படும்.

அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அத்தலுவகே, திட்டத்துக்குப் பொறுப்பான பணிப்பாளர் நலிந்த ரத்நாயக்க மற்றும் நிர்மாண ஒப்பந்ததாரரின் பிரதிநிதிகள் குழுவும் இதன்போது கலந்துகொண்டன.

# கொழும்பில் இடம்பெற்ற சுயதொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கான கண்காட்சி







(ஏ.எஸ்.எம்.ஜாவித்)



கல்வியை முடித்துவிட்டிருக்கும் மாணவிகள் உட்பட சுயதொழிலில் ஆர்வமுள்ளவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை வழங்கிவரும் டெலண்ட் ஹப் அகடமியின் வருடாந்த கண்காட்சி நேற்று முன்தினம் (19) கொழும்பு ரமடா ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சி அந்த நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ் தலைமையில் இடம்பெற்றது. விசேட அதிதிகளாக தெமடகொட ஹைரியா பாடசாலையின் அதிபர் நஸீரா ஹஸனார் கலந்து கொண்டதுடன் பிரதமரின் ஊடக செயலாளர் ஜே.யோகராஜா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கேக் உள்ளிட்ட உணவு வகைகள் மற்றும் ஆடைத் தயாரிப்புகளில் தொழிற் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட சுமார் 210 பேரின் தயாரிப்புப் பொருட்கள் கண்காட்சிக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அதிக திறமைகளைக் காட்டிய கவர்ச்சிகரமான சிறந்த தயாரிப்புகள் பரிசில்களுக்காக தெரிவு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் ஆட்சி மாற்றத்துக்கு தயாராக வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

"மலையக மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாக மட்டும் அல்ல, சமூக ரீதியாகவும் நாம் ஒன்றுபடவேண்டும். கடந்த காலங்களில் எமது மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. இதனால்தான் சமூகம் பின்தங்கிய நிலையில் இருந்தது. எனவே, மக்கள் ஆட்சி மாற்றத்துக்கு தயாராக வேண்டும்." - என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பழனி திகாம்பரத்தின் அமைச்சின் காலகட்டத்தில் ஹட்டன் மல்லியப்பு புருட்ஹில் பகுதியில் ஏற்படுத்தப்பட்ட புதிய வீடமைப்புத் திட்டத்துக்கான மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது.

மகிழ்ச்சி இல்லம் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக பழனி திகாம்பரம், சிறப்பு அதிதியாக மயில்வாகனம் உதயகுமார், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான சோ.சிறீதரன், முத்தையா ராம், மகிழ்ச்சி இல்லத்தின் முகாமையாளர் பாஸ்டர் பெருமாள் ரவீந்திரன்





எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"மலையக மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசியல் ரீதியாக மட்டும் அல்ல, சமூக ரீதியாகவும் நாம் ஒன்றுபடவேண்டும். கடந்த காலங்களில் எமது மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன. இதனால்தான் சமூகம் பின்தங்கிய நிலையில் இருந்தது. எனினும், தலைவர் திகாம்பரம் அமைச்சரான பின்னர் மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தார். தனி வீடுகளை அமைத்துக்கொடுத்தார். நூலகங்கள் அமைக்கப்பட்டன. கலாசார மண்டபங்கள் நிறுவப்பட்டன. காணி உரிமை கிடைத்தது. எனவே, திகாம்பரம் போன்ற தலைவர்கள் எமக்கு கிடைத்தமை வரமாகும். எனவே, அவர் வழியில் பயணித்து மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

மலையக மக்களுக்கு பிரஜாஉரிமை கிடைக்கப்பெற்றிருந்தாலும் உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. அந்தவகையில் வீட்டுரிமை மற்றும் காணி உரிமையை திகாம்பரமே பெற்றுக்கொடுத்தார். ஆட்சிகள் மாறினாலும் மக்களுக்கான சேவைகள் மாறக்கூடாது. ஆனால் இந்த ஆட்சியின்கீழ் மலையக மக்களுக்கு எதுவும் நடக்கவில்லை. திகாம்பரம் கட்டிய வீடுகள் குருவிக்கூடு என்றார்கள். இன்று அதைக்கூட கட்டுவதில்லை. தேர்தல் காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஆளுந்தரப்பால் மீறப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்துக்கு கிடைத்த பிரதேச செயலகங்கள்கூட பறிக்கப்பட்டுள்ளன. உப அலுவலகங்களே திறக்கப்படுகின்றன. கிடைத்த உரிமையையும் இழந்துள்ளனர். இப்படியான தலைமைத்துவம் வேண்டுமா? எனவே, எமது கஷ்ட நஷ்டங்களை புரிந்த தலைவர்தான் எமக்கு வேண்டும்.

நாட்டு மக்களின் இதயத்துடிப்பை அறிந்தவர்தான் சஜித். மலையக மக்களின் இதயத்துடிப்பை தெரிந்தவர்தான் திகாம்பரம். இப்படியான தலைவர்களே நாட்டை ஆள வேண்டும்" - என்றார்.

# பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் பிரிவினைவாதத்தை முறியடிக்கவேண்டிய பொறுப்பு இன்று எமக்குள்ளது

## பல்கலைக்கழகச் சமூகத்திடம் கருத்துபெறும் நிகழ்வில் ஞானசார தேரர் எடுத்துரைப்பு

★ நாட்டுக்குள் பொதுச் சட்டத்தை ஏற்படுத்தும் முயற்சிக்குப் பாராட்டு

★ கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முழு ஆதரவு

★ செயலணி முன் கருத்துத் தெரிவிக்க பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் ஆர்வம்

உலகில் எந்தவொரு நாட்டிலும் நடைமுறைப்படுத்தப்படாத ஒரு கருத்தை கருப்பொருளாகக்கொண்டு, நாட்டுக்குள் பொதுச் சட்டத்தை நிறுவுவதற்கான அடித்தளத்தை அமைக்கும் அரசாங்கத்தின் முயற்சி பாராட்டுக்குரியது - என பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் முனைவர்கள் தெரிவித்துள்ளனர்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, பல்கலைக்கழகச் சமூகத்தின் கருத்துகளைக் கேட்டறியும் நிகழ்வு, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, ருஹுணு, ஜயவர்தனபுர, யாழ்ப்பாணம், தென்கிழக்கு, பேராதனை, களனி, ரஜரட்ட, வயம்ப உள்ளிட்ட 18 பல்கலைக்கழகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் அறிஞர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இலங்கைக்குள் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற எண்ணக்கருவைச் செயற்படுத்துவது தொடர்பில் பல்வேறு தரப்பினர் கொண்டிருக்கும் கருத்துகள் மற்றும் யோசனைகளை அவதானத்துக்குட்படுத்தி, அவற்றை ஆராய்ந்த பின்னர் நாட்டுக்குள் செயற்படுத்தக்கூடிய கருத்துருவைச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வால் இந்த ஜனாதிபதிச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்காக, பல்கலைக்கழகச் சமூகத்தின் கருத்துகள் மற்றும் யோசனைகள் பலவும் இதன்போது முன்வைக்கப்பட்டதோடு, இந்தச் செயலணியினால் இதுவரை நடத்தப்பட்ட சந்திப்புகளில், இன்றைய சந்திப்பு மிகவும் முக்கியத்துவமிக்கதாக அமைந்திருந்ததென்று, செயலணியின் தலைவர் ராஜகீய பண்டித வணக்கத்துக்குரிய கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

வளமான மண், வளமான நிலம், சுபீட்சம், நாகரீகம் மற்றும் கலாசாரத்தை மதிக்கும் ஒரு சுதந்திர நாடொன்று எமக்கு அன்று உரித்தாக இருந்தது. ஏகாதிபத்தியவாதிகள் எங்களிடமிருந்து பறித்த அந்த நாட்டை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மீண்டும் கோர வேண்டும்.

களத்திலுள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்வு காண்பதற்கான புதிய அணுகுமுறையாகவே இந்தச் செயலணி முன்னோக்கி நகர்கின்றது. நல்ல நோக்கங்களை எழுத்துகளில் மாத்திரம் வைத்திருப்பதில் பயனில்லை. அவற்றை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புகளைச் செய்யவேண்டும். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும், பிரிவினைவாத எண்ணத்தை முறியடிக்க வேண்டிய பொறுப்பு இன்னும் நமக்குள்ளது.

அதற்காக, அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் இணைந்துப் பயணிக்க குழு தயாராகவே இருக்கிறது. சர்வதேச சட்டங்களுடன் உள்நாட்டையும் இணைப்பது தேசிய தேவையாக அடையாளம் காணப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு சமூகத்துக்கோ அல்லது குறிப்பிட்ட சிலருக்கோ அநீதி இழைக்கும் வகையில் சட்டத்தில் முரண்பாடுகள் இருந்தால், அவற்றை உடனடியாக நீக்க வேண்டுமென்று, கொழும்பு சட்ட பீடத்தின் பேராசிரியர் வசந்தா செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு என்பது ஒரு மாய ஆவணமல்ல. அடிப்படைச் சட்டங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதைக் கருத்திற்கொண்டு, ஒரே சட்டத்தால் ஆளப்படும் நாட்டைக் கட்டியெழுப்பவேண்டியது அவசியம்.

பல்வேறு இனங்கள், கலாசாரங்கள் மற்றும் மொழிகள் காணப்படுவதென்பது, ஒரு நாட்டின் பலமாகவும் அந்நாட்டின் பெறுமதியாகவும் கருதப்படுகிறது. அதனால், எந்தவோர் இனத்தைச் சார்ந்த மக்களையும் புண்படுத்தாத சமூக நீதி மற்றும் சமத்துவத்துக்காக அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் தேவை எழுந்துள்ளது.

அத்துடன், 'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான வேலைத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்காக கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினது ஒத்துழைப்பை முழுமையாக வழங்குகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

செயலணியின் முன்னால் கருத்துத் தெரிவிப்பதற்கு பல்கலைக்கழக அறிஞர்கள் பெரும் ஆர்வம் காட்டியுள்ளனர்.



மாறிவரும் உலகை எதிர்கொள்ளும் வகையில் சட்டமும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்று இதன்போது எடுத்துரைத்துள்ள அவர்கள், அதற்குத் தேவையான பொறிமுறையானது, இந்தச் செயலணி மூலம் முன்வைக்கப்படும் எனத் தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான பயணத்தில், போதிய சட்ட அறிவு இல்லாதது ஒரு பிரச்சினையாக உள்ளதென்று எடுத்துக்காட்டிய பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய கல்விக் கொள்கை மூலம் அதைச் சரிசெய்ய வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ முதுகலை நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் சமத் தர்மரத்ன, ருஹுணு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கயத்திரி விஜேசுந்தர, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளர் டொக்டர் ஜே.எம்.எஸ்.பீ.ஜயசுந்தர, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை பிரிவின் அரசியல் விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியர் எம்.ஏ.எம்.ஃபவுசர், வயம்ப பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அசங்க பல்லேகெதர, வவுனியா பல்கலைக்கழகத்தின் துணை விரிவுரையாளர் கயான் பண்டார, பேராசிரியரான சலீகா பாருக், கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் பீடாதிபதி சம்பத் புஞ்சிஹேவா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் நிர்மால் தேவசிறி, பேராசிரியர் சர்வேஸ்வரன், சிரேஷ்ட பேராசிரியர் ஹலீம் அபூபக்கர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியர் சரண்யா சாமித்தம்பி, களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எச்.எம்.நவரத்ன பண்டா ஆகியோரும் இதன்போது கருத்துத் தெரிவித்ததோடு, சூம் தொழில்நுட்பத்தின் ஊடாகவும், பேராசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' தொடர்பான ஜனாதிபதிச் செயலணியானது, நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில், கருத்துகள் மற்றும் யோசனைகளைப் பெற்று வருகின்றது. மேலும், அச்செயலணியைத் தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கிக்கொண்ட பல்வேறு அமைப்புகள் மற்றும் அவற்றின் உறுப்பினர்கள், பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள செயலணியின் அலுவலகத்துக்குச் சென்று, தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

செயலணியின் உறுப்பினர்களான பேராசிரியர் சாந்தி நந்தன விஜேசிங்க, சிரேஷ்ட விரிவுரையாளர் சுமேத வீரவர்தன, சட்டத்தரணி சஞ்ஜய மாரம்பே, சட்டத்தரணி இரேஷ் செனவிரத்ன, எரந்த நவரத்ன, பானீ வேவல, டொக்டர் சுஜீவ பண்டிதரத்ன, அசீஸ் நிசார்தீன் ஆகியோரும் செயலணியின் செயலாளர் ஜீவந்தி சேனாநாயக்கவும் கலந்துகொண்டுள்ளார்

# பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகருக்கும் இராணுவத் தளபதிக்கும் இடையில் சந்திப்பு





இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாருக் பூர்கி, ஹிலால்-ஐ-இம்தியாஸ், பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் ஷவேந்திர சில்வாவை அண்மையில் இராணுவத் தலைமையகத்தில் வைத்து சந்தித்தார்.

இருவருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இலங்கைக்கான பாகிஸ்தானின் புதிய உயர்ஸ்தானிகர் இரு நாடுகளுக்கும் இடையில் பல வருடங்களாக நிலவும் நட்புறவுகள் மற்றும் தற்போதைய பரிமாற்ற நிகழ்ச்சிகள் குறிப்பாக, இரு நாடுகளின் பயிற்சி பரிமாற்ற தொகுதிகளில் ஆயுதப்படைகளின் பங்கேற்புடனான நிகழ்ச்சிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜெனரல் ஷவேந்திர சில்வா புதிய உயர்ஸ்தானிகரின் நியமனத்திற்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், அவருக்கு சிறந்த ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதியளித்தார். இந்தச் சந்திப்பின்போது இருவருக்குமிடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டுள்ளன. பாகிஸ்தானின் உயர் ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மது சப்தாரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டார்.

# விடுதியிலிருந்து கீழே விழுந்த வெளிநாட்டுப் பிரஜை உயிரிழப்பு

(பதுளை நிருபர்)

எல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றின் இரண்டாம் மாடியிலிருந்து கீழே விழுந்து வெளிநாட்டுப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று (20) அதிகாலை குறித்த வெளிநாட்டுப் பிரஜை இவ்வாறு கீழே விழுந்து உயிரிழந்துள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

செக் நாட்டைச் சேர்ந்த 28 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த விடுதியில் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது இவ்வாறு கீழே விழுந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உயிரிழந்த நபர் எவ்வாறு கீழே விழுந்தார் என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த நபரின் உறவினர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை உயிரிழந்த நபருக்கு கொரோனா பரிசோதனை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கிராமிய வயல் நிலங்கள் – நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கு புதிய செயலாளர் நியமனம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி நிலையில், கடந்த வருடம் ஜூன் மாதம் 16ஆம் திகதி புத்தளம் மாவட்ட செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், புத்தளம் மாவட்ட செயலாளராக கடமை பொறுப்பேற்று



இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவினால் குறித்த இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளருக்கான நியமனக் கடிதம் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது.

இவர், கல்வி அமைச்சு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு என்பனவற்றின் மேலதிக செயலாளராக கடமையாற்றிவந்த எட்டு மாதங்களின் பின்னர் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக பதவியுயர்வு பெற்றுள்ளார் .

இவ்வாறு பதவி பெற்றுள்ள புத்தளம் மாவட்ட செயலாளர் நாளை 22ஆம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கான்ஸ்டபிள் கொலை விவகாரம்: சந்தேகநபர்களின் வீடுகளுக்கு தீ வைப்பு

தங்காலை , விதாரந்தெனிய பிரதேசத்தில் கடந்த 16ஆம் திகதி இரவு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரென சந்தேகிக்கப்படுவருக்கு சொந்தமான நிர்மாணிக்கப்பட்டுவரும் ஹோட்டல் மற்றும் சந்தேகநபரான பெண்ணொருவரின் வீட்டுக்கு இனந்தெரியாத நபர்களினால் தீ வைக்கப்பட்டுள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலைசெய்யப்பட்ட பொலிஸ் அதிகாரியின் வீட்டுக்கு அருகிலேயே இவ்வாறு தீ வைக்கப்பட்ட ஹோட்டல் மற்றும் வீடு அமைந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த தீ வைப்புச் சம்பவத்தால் பிரதான சந்தேகநபருக்குரிய ஹோட்டலின் அடித்தளம் மற்றும் கதவு, ஜன்னல்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதுடன், குளிர்சாதனப் பெட்டியும் சேதமடைந்துள்ளது. சந்தேகிக்கப்படும் பெண்ணின் வீட்டின் கூரையின் ஒரு பகுதி





சேதமைந்துள்ளதுடன் தீ வீட்டுக்குள்ளும் பரவலடைந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கண்டியில் இடம்பெற்ற உலக ஹிந்தி தின நிகழ்வு

(இக்பால் அலி)

கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட உலக ஹிந்தி தினம், கிராண்ட் கண்டியன் ஹோட்டலில் அண்மையில் நடைப்பெற்றது .

இந்நிகழ்வானது கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகர் கலாநிதி ஆதிரா எஸ்லின் வரவேற்புரையுடன் ஆரம்பித்ததுடன் பிரதம அதிதியாக பங்கேற்ற சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சம்பத் பெர்னாண்டோ மற்றும் கௌரவ விருந்தினர்களாக பங்கேற்ற சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மொழிகள் பீடத்தின் பீடத்தலைவர் கலாநிதி மகேஷ் ஹப்புகொட, பேராதெனிய பல்கலைக்கழகத்தின் நுண்கலை பீடத்தின் பீடத்தலைவர் கலாநிதி சுதேஷ் மந்திலக்க, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஹிந்தி விரிவுரையாளர் கலாநிதி வஜிரா குணசேன மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் ஹிந்தி விரிவுரையாளர் பிரெசில் நாகொட விதான ஆகியோரது உரைகளுடன் தொடர்ந்தது.

இந்நிகழ்வில் இலங்கையில் ஹிந்தி மொழியை ஊக்குவிக்கும் வகையில் கலாசார



நிகழ்ச்சிகள் மற்றும் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன. இலங்கையில் ஹிந்தி மொழியை பரப்புதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றில் பங்களிப்பு செய்ததற்காக 14 ஹிந்தி ஆசிரியர்களுக்கு ஹிந்தி பிரச்சார் பிரசார் சம்மான் விருது வழங்கப்பட்டது.

பிரதான நிகழ்வுக்கு முந்தைய வாரத்தில், வெவ்வேறு கல்வி நிலைகளிலுள்ள மாணவர்களுக்கு ஒன்லைன் முறையில் ஹிந்தி போட்டிகள் (பேச்சு, கவிதை, ஹிந்தி சொல்வதெழுதல் போன்றவை) ஏற்பாடு செய்யப்பட்டன. இப்போட்டிகளில் பல்வேறு பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளை சேர்ந்த 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளுக்காக பல ஹிந்தி போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பல்வேறு ஹிந்திப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பணப்பரிசுகள் வழங்கப்பட்டன.

கொவிட் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி சுமார் 100 ஹிந்தி வல்லுநர்கள், ஆர்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். பங்குபற்றிய அனைவருக்கும் நன்றியுரை வழங்குவதுடன் நிகழ்வு நிறைவுற்றது.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க கல்முனை மாநகர சபையில் பிரேரணை



(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இல்லாமல் செய்வதற்கு எதிர்வரும் மாநகர சபை அமர்வில் பிரேரணை ஒன்றினை நிறைவேற்ற தீர்மானித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய உப தலைவருமான ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்யக்கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பகுதியில் நேற்று (20) மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது,

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்யக் கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை காரைதீவு உள்ளிட்ட பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது. இதில் குறித்த தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதற்கு ஒவ்வொருவரும் தத்தமது கையொப்பங்களை இட்டு இப்போராட்டத்தில் இணைந்துகொண்டு உங்களினதும் உங்கள் சந்ததியின் பாதுகாப்புக்காகவும் பாடுபட முன்வர வேண்டும்.

இந்த நாட்டில் கொடூரமான தடைச் சட்டமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் இருப்பதை நாம் அறிவோம். அந்தவகையில் தற்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டமானது மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, இந்தச் சட்டத்தை முற்றாக எமது நாட்டிலிருந்து அகற்றுவதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாங்கள் அனைவரும் முன்வர வேண்டும். அத்துடன், நாம் அங்கம் வகிக்கின்ற கல்முனை மாநகர சபையில் கூட எதிர்வரும் மாதாந்த அமர்வில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக இல்லாமல் செய்வதற்கு பிரேரணை ஒன்றினை நிறைவேற்ற தீர்மானித்துள்ளோம்.

எமது மாநகர சபைக்கு தமிழர்கள் தரப்பில் தார்மீக ஆதரவினை வழங்கி வருகின்றோம். அந்தவகையில் முழு மாநகர உறுப்பினர்களும் இப்பிரேரணைக்கு தத்தமது ஆதரவினை வழங்குவார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

மேற்படி விசேட செய்தியாளர் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான குஞ்சுத்தம்பி ஏகாம்பரம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்களான அழககோன் விஜயரட்ணம் சோ.குபேரன் தி.இராசரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்யக்கோரி அம்பாறை மாவட்டத்தில் கையெழுத்து வேட்டை



(பாறுக் ஷிஹான்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்யக் கோரி நாடளாவிய ரீதியில் இடம்பெறும் கையெழுத்துப் போராட்டத்தின் ஓரங்கமாக நேற்று (20) அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.

காரைதீவு பொதுச்சந்தை மற்றும் கல்முனை பகுதியில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துசெய்யக்கோரி குறித்த கையெழுத்துப் போராட்டமானது இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி ஏற்பாட்டில் இடம்பெற்றது.

காரைதீவு பொதுச்சந்தைக்கருகில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்திற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் காரைதீவு தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமைதாங்கியதுடன், கல்முனையில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் ஆகியோர் தலைமை தாங்கினர்.




இதன்போது அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மட்டு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், மட்டக்களப்பு மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் முன்னாள் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் செயலாளர் நாயகமும் தற்போதைய உப தலைவருமான ஹென்றி மகேந்திரன், இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் எஸ்.சேயோன், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் கல்முனை மாநகர சபை முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான குஞ்சுத்தம்பி ஏகாம்பரம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினர்களான அழககோன் விஜயரட்ணம், சோ.குபேரன், தி.இராசரட்ணம், சந்திரசேகரம் ராஜன், சமூக சேவகர் தாமோதரம் பிரதீபன் உள்ளிட்ட பிரமுகர்கள் கையெழுத்திட்டனர்.

அத்துடன், உங்கள் ஒவ்வொருவரினதும் கையொப்பங்களும் உங்கள் பாதுகாப்புக்கானதும் உங்கள் சந்ததியின் பாதுகாப்புக்கானது மாகும் என இப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தத்தமது உரையில் குறிப்பிட்டனர்.

# குச்சவெளி பல்வக்குளம் பஸ் தரிப்பிடம் திறந்துவைப்பு



(கந்தளாய் நிருபர்)

குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.சி.எம்.மீசானின் வேண்டுகோளுக்கிணங்க தவிசாளர் ஏ.முபாறக்கின் அனுமதியுடன் சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஜாயாநகர் வட்டாரத்தின் பல்வக்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் தரிப்பிடம் நேற்று முன்தினம் (19) பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக்கினால் திறந்துவைக்கப்பட்டது.

இப்பகுதியில் மிக நீண்டகாலமாக காணப்பட்ட பிரச்சினை இதன்மூலம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.சி.எம்.மீசான், ஜாயா சனசமூக நிலைய உறுப்பினர்கள், சல்லிமுனை, பல்வக்குளம் பள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள், சனசமூக உறுப்பினர்கள், இளைஞர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



*மட்டக்களப்புல மறுகா லண்டன் கணேசமூத்தி சீசன் வியாபாரிபோல இப்பவந்து நாடகம் ஆடுறாரு எலுவா..? போன எலக்சனில யாழ் விக்கினேஷ்வரன் கட்சில கேட்டு கட்டுக்காசும் இல்லாமல் லண்டனுக்கு ஓடுனவர் இப்ப சஜீத் பிறமதாசாட காலில உளுந்து பழைய ரெலிபோனோட வந்து கூத்துகாட்டுறாரு.. இனி சஜீத்திற கட்சிக்கும் தோல்வி நிச்சயம்தான் ஆமை பூந்த வீடும், இவங்க பூந்த கட்சியும் உருப்பட்டதா சரித்திரமே இல்ல..*

# அம்பாறை மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் ஈரநிலம் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம்




(பாண்டிருப்பு நிருபர்)

அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் உலக ஈரநில நிலம் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கல்முனை பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் புஸ்பராஜினி செவ்வேள்குமரன் ஒழுங்கமைப்பில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.புனிதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தின் சுற்றாடல் கழக மாணவர்கள், அம்பாறை மாவட்ட சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இங்கு மக்கள் மற்றும் இயற்கைக்கான ஈரநில நடவடிக்கை எனும் தொனிப்பொருளில் மாணவர்களினால் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றதுடன், பாண்டிருப்பு பெரியகுளம் பகுதியில் பயனுள்ள மரநடுகையும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கந்தளாயில் சூதாட்ட இடமொன்று முற்றுகை

## பணம், வாகனங்கள் மீட்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பணத்திற்கு சூதாட்ட இடமொன்றினை முற்றுகையிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பொலிஸாரினால் நேற்று (20) பேராறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே சூது விளையாடிய இடம் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேக நபர்கள் பொலிஸாரைக் கண்டு ஐயாயிரம் பணத்தாளையும் விட்டு விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சூது விளையாடிய இடத்திலிருந்து ஒரு மோட்டார் சைக்கிளையும், ஒரு சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி கந்தளாய் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சூது விளையாடிய சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# காங்கேயனோடையில் இருவருக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பினால் ஒருவர் பலி

(மட்டக்களப்பு நிருபர்)

காங்கேயனோடையில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியுள்ளது. ஒருவர் மற்றையவரை தாக்கியுள்ளார். தாக்கப்பட்ட நபரை காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்கையில் அவர் உயிரிழந்துள்ளார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (19) காங்கேயனோடை வாவிக்கு அருகில் இடம் பெற்றுள்ளது. உயிரிழந்தவர் காங்கேயனோடை 13ஐச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய உதுமாலெவ்வை முகம்மட் இல்பான் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சி.எம்.றிஸ்வான் சம்பவம் இடம்பெற்ற இடத்தைப் பார்வையிட்டார். இதையடுத்து காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு சென்று அங்கு உயிரிழந்தவரின் சடலத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டதுடன், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று பிரேத பரிசோதனைகளை மேற் கொண்ட பின்னர் உறவினர்களிடம் சடலத்தை கையளிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இதையடுத்து சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உயிரிழந்தவரை தாக்கியதாக கூறப்படும் சந்தேக நபரான காங்கேயனோடையைச் சேர்ந்த கையூம் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர் எனவும் அண்மையிலேயே இவர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காத்தான்குடி பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு பிரியாவிடை



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராள கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபோக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தமக்கான நியமனத்தை பெற்றுக்கொண்டார்.

இவர் இன்று கடமைகளை இராஜாங்க அமைச்சில் பொறுப்பேற்கவுள்ளார். அதனடிப்படையில் அரசாங்க அதிபருக்கான பிரியாவிடை வைபவம் நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் மாவட்டத்திற்கு குறுகிய காலத்தில் ஆற்றிய அளப்பரிய பணிக்காக மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக பணிக்குழாத்தினரால் அவர் கௌரவிக்கப்பட்டதுடன் பல நினைவுப்பரிசில்களும் இதன்போது அவருக்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அரசாங்க அதிபரின் பாரியார், புதல்வன், மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# அல் - மதீனா பாடசாலை சூழலில் சிரமதான நிகழ்வு



(றாசிக் நபாயிஸ்)

சமூக சேவை செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் மருதமுனை மட்-வப்றா முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் சிரமதான நிகழ்வு ஒன்று சங்கத்தின் தலைவர் எம்.ஜ.எம்.றாசீக் தலைமையில் மருதமுனை அல் - மதீனா வித்தியாலயத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

# கல்முனை இருதயநாதர் ஆலயத்தில் இரத்த தானம்



(பெரியநீலாவணை நிருபர்)

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட எகெட் நிறுவனத்தோடு இணைந்து கல்முனை இருதயநாதர் ஆலயம் ஏற்பாடுசெய்திருந்த இரத்த தான முகாம் நேற்று (20) ஆலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் இரா.முரளீஸ்வரனின் வழிகாட்டலுக்கமைய இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரிகள் தாதி உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு இரத்த மாதிரிகளை சேகரித்துக் கொண்டனர்.

இனங்களுக்கிடையில் சமாதானம், அமைதி, ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ற நோக்கோடு இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆண்கள் - பெண்கள் என கல்முனை வாழ் மக்கள் பலரும் இந்த இரத்த தான முகாமில் கலந்துகொண்டனர்.

# சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின்போது ஊழியர்களால் கண்டெடுக்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா பணம்

## உரிமையாளரிடம் ஒப்படைப்பு



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின்போது 40 ஆயிரம் ரூபா பணமும், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை உள்ளிட்ட ஆவணங்களுடன் பர்ஸ் கண்டெடுக்கப்பட்டு, உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபை ஊழியர்களான எஸ்.கமலதாசன் (சாரதி), வீ.கண்ணன், கே.ரஞ்சித்குமார் ஆகியோர்கள் ரீ.சீ.லேன், ஈஸா வீதிகளில் திண்மக் கழிவகற்றல் மேற்கொண்ட வேளையில் இவை கண்டெடுக்கப்பட்டன.

இது திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.எம்.எம்.முஸ்பாவின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது. இதேவேளை, அவ்வீதியினால் மனிபர்ஸ் தொலைந்துவிட்டதாக தேடிவந்த உரிமையாளரிடம் அது தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுதியதன் பின்னர் பிரதேச சபையில் வைத்து உரிய ஆவணங்களும், 40,000 ரூபா பணமும் ஒப்படைக்கப்பட்டன.

இதன்மூலம் சம்மாந்துறை பிரதேச சபைக்கு நற்பெயரை ஈட்டிக்கொடுத்தமைக்காக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட்டினால் குறித்த ஊழியர்களுக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கப்பட்டதுடன், இவ்ஊழியர்களுக்கு பாராட்டு நற்சான்றிதழ் வழங்குமாறு சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கே.முஹம்மட்டிம் பணிப்புரை வழங்கினார்.

இவ்வாறான பணம், நகை, பெறுமதியான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்த பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச நிறுவனங்களுக்கான பொதுக்காணி பயன்பாடு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் கிண்ணியாவில்





(சீனக்குடா நிருபர்)

கிண்ணியா பிரதேசத்தின் பல்வேறு தேவைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட காணி பயன்பாட்டு முறை ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் (19) கிண்ணியா வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கிண்ணியா சூறா சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கிண்ணியா நகரத்தின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும், அரச நிறுவனங்களின் தேவைகளுக்காக காணிகளை இனங்காண்பதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

பொதுமக்களின் தேவைகளுக்காக அரச காணிகளை ஒதுக்கீடு செய்வதிலும் அதனை அடையாளம் காண்பதிலும் உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல அரச காணிகளை அடையாளப்படுத்தி ஒதுக்கீடுசெய்வதன் அவசியம் பற்றியும் இங்கு பல தரப்பினரும் தமது கருத்துகளை முன்வைத்தார்கள்.

குறிப்பாக, தற்போது கிண்ணியா தள வைத்தியசாலையில் இடமாற்றமும் அதில் உள்ள பிரச்சினை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதோடு, கிண்ணியா கல்வி வலயத்திற்கு ஒதுக்கப்பட்ட கனினி வள நிலையத்திற்கான காணிகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டன.

மேலும், பொதுத் தேவைகளுக்காக காணிகளை அடையாளப்படுத்தி அதனை விரைவாக அந்த நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் காணிகளை அடையாளப்படுத்த முடியாத திணைக்களங்களுக்கு காணிகளை ஒதுக்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இங்கு விரிவாக ஆராயப்பட்டன.

அத்தோடு இடப்பற்றாக்குறை யாக இருக்கின்ற அரசு அலுவலகங்கள் தொடர்பாகவும் வாடகை கட்டிடங்களில் இயங்கி வரும் நிறுவனங்கள் தொடர்பாகவும் இங்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், இம்ரான் மகரூப், கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம்.நிவாஸ், கிண்ணியா பிரதேச சபை தவிசாளர் ஏ. எஸ். நசீர் கிண்ணியா ஜம்மியத்துல் உலமாவின் தலைவர் அஷ் ஷெய்க் ஏ.எம்.ஹிதாயத்துல்லா கிண்ணியா பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எம்.எம்.முஹ்மீன் கிண்ணியா, மற்றும் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரிகள், வெருகல் பிரதேச செயலாளர், கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர், கிண்ணியா தள வைத்தியசாலை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், கிண்ணியா காணி உத்தியோகத்தர் மற்றும் அந்தக் கிளை சார்ந்தவர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டார்கள்.

# இரு குழுக்களுக்கிடையே மோதல்; திருமலையில் நால்வர் படுகாயம்

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - கொட்பே மீன்பிடி கிராமத்தில் இரண்டு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் 4 பேர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக இணைந்து மது அருந்திக்கொண்டிருந்தபோது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இரு குழுக்களைச் சேர்ந்த நான்கு பேர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் சீனக்குடா கொட்பே மீன்பிடி கிராமத்தில் வசித்துவரும் 22 வயது, 26 வயது மற்றும் 40 வயது உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் சீனக்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஆலய கும்பாபிஷேகம்!




(கல்லடி நிருபர்)

மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மன்றம் கட்டியுள்ள பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் திருக்கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் 23ஆம் திகதி (புதன்கிழமை) இடம்பெறவுள்ளது. கொழும்பு மற்றும் மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் ஆகிய இரு இடங்களிலுமுள்ள கிளைகள் தவிர்ந்த இடமொன்றில் கட்டப்பட்டுள்ள முதல் இராமகிருஷ்ணர் கோவில் இதுவாகும்.

இக்கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு முதல் நாள் (22) பிற்பகல் 3 மணிக்கு மாபெரும் ஆன்மீக எழுச்சிப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்று பிற்பகல் 3.00 மணிக்கு இராமகிருஷ்ண வளாகத்திலிருந்து ஆரம்பமாகும் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்வலம் சுவாமி தீர்த்தமாடச் செல்லும் வீதி வழியாக தீர்த்தக் கரையை அடைந்து, தீர்த்தமாடிவரும் வீதி வழியூடாக மாவடிக்கடை சந்திவரை சென்று, அங்கிருந்து மத்திய வீதி வழியாக மண்டூர் மாரியம்மன் கோவிலை அடையும்.

அங்கு நடைபெறும் பூசை வழிபாடுகளை அடுத்து புறப்படும் ஊர்வலம் மண்டூர் கந்தசாமி கோவிலைச் சென்றடையும். ஊர்வலம் நடைபெறும் வீதிகளில் மக்கள் நிறைகுடம் வைத்து வழிபடுவதுடன், பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வுகளும் நடைபெறும்.

மறுநாள் 23ஆம் திகதி காலை சுபவேளையில் மங்கல வாத்தியங்கள் முழங்க, வேத மந்திரங்கள் ஒலிக்க, பஜனைகள் நடைபெற, ஹோமம் வளர்க்க தெய்வத் திருமூவர்களான பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர், அன்னை சாரதாதேவி, சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்கள் இராமகிருஷ்ணத் துறவிகளால் பிரதிஷ்டை செய்யப்படுவதுடன், கோபுர கலசத்துக்கு குடமுழுக்கும் நடைபெறும்.

இப்பக்திப் பெருவிழாவில் இராமகிருஸ்ண மிஷன் இலங்கைக் கிளையின் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா மற்றும் சுவாமி இராஜேஸ்வரானந்தா, மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன் மேலாளர் சுவாமி தக்ஷஜானந்தா, உதவி மேலாளர் சுவாமி நீலமாத வானந்தா, சாரதா மிஷன் மாதாஜிகள் உட்பட மண்டூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மன்றத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் கலந்துகொள்வர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மூதூரின் முதுசங்கள் நூல் வெளியீடு






(மூதூர் நிருபர்)

மூதூரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் கலாபூஷணம் எம்.சீ.எம்.ஷெரிப் எழுதிய "மூதூரின் முதுசங்கள் பகுதி – I" நூல் வெளியீட்டு விழா மூதூர் பெரியமுத்து விருந்தினர் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மூதூரைச் சேர்ந்த 170 தனிநபர்களின் வரலாற்றுக் குறிப்புகளுடன் 588 பக்கங்களைக்கொண்ட இந்நூலானது எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் கலாசாரம், வரலாறு சம்பந்தமான ஆராய்ச்சிக்கு துணை நிற்கும் ஓர் அரிய பொக்கியஷமாகுமென்று இந்நூல் வெளியீட்டு நிகழ்வொல் கலந்து கொண்டவர்களின் கருத்தாக அமைந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதியாக ஜோர்தான் நாட்டுக்கான முன்னாள் தூதுவர் எம்.லாபீர் கலந்துகொண்டார். ஏனைய அதிதிகளாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், மூதூர் பிரதேச சபையின் தவிசாளர், மூதூர் வலயக்கல்வி பணிப்பாளர், மூதூர் பிரதேச சபையின் செயலாளர், பிரதேச இலக்கியவாதிகள், நலன்விரும்பிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்கம் நிறுவ அடிக்கல் நாட்டிவைப்பு







(காரைதீவு நிருபர்)

சோழர்காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு தற்போது சிதைந்து கிடக்கின்ற நிந்தவூர் பிரதேச சபைக்குட்பட்ட மடத்தடி சிவன் ஆலய முன்றலில் சிவலிங்க சிலை நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம்.கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குநர் மு.ஜெயபாலன், சிவனருள் பவுண்டேஷன் மாவட்ட தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியை அனுசியா சேனாதிராஜா, மாவட்ட செயலாளர் கே.வாமதேவன், பொருளாளர் ஜனார்த்தனன், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர், மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், ஆலயத்தின் தலைவர் மற்றும் பரிபாலன சபை ஆலோசகர்கள், ஆலய நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினர்.

மேலும் அடிக்கல் நடப்பட்ட பீடத்தில் சிவனருள் பவுண்டேசன் அனுசரணையில் மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபகரும் இயக்குநருமான மு.ஜெயபாலனின் ஏற்பாட்டில் எதிர்வரும் சிவராத்திரியன்று சிவலிங்கம் பிரதிஷ்டை செய்துவைக்கப்படவிருக்கிறது.

# திருக்கோவிலில் 60 பயனாளிகளுக்கு காணி ஆவணங்கள் வழங்கிவைப்பு!



(கல்லடி நிருபர்)

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட காணி ஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர்செய்யும் பொதுமக்களுக்கான காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (18) திருக்கோவில் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டபிள்யூ.டி.வீரசிங்க கலந்து சிறப்பித்தார்.

இதன்போது 40 பேருக்கு அளிப்புகளும், 20 பேருக்கு உத்தரவுப்பத்திரங்களும் மொத்தமாக 60 பயனாளிகளுக்கு காணி ஆவணங்கள் கையளிக்கப்பட்டன.

அத்தோடு திருக்கோவில் பிரதேச செயலகமானது கடந்த 2020ஆம் ஆண்டு 800இற்கும் மேற்பட்ட காணி அளிப்புப்பத்திரங்கள் தயாரித்து கிழக்கு மாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை சிவில் சமாதான சங்கம் நடத்திய சிவில் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு!





(கல்லடி நிருபர்)

இலங்கை சிவில் சமாதான சங்கம் நடத்திய அஹிம்சைவழி சிவில் செயற்பாட்டாளர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் (19) மட்டக்களப்பு பல்நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இச்சங்கத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் சங்கத்தின் பணிப்பாளர் நாயகம் நிரோஷன் ஏக்கநாயக்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சமாதானத்துக்கான அஹிம்சை வழித் தொண்டர்கள் இருக்கின்ற வளங்களை தமது எதிர்பார்ப்புக்கேற்ப எவ்வாறு உச்ச அளவில் பயன்படுத்தலாம் என்பது தொடர்பாக கலந்துரையாடல் ஊடாக கருப்பொருளை தெளிவாக அறிமுகப்படுத்தினார்.

இச்செயலமர்வில் 35 இளைஞர்கள் மற்றும் யுவதிகள் கலந்துகொண்டிருந்தனர். மூவினத்தையும் சேர்ந்த அஹிம்சைவழிச் சிவில் செயற்பாட்டாளர்கள் இனம், மதம் மற்றும் மொழிகளுக்கு அப்பாற்பட்டு பாடசாலைகள், வைத்தியசாலைகள், பொது இடங்களை காலத்துக்குக் காலம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல், கடற்கரையோரங்களை அழகாகவும், தூய்மையாகவும் பேணும் பொருட்டு தேங்கியுள்ள கழிவுப்பொருட்களை அகற்றுதல் போன்ற பல பணிகளில் ஈடுபட்டுவருவது குறிப்பிடத் தக்கது.

# 'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீடு

(பொத்துவில் நிருபர்)

ஒலுவில் எஸ்.ஜலால்டீன் எழுதிய 'அந்தி பூத்த வைகறை' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பப் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல்.ஏ.மஜீட் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள அல்-ஸகி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாகவும், தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதன்மைப் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.யோகராசா மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல்துறை ஓய்வுநிலை பேராசிரியர் கலாநிதி ஏ.எஸ்.ஆனந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# ஒலுவிலில் கலைஞர்கள் கௌரவிப்பு





(மருதமுனை நிருபர்)

ஒலுவில் மின்னல் வெளியீட்டகம் ஒலுவில் பரண் தோட்டத்தில் ஏற்பாடுசெய்திருந்த கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வும், கௌரவிப்பும் அண்மையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பிறை வானொலியில் சனிக்கிழமை தோறும் இடம்பெற்றுவரும் பல்லாயிரக்கணக்கான நேயர்களின் மனதைக் கவர்ந்த சந்தனக்காற்று நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகும் நாடகத்திற்காக வானொலி தேசிய விருதுபெற்ற கவிஞரும், அறிவிப்பாளரும், நாவலாசிரியருமான ஆசிரியர் ஜே.வஹாப்தீன், அண்மையில் கலாபூஷண விருதுபெற்ற சிறுகதையாளர் கவிஞர் சொல்லன்பன் நசுறுதீன் ஆகியோருக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.எம்.ஐயூப் பொன்னாடை போர்த்தி, நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவித்தார்.

# கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலராக திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் நியமனம்



(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய சமன் தர்சன பாண்டிகோராளவுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகாய், கருவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறுபோக பயிர்ச்செய்கை அபிவிருத்தி, அதனோடு இணைந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் புதிய செயலாளராக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோரள நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தமக்கான நியமனத்தை பெற்றுக்கொண்டார்.

இன்று இவர் தம் கடமைகளை உத்தியோகபூர்வமாக இராஜாங்க அமைச்சில் பொறுப்பேற்கவுள்ளார்.

இவர் கடந்த 2020.10.26ஆம் திகதி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக கடமையேற்றதுடன், குறுகிய காலத்தில் மாவட்ட மக்களின் பல்வேறு தேவைகளில் விசேட கவனம் செலுத்தி செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெங்கு பரவல் அதிகரிப்பால் சிவப்பு வலயமாக மட்டக்களப்பு மாவட்டம் அடையாளம்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளதன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் சிவப்பு வலயமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த ஆண்டு டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட மாவட்டங்களில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவுசெய்யப்பட்ட மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் இருப்பதாகவும் அதில் 2,800 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்ததாகவும்



அத்தோடு அதில் நான்கு பேர் மரணமடைந்திருந்ததாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இவ்வாண்டின் மாசி மாதம் வரையான காலப்பகுதியில் 75 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந்த டெங்கு நோயின் பரம்பலின் முக்கிய விடயமாக காணப்படுவது டெங்கு நுளம்பை அழித்தல் என்னும் விடயத்தில் நாங்கள் அனைவரும் விளங்கிக்கொள்ளுதல் அவசியமானதெனவும், அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு நகரப்பகுதியில் அதிக டெங்கு நோயாளர்களை இனங்கண்டிருப்பதால், முக்கியமாக நகரப்பகுதிகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் செயற்பாட்டை தாம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனை மாவட்டத்தில் இருந்து முற்றாக ஒழிப்பதாயின் உள்ளூராட்சி மன்றங்கள், நிறுவனங்கள் மற்றும் கிராமிய சங்கங்களின் ஒத்துழைப்பு சுகாதாரத்துறைக்கு இக்காலகட்டத்தில் மிகவும் அவசியமாக இருப்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இரத்ததானம்



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி எதிர்நோக்கும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது பங்களிப்பைச் செய்துவருகின்றன.

அதற்கமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் அலுவலக உத்தியோகத்தர்களினால் அலுவலக உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இவ்வாண்டின் மூன்றாவது தடவையாக இரத்ததான முகாமினை நடத்தியுள்ளனர்.

அந்த வகையில் இந்த வருடத்துக்கான இரத்ததான முகாமானது, கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளரும் நலன்புரிச்சங்க தலைவருமான வீ.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உன்னத பணியினை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக செய்துவந்த நிலையில், கொவிட் -19 சூழ்நிலை காரணமாக கடந்த வருடம் இரத்ததான முகாமினை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருந்தது.

குறித்த இரத்ததான முகாமில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளைத்தலைவர்கள், முகாமைத்துவ உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்தக் கொடையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கொரோனா தடுப்பூசி பெறாதோருக்கு மட்டக்களப்பில் மீண்டும் சந்தர்ப்பம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான விசேட தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை மட்டக்களப்பு நகர் தேவநாயகம் மண்டபத்தில் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பொதுமக்களுக்கான கொரோனா வைரஸ் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையினை மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தடுப்பூசி பெற்றுக்கொள்வது அவசியமாக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இதுவரை கொரோனா தொற்றுக்கான எதுவித தடுப்பூசிகளையும் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு விசேட சந்தர்ப்பத்தினை வழங்கும் வகையில், இந்த தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 03 மணிவரையில் தேவநாயகம் மண்டபத்தில் இடம்பெற்றது.

# திருமலை இந்து மயானத்துக்குள் திடீரென முளைத்த பௌத்த மயான பெயர்ப்பலகை




(நிலாவெளி நிருபர்)

திருகோணமலையில் அமைந்துள்ள இந்துக்களின் பூர்வீகமான இந்து மயானத்துக்குள் இரவோடிரவாக பௌத்தர்களின் பெயர்ப்பலகை நடப்பட்டு பௌத்த மயானமாக்கும் திட்டமொன்று திருகோணமலையில் அரங்கேறியுள்ளது.

இந்துக்களின் சொந்த நிலமான இந்து மயானம் பெரும்பான்மை சகோதரர்கள் அதை பௌத்த மயானமாக பெயரிட நேற்று முன்தினம் (19) நடைபெற்ற நகர சபை அமர்வில் தனிநபர் பிரேரணை ஒன்றை முன்வைத்தபோது அப்பிரேரணையானது, அனைத்து உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்ட போதும் அதையும் தாண்டி இந்த பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

திருமலை நகரப்புறத்தில் இந்து, முஸ்லிம் கிறிஸ்தவர்கள் என மூவினத்துக்கும் மயானங்கள் உள்ளன. ஆனால், சிங்களவர்களுக்கான மயானம் ஒன்றில்லை என்றும் மேற்படி இந்துக்களின் மயானம் பொதுமயானமாக இருப்பதால் அதனை பௌத்த பொதுமயானமாக்கக் கோரியே பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

அதை ஒட்டு மொத்த உறுப்பினர்களும் (பெரும்பான்மை இனத்தவர் தவிர்ந்த) எதிர்ப்பின் பின்னரும் நிராகரிக்கப்பட்ட மேற்படி பிரேரணை இருக்க, இன்று இந்தப் பெயர்ப் பலகை முளைத்துள்ளது. எனவே, திருமலை நகராட்சி மன்றும் சட்டபூர்வமான நடவடிக்கை மூலம் இந்தப் பெயர்ப்பலகையை அகற்றுதல் வேண்டும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# பயணிகளை வழிமறித்து தடுப்பூசி செலுத்துவதென்பது பொதுமக்களை உளரீதியாக துன்புறுத்தும் செயல்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(வீரமுனை நிருபர்)



கொரோனா தடுப்பூசி இலங்கையில் பொதுவான நடைமுறை. ஆனால், கிழக்கில் மட்டும் இராணுவம் பொதுப்போக்குவரத்து பயணிகளை வழிமறித்து தடுப்பூசி அட்டையை பரிசோதித்து, தடுப்பூசி ஏற்றப்படுவதென்பது பொதுமக்களை உளரீதியாக துன்புறுத்தும் செயலாகுமென மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

கிழக்கில் பொதுப் போக்குவரத்து பயணிகளிடம் தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு தெருவில் தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கை தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு மாகாண பொதுப் போக்குவரத்தில் பயணம் செய்பவர்கள் கொவிட்-19 தடுப்பூசி அட்டையை வைத்திருக்குமாறும் தடுப்பூசி கட்டாயம் போட்டிருக்க வேண்டுமெனவும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக் வலியுறுத்தினாலும், பிரயாணிகள் தடுப்பூசி போடப்படாத நிலையில், தெரு பாதையில் வழிமறித்து தடுப்பூசி ஏற்றப்படுவதென்பது பொதுமக்களை அசௌகரிய மன அழுத்தத்துக்கு உள்ளாக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

கிரமமான முறையில் இராணுவத்தினரின் மேற்பார்வையில் கிராம சேவகர் பிரிவுகள் தோறும் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் இதுவரை பூஸ்டர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்கள் உடனடியாக தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

ஏற்கனவே பூஸ்டர் தடுப்பூசி பெற்ற சிலருக்கு தொடரான இருமல், கை கால் கடுப்பு என்பன ஏற்படுவதாக பொதுமக்களால் கூறப்படும் குற்றச்சாட்டுகள் உண்மை இல்லாமலும் இல்லை. காசம் நிற்க பனம்பழம் விழுந்த கதை போன்று சிலருக்கு இவ்வாறான அறிகுறிகள் உள்ளதனால் மூன்றாவது தடுப்பூசியினை விரும்பிச் செலுத்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

உண்மையில் கோவிட் -19, நாட்டிலிருந்து முற்றாக இல்லாமல் செய்யப்படுவதற்கு எல்லோரும் தடுப்பூசிகளை முறையாக செலுத்த வேண்டும் என்பதற்கு மாற்றுக் கருத்துகள் இல்லை. ஆனால், இராணுவ நடவடிக்கைகள் போன்று மக்கள் மத்தியில் திணிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு திணிப்பதை விடுத்து, அன்பான அரவணைப்புடன் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே நல்லதென்றும் பொதுமக்கள் அனைவரும் பூஸ்டர் தடுப்பூசி போடுவதற்கு விரும்பி முன்வர வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

# பன்குளம் வாய்க்காலுக்குள் வீழ்ந்த யானை; மூன்று வாரங்கள் கடந்தும் மீட்கப்படாத துயரம்

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - பன்குளம் பகுதியில் யானையொன்று கடந்த 07ஆம் திகதிமுதல் வாய்க்காலில் வீழ்ந்த நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றது.

பன்குளம் பகுதியில் உள்ள பிரபல சட்டத்தரணியொருவரின் தனியார் காணியொன்றில் கடந்த 07ஆம் திகதி 09 அடி உயரமான யானையொன்று காலில் காயம் ஏற்பட்ட நிலையில் வாய்க்காலுக்குள் விழுந்து கிடந்தது.

இந்நிலையில், வன ஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் குறித்த யானைக்கு சிகிச்சை அளித்தபோது விழுந்து கிடந்த இடத்திலிருந்து வாய்க்கால் ஊடாக மக்கள் நடமாடும் இடத்துக்கு விழுந்த நிலையிலேயே வருகை தந்தது.

இதேவேளை குறித்த யானைக்கு உணவுக்காக கரும்பு, பப்பாளி, அன்னாசி மற்றும் யானை உண்ணக்கூடிய உணவுப்பண்டங்களை அப்பகுதியில் உள்ள மக்கள் கொடுத்து வந்தனர்.

வனஜீவராசிகள் திணைக்களம் கடந்த 07ஆம் திகதி முதல் சிகிச்சையளித்து வருவதாக கூறியிருந்தபோதிலும் சம்பவ இடத்துக்கு கடந்த இரண்டு மூன்று நாட்களாக சென்றபோதிலும் எவ்வித சிகிச்சையும் அளிக்கவில்லை எனவும்



அப்பகுதியில் உள்ள மக்கள் குறிப்பிட்டனர்.

ஆனாலும் குறித்த யானையை பார்ப்பதற்காக வைத்தியக் குழுவொன்று வருகை தருவதாக கூறியிருந்தபோதிலும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை வரை எவரும் வருகை தரவில்லை எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 07ஆம் திகதி முதல் ஒரே பக்கமாக உறங்கிக்கொண்டிருக்கின்ற யானையின் கால் ஒன்று உடைந்து இருக்கின்றபோதிலும் இடுப்பு உடைந்துள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இருந்தபோதிலும், இடுப்பு பகுதியில் எவ்வித வீக்கமுமில்லை எனவும் ஒரே பக்கமாக யானை விழுந்து கிடப்பதால் யானையின் கண், ஆணுறுப்பு மற்றும் வயிற்றில் வீக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் யானைக்கு சிகிச்சை அளிப்பதற்கு மிக விரைவாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மட்டு. மாவட்டத்தில் தொழுநோய் வேகமாக அதிகரிக்கும் அபாயம்!

## இரு மாதங்களில் 75 நோயாளர்கள் அடையாளம்

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயாளர்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், விசேட நடவடிக்கையினை சுகாதாரத்துறையினர் முன்னெடுக்கவுள்ளதாகவும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த இரண்டு வருடங்களாக கோவிட் நிலைமை மிக மோசமாக இருந்தது. தற்போதும் குறைவடைந்துள்ளது என்று திருப்திகொள்ள முடியாது. இதுவரை 23ஆயிரம் நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், 307 பேர் மரணித்துள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

கடந்த காலங்களில் டெல்டா, அல்பா போன்றவை அடையாளப்படுத்தப்பட்டு வந்தன. தற்போது ஒமிக்ரொன் தொற்று காணப்படுகின்றது. இந்நிலையில், நாம் அடுத்தகட்ட நகர்வுக்குள் நுழைந்து கொண்டிருக்கின்றோம். பொருளாதார, சமூகப் பிறழ்வுகளில் இருந்து வெளிவர வேண்டிய தேவை இருக்கின்றது. இதனால் சுகாதார வழிமுறைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடித்து, தடுப்பூசிகளைப் பெற்று, நிரந்தரத் தீர்வை நோக்கிச்செல்ல வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாம் கட்டத் தடுப்பூசிகள் 97 சதவீதமானவர்களுக்கும், இரண்டாம் கட்டத்தடுப்பூசிகள் 87 சதவீதமானவர்களுக்கும் வழங்கியிருக்கின்றோம். இது இலங்கையின் முதல் ஐந்து மாவட்டங்களுக்குள் மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது.

மூன்றாம் கட்டத் தடுப்பூசி வழங்கலில் மிகுந்த கீழ் மட்டத்தில் காணப்படுகின்றது. அதாவது 25 சதவீதமானோரே பெற்றுள்ளனர் உடன், இது இலங்கையின் கடைசி 05 மாவட்டங்களில் ஒரு இடத்தை மட்டக்களப்பு பெறவைத்திருக்கின்றது. இதனால் இராணுவத்தினரின் சுகாதாரத் தரப்பும் எம்மோடு இணைந்துகொண்டு தடுப்பூசி ஏற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இந்தக் காலத்தில் மழைவீழ்ச்சி பதிவாகும் காலமாகக் காணப்படுகின்றது. இக்காலத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கும். கடந்த வருடம் 2,800 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 04 பேர் உயிரிழந்துள்ளனர். ஆனால் இந்த வருடம் மிகக் குறைவாகவே பதிவாகியுள்ளது. இதுவரை ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குள் 75 நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, இருக்கின்றார்கள். இதுவரை எதுவிதமான மரணங்களும் பதிவாகவில்லை. மட்டக்களப்பு மாவட்டம் தற்போது புதுவிதமான ஒரு அபாயத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றது.

அதாவது தொழுநோய் தொடர்பான பிரச்சினை தலைதூக்கியுள்ளது. தொழுநோய் சம்பந்தப்பட்ட விடயத்தில் இலங்கையில் காணப்படுகின்ற தொழுநோய் வைத்தியசாலைகளில் ஒன்றாகிய மாந்தீவு வைத்தியசாலை காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் தொழுநோயாளர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்கும் நிலையே காணப்படுகின்றது.

அதாவது தனிமைப்படுத்தி, பராமரிப்பின்றி என்ற விடயம் ஒரு காலத்தில் காணப்பட்டாலும், தற்போது அந்நிலையில்லை. இந்நிலையில் அவ்வைத்தியசாலையை மீண்டும் புனரமைத்துக்கொண்டு செல்லும் திட்டம் இப்போதில்லை.

தொழுநோயாளர்கள் அந்த வைத்தியசாலையில் காணப்பட்டதன் மூலம்தான் மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய்த்தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பலரிடம் காணப்படுகின்றது. இந்நிலையில் எதிர்காலத்தில் நாங்கள் இதனை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்துடன் இணைந்து சில ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு எதிர்பார்த்திருக்கிறோம் என்றார்.

# இந்திய செய்திகள்

# கச்சதீவு திருவிழா அனுமதி மறுப்பு: வேதனையில் தமிழக மீனவர்கள்

## இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு ஓ.பி.எஸ். கடிதம்



ஒவ்வொரு ஆண்டும் கச்சதீவில் நடைபெறும் அந்தோனியார் தேவாலய பெருவிழாவின்போது இந்திய மக்களும், இலங்கை மக்களும் இணைந்து திருவிழா கொண்டாடுவது வழக்கமானது. இது இந்திய - இலங்கை நாட்டுடனான நல்லுறவை மேம்படுத்தும் விதமாக அமைகிறது. ஆனால், நடப்பாண்டில் நடைபெறவிருக்கின்ற கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க தமிழக மீனவர்கள் உள்ளிட்ட இந்தியர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. கச்சதீவு திருவிழாவில் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டதால் தமிழக மீனவர்கள் சோகத்தில் இருக்கின்றனர்.

கச்சதீவு அந்தோனியார் கோவில் திருவிழா என்பது தமிழகம் - ஈழத் தமிழர்கள் இடையேயான கலாசார திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு கச்சதீவு அந்தோனியார் கோவில் திருவிழா மார்ச் 11, 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த திருவிழாவில் இலங்கையைச் சேர்ந்த 500 பேர் மட்டுமே பங்கேற்க அந்நாட்டு அரசு அனுமதி அளித்துள்ளது. கொரோனாவைக் காரணங்காட்டி இந்தியர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், "கச்சதீவு திருவிழாவில் தமிழர்களை இலங்கை அரசு அனுமதிக்கவில்லை. இது தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த விவகாரத்தை தங்களது கவனத்துக்கு கொண்டு வருகிறேன். கச்சதீவு திருவிழாவில் தமிழக மீனவர்களும், இலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் பக்தர்களையும் அனுமதிக்க இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்." - இவ்வாறு அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பறவைக் காய்ச்சல் அச்சம்:

# 25,000 கோழிகளை கொல்ல மகாராஷ்டிரா அரசு உத்தரவு



தானேவிலுள்ள கோழிப்பண்ணையின் ஒரு கிலோமீற்றர் சுற்றளவிலுள்ள சுமார் 25,000 கோழிகளை கொல்ல மகாராஷ்டிரா அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மும்பை அருகே தானேவிலுள்ள ஷஹாபூர் தாலுகாவின் வெஹ்லோலி கிராமத்திலுள்ள கோழிப்பண்ணையின் ஒரு கிலோமீற்றர் சுற்றளவிலுள்ள சுமார் 25,000 கோழிகளை அடுத்த சில நாட்களுக்குள் கொல்ல, தானே மாவட்ட ஆட்சியர் ராஜேஷ் ஜே நர்வேகர் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்:

வெஹ்லோலி கிராமத்திலுள்ள கோழிப்பண்ணையில் சுமார் 100 கோழிகள் இறந்துள்ளன.

பறவைக் காய்ச்சல் அச்சுறுத்தலைக் கருத்திற்கொண்டு, அவற்றின் மாதிரிகள் புனேவிலுள்ள ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. எனினும், பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணை மற்றும் அதனைச் சுற்றி ஒரு கிலோமீற்றர் சுற்றளவில் சுமார் 25,000 கோழிகள் அடுத்த சில நாட்களுக்குள் கொல்லப்படும். அதன்படி, நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை எடுக்க, தானே மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# மீனவர்களை காக்க இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும்

## ஜி.கே. வாசன் வலியுறுத்து



தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரிடமிருந்து பாதுகாக்க மத்திய அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டும் - என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது அவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடிப்பதும், பல்வேறு விதத்தில் துன்புறுத்துவதும், படகுகளை, மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்துவதும் பல ஆண்டுகளாக நீடிப்பது மிகவும் கவலைக்குரியது. வெள்ளிக்கிழமை நள்ளிரவில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மீனவர்களில் 6 பேரை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். மேலும் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதனால் தமிழக மீனவக் குடும்பங்கள் துயரத்தில் இருக்கிறார்கள்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்வதும், சிறையில் அடைப்பதும், படகுகளை பறிமுதல் செய்வதும் இது தொடர்பாக தொடர்ந்து அரசியல் கட்சிகள் கோரிக்கை வைப்பதும், பின்னர் காலம் கடந்து தமிழக மீனவர்கள் இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்படுவதும் தொடர்கதையாக நீள்கிறது. இதற்கு இரு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை. குறிப்பாக மத்திய அரசு, இலங்கைக்கு பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் உதவிகள் செய்வது ஏற்புடையது.

அண்டை நாடான இலங்கையும், அந்நாட்டு மக்களும் முன்னேறவேண்டும் என்று இந்தியா நினைத்து செயற்படும் அதே சமயம், இந்திய மீனவர்களின் மீன்பிடித் தொழிலையும் பாதுகாக்க அதிக கவனம் செலுத்தவேண்டும். அதாவது இந்தியா, இலங்கையோடு நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இந்திய மீனவர்களுக்கு இனிமேல் இலங்கையால் எவ்வித பாதிப்பும் இருக்காமல் இருப்பதை உறுதிசெய்துகொள்ளும் வகையில் பேசவேண்டும். அதன்பின்னரே இலங்கையுடனான நட்புறவை தொடர்ந்து மேம்படுத்தலாம்.

இரு நாட்டு நட்புறவு வலுபெற, இரு நாட்டு மக்களும் வளம் பெற இரு நாடும் ஒத்துழைப்போடு, ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய கட்டாயமும், அவசியமும் தேவை என்பதை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துகிறேன். மத்திய அரசு, இலங்கை அரசிடம் தொடர்புகொண்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமாகா சார்பில் கேட்டுக்கொள்கிறேன்." - இவ்வாறு ஜிகே வாசன் தெரிவித்துள்ளார்.

# ரஜினி '170' அப்டேட்



சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த் நடிக்கும் அடுத்த படத்தின் இயக்குநர், தயாரிப்பாளர் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

ரஜினியின் 170ஆவது திரைப்படத்தை கபாலியின் ''நெருப்புடா....'' பாடலைப் பாடியவரும் 'கனா' திரைப்படத்தின் இயக்குநருமான அருண்ராஜா காமராஜ் இயக்கவுள்ளதாகவும், போனிகபூர் தயாரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ரஜினி 169ஆவது திரைப்படத்தை, 'கோலமாவு கோகிலா', 'டாக்டர்' படங்களை இயக்கிய நெல்சன் திலீப்குமார் இயக்கவுள்ளதாக சன் பிக்சர்ஸ் நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருந்தது.

தர்பார், பேட்ட திரைப்படங்களைத் தொடர்ந்து அனிருத் 'ரஜினி 169' திரைப்படத்திற்கும் இசையமைக்கவுள்ளார்.

இதுதொடர்பாக சன் பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிட்ட விடியோவால் ரஜினி ரசிகர்கள் உற்சாகமடைந்த நிலையில், தற்போது ரசிகர்களை மேலும் குஷிப்படுத்தும் வகையில் ரஜினி 170 திரைப்படம் குறித்த அறிவிப்பும் வெளியாகியுள்ளது. இதனால் ரஜினி ரசிகர்கள் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர்.

இதனையொட்டி இணையத்தில் தலைவர் 170 என்ற ஹேஷ்டேக்கும் ட்டெண்டாகி வருகிறது. 'அண்ணாத்த' திரைப்படம் விமர்சனத்திற்குள்ளான நிலையில், ரஜினி அடுத்தடுத்த திரைப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

## வீட்டை விற்று பணம் தராததால் ஆத்திரத்தில் வயது முதிர்ந்த தாயை கொடூரமாக தாக்கிய மகன்



வீட்டை விற்று பணம் தராததால் ஆத்திரமடைந்த மகன், வயது முதிர்ந்த தாயை கொடூரமாக தாக்கியுள்ளார். இது குறித்து விசாரிக்க வந்த அதிகாரிகளிடம், ''மகனை கைதுசெய்ய வேண்டாம். என்னை நல்ல முறையில் கவனித்துக்கொள்ளும்படி அறிவுறுத்துங்கள்'' என கண்ணீர் மல்க மூதாட்டி கூறிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம், குண்டூர் மாவட்டம் தாடேப்பள்ளி பிரம்மானந்தபுரத்தைச் சேர்ந்தவர் நாகமணி. இவரது கணவர் வெங்கடேஸ்வரராவ். இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர்.

இருவருக்கும் திருமணமாகிவிட்டது. இவர்களுக்கு அரச சார்பில் வழங்கிய நிலத்தில் வீடு கட்டி வசித்து வருகின்றனர். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு வெங்கடேஸ்வரராவ் உடல்நலம் பாதித்து இறந்துவிட்டார். இதனால் நாகமணி தனியாக வசித்து வந்தார். மகன் சேஷூ மனைவியுடன் வேறு வீட்டிற்கு சென்றுவிட்டார். இந்நிலையில், நாகமணி வசித்துவரும் வீட்டை விற்று பணம் தரும்படி சேஷூ தொடர்ந்து கேட்டு வந்தார். ஆனால், இதற்கு நாகமணி சம்மதிக்கவில்லை. இதனால் ஆத்திரமடைந்த சேஷூ வெள்ளிக்கிழமை வீட்டிற்கு வந்து தனது தாய் நாகமணியை காலால் எட்டி உதைத்தும் பாத்திரத்தால் தலையில் அடித்தும் கீழே தள்ளி சரமாரியாக தாக்கியுள்ளார்.

இதனைக் கண்ட அக்கம் பக்கத்தினர் வீடியோ எடுத்து பொலிஸாருக்கு அனுப்பியுள்ளனர். இதனையடுத்து சேஷூ மீது பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதனையறிந்த மாநில மகளிர் ஆணையத் தலைவர் வாசிரெட்டி பத்மா மற்றும் அதிகாரிகள், நாகமணியின் வீட்டிற்கு சென்று நலம் விசாரித்தார். அப்போது தாயெனக் கூட பார்க்காமல் அடித்து துன்புறுத்திய மகனை கைதுசெய்யலாமா? என பத்மா, நாகமணியிடம் கேட்டார். அதற்கு நாகமணி,

''எனது மகனை கைதுசெய்ய வேண்டாம். என்னை நல்ல முறையில் கவனித்துக்கொள்ளும்படி அறிவுறுத்துங்கள், அதுவே போதும்'' என கண்ணீர் மல்க தெரிவித்தார். 'இதுதான் பெத்த மனசு பித்து, பிள்ளை மனசு கல்லு' எனக்கூறி அங்கிருந்தவர்கள் நெகிழ்ச்சியடைந்தனர்.



**பஞ்சாப் சட்டசபை தேர்தலில் தங்களின் ஜனநாயக கடமையை நிறைவேற்றிய ஒட்டிப்பிறந்த இரட்டையர்களான சோனா, மோனா.....**

பஞ்சாபில் மொத்தமுள்ள 117 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாகவும், உத்தரப் பிரதேசத்தில் மூன்றாம் கட்டமாக 16 மாவட்டங்களிலுள்ள சட்டமன்றத் 59 தொகுதிகளுக்கும் நேற்று தேர்தல் நடைபெற்றது.

# தந்தையிடம் அடிவாங்குவதிலிருந்து தப்பிக்க இந்தியாவுக்குள் நுழைந்த பங்களாதேஷ் சிறுமி



தந்தையிடம் அடிவாங்குவதிலிருந்து தப்பிப்பதற்காக இந்தியாவுக்குள் அத்துமீறி நுழைந்த பங்களாதேஷ் சிறுமியொருவர் பிஎஸ்எப் படையினரிடம் பிடிபட்டார்.

பங்களாதேஷ் ஜெனாய்தா மாவட்டம் பன்ஸ்பெரியா கிராமத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் நேற்றுமுன்தினம் இந்தியா-பங்களாதேஷ எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படையினரிடம் (பிஎஸ்எவ்) பிடிபட்டார். அவரிடம் எந்தவிதமான உடைமைகளோ, பணமோ, பொருளோ இல்லை.

இந்தியா-பங்களாதேஷ் எல்லைக்கு மிக அருகிலிருக்கும் கிராமத்திலிருந்து கால்நடையாக 3 கிலோமீற்றர் தூரத்துக்கும் மேல் நடந்து இந்திய எல்லையில் அத்துமீறி நுழைந்துள்ளார். அவரை பிஎஸ்எவ் படையினர் பிடித்து விசாரித்தபோது தந்தையிடமிருந்து அடிவாங்குவதிலிருந்து தப்பிப்பதற்காக ஓடி வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியா-பங்களாதேஷ் எல்லையில் வேலியில்லாத பகுதி வழியாக இவர் இந்தியாவுக்குள் நுழைந்துள்ளார். மேலும் தான் பங்களாதேஷுக்கு திரும்பிச்செல்ல விருப்பம் இல்லையென்றும், அப்படிச் சென்றால் தனது தந்தை அடிப்பார் என்றும் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து அந்த சிறுமியை சைல்ட்லைன் இந்தியா ஃபவுண்டேஷன் என்ற அரசு சாரா அமைப்பிடம் பிஎஸ்எவ் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்.

# முதன் முறையாக ஜனநாயக கடமையை நிறைவேற்றிய நரிக்குறவர் சமூக மக்கள்



தூத்துக்குடியில் நரிக்குறவர் சமூக மக்கள் 40 ஆண்டுகளில் முதன் முறையாக வாக்களித்துள்ளனர். இதேபோல் தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் நரிக்குறவர் சமூக மக்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றியுள்ளனர்.

தூத்துக்குடி மாநகராட்சி 20ஆவது வார்டு பகுதிக்குட்பட்ட புதிய பஸ் நிலையம் அருகே பல தலைமுறைகளாக நரிக்குறவர் சமூக மக்கள் வசித்து வருகின்றனர். நாடோடி வாழ்க்கை வாழ்ந்துவரும் இந்த நரிக்குறவர் சமூகத்தினருக்கு இதுவரை வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை, குடும்ப அட்டை என எதுவுமே இல்லாமல் இருந்துவந்தனர்.

நீண்டகாலமாக வாக்குரிமைக்காக போராடிவந்த இவர்களில், வாக்களிக்க தகுதியுள்ள 52 பேரை வாக்காளர் பட்டியலில் இணைத்து அவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் வாக்காளர் அடையாள அட்டை வழங்கியது. இதையடுத்து நேற்று நடைபெற்ற நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலில், குடும்பத்துடன் சென்று வாக்களித்தனர். முதன் முறையாக வாக்களித்தது புதிய அனுபவமாக இருந்ததாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# உக்கிரமடைந்த உக்ரைன் - ரஷ்யா மோதல்





ரஷ்யா - உக்ரைன் மோதல் உக்கிரமடைந்துள்ளது. இந்நிலையில், உக்ரைன் எல்லையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் ஏவுகணைத் தாக்குதலில் இரண்டு உக்ரைன் வீரர்கள் உயிரிழந்தனர்.

ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக உக்ரைன் இராணுவத்தினர் தெரிவித்தனர். டொனேடெஸ்க் மாகாணத்திலுள்ள ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாத அரசின் தலைவரான டெனிஸ் புஷிலின் முழு அளவில் படைகளைத் தயார் நிலையில் வைத்திருப்பதாக அறிவித்துள்ளார்.

''உக்ரைன் எல்லையருகே அந்நாட்டு இராணுவத்திற்கும் பிரிவினைவாத படைகளுக்கும் இடையே வன்முறைத் தாக்குதல்களும் மோதல்களும் அதிகரித்துவருகின்றன. இதனைப் பயன்படுத்தி ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுக்கலாம்'' என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**பதுங்கி ஓடும் இராணுவம்**

இதேவேளை, உக்ரைனின் கிழக்கு பகுதியில் பிரிவினைவாத அமைப்பினர் நடத்திய பீரங்கி தாக்குதலிலிருந்து இராணுவத்தினர் மற்றும் ஊடகவியலாளர்கள் பதுங்கி ஓடும் வீடியோ வெளியாகியுள்ளது.

உக்ரைன் தொழிற்சாலைகள் நிறைந்த டொனட்ஸ்க் நகரிலுள்ள கண்காணிப்பு நிலையத்துக்குச் சென்ற இராணுவ வீரர்கள் மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மீது பிரிவினைவாத அமைப்பினர் கனரக ஆயுதங்களால் தாக்குதல் நிகழ்த்தினர்.



அவர்கள் பதுங்கியபடியே அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

**போர் விமானங்கள் குவிப்பு**

உக்ரைன் எல்லையை ஒட்டி ரஷ்ய படைகள் குவிக்கப்பட்டுள்ள சமீபத்திய செயற்கைக்கோள் படங்கள் நேற்று வெளியாகின. அதில், அரை மணிநேரத்தில் உக்ரைனை அடையக்கூடிய வகையில் கிரிமியா எல்லையில் ரஷ்யா போர் விமானங்களையும், ஹெலிகொப்டர்களையும், தரைப்படையையும் நிலைநிறுத்தியுள்ளது. அங்கு மருத்துவ கட்டமைப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் உளவுத்துறை மதிப்பீட்டின்படி, உக்ரைனை சுற்றி ரஷ்யா 1.90 இலட்சம் வீரர்களை நிறுத்தி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

**ஓரிரு நாளில் போர் மூளும்**

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி பைடன் சனிக்கிழமை அளித்த பேட்டியில், "உக்ரைன் மீது போர் தொடுக்க ரஷ்ய ஜனாதிபதி புட்டின் முடிவெடுத்துவிட்டார் என்பதற்கான நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன. எனவே, அதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எதிர்வரும் வாரத்தில், அடுத்த சில நாட்களில் தாக்குதல் நடத்தப்படலாம். குறிப்பாக, 28 இலட்சம் மக்கள் வாழும் உக்ரைனின் தலைநகர் கீவ்வை ரஷ்யா குறிவைத்து போரை தொடங்கலாம்'' என்றார்.

**பேச்சுக்கு வருமாறு புட்டினுக்கு அழைப்பு**

உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காணுமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலென்ஸ்கி (Volodymyr Zelenskyy) அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து மியூனிக் பாதுகாப்பு மாநாட்டில் பேசிய அவர்,

நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் வகையில் பேச்சுவார்த்தை நடத்துவதை முன்மொழிவதாகவும், அதற்கான இடத்தை ரஷ்யாவே தெரிவு செய்யட்டும் என்றும் வொலோடிமிர்



ஷெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். இதற்கு உடனடியான எந்தவிதமான பதிலையும் ரஷ்ய ஜனாதிபதி மாளிகை தெரிவிக்கவில்லை

சோவியத் ஒன்றியம் பிளவுபட்டதற்கு பின்னர் தனிநாடாக உருவான உக்ரைனை ஆக்கிரமித்து தன்னோடு இணைத்துக்கொள்ள ரஷ்யா முயன்று வருவதால் இரு நாடுகளுக்கும் இடையில் பல ஆண்டுகளாக மோதல் நீடிக்கிறது.

இந்தச் சூழலில் உக்ரைன் எல்லையில் 1.90 இலட்சத்துக்கும் மேற்பட்ட படை வீரர்களை குவித்துள்ள ரஷ்யா, எந்த நேரத்திலும் உக்ரைன் மீது படையெடுப்பை தொடங்கலாம் என்கிற அச்சம் நிலவி வருகிறது.

ரஷ்யாவுடன் அதிகரித்துவரும் போர்ப் பதற்றத்துக்கு மத்தியில் உக்ரைனின் கிழக்கு பகுதியிலுள்ள டன்ட்ஸ்க் மாகாணத்தில் தனிநாடு கோரி போராடிவரும் பிரிவினைவாதிகளுக்கும் உக்ரைன் இராணுவத்துக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது.

இந்த மாகாணத்தின் ஒரு பகுதி அரசின் கட்டுப்பாட்டிலும், மற்றொரு பகுதி ரஷ்ய ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள லுஹான்ஸ்க் நகரில் உக்ரைன் இராணுவம் பீரங்கிக் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக செய்திகள் வெளியாகின.

இது ஒருபுறமிருக்க, நேற்றுமுன்தினம் லுஹான்ஸ்க் நகரிலுள்ள எரிவாயு குழாய்களில் அடுத்தடுத்து பயங்கர வெடிப்பு நேரிட்டது. இதனால் டன்ட்ஸ்க் மாகாணத்தில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்கா, ரஷ்யா வேண்டுமென்றே டன்ட்ஸ்க் மாகாணத்தில் பதற்றத்தை உருவாக்கி அதன்மூலம் உக்ரைன் மீது படையெடுப்பை தொடங்க நாடகமாடி வருவதாக குற்றஞ்சாட்டியது.

**ஜி 7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அறிக்கை**

இந்நிலையில், உக்ரைன் எல்லையில் நியாயமற்ற முறையில் குவித்துள்ள படைகளை ரஷ்யா திரும்பப் பெறவேண்டும் என்றும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் ஜி 7 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக விடுத்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி, பிரான்ஸ் ஆகிய ஏழு நாடுகளின் கூட்டமைப்பான ஜி 7 ரஷ்யாவின் நடவடிக்கை ஐரோப்பாவில் பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாக கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச எல்லை விதிகளை ரஷ்யா மீறுவதாகவும் கண்டனம் தெரிவித்துள்ள



அந்த அறிக்கையில், உக்ரைன் தனது ஜனநாயகத்தைக் காத்துக்கொள்ள துணை நிற்போம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ரஷ்யா ஏவுகணை பரிசோதனை**

உக்ரைனையும், உலக நாடுகளையும் தனது இராணுவத்தை வைத்து ஏற்கனவே மிரட்டிக்கொண்டிருக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், ஒலியை விட 5 மடங்கு வேகமாக பாய்ந்து தாக்கும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையையும் சனிக்கிழமை நடத்தினார். இது, வெற்றிகரமாக பாய்ந்து இலக்கை தாக்கியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி தெரிவிக்கையில்,

''உக்ரைன் மீது படையெடுக்க புட்டின் ஒரு முடிவை எடுத்துள்ளார் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நாங்கள் அதை நம்புவதற்கு காரணம் உள்ளது. எதிர்வரும் வாரத்தில் அல்லது அதற்கு முன்பாகவே தாக்குதல் தொடங்கலாம். 28 இலட்சம் அப்பாவி மக்கள் வசிக்கும் உக்ரைனின் தலைநகரான கீவ்வை அவர்கள் முதலில் குறிவைப்பார்கள்" என்றார்.

மேலும், ரஷ்யா போரை தெரிவுசெய்தால் அந்த நாடு கடுமையான விளைவுகளை சந்திக்கும் எனவும் ஜோ பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனிடையே, பெலாரஸை ஒட்டிய பகுதியில் ரஷ்யா அணு ஆயுத பயிற்சியில் சனிக்கிழமை ஈடுபட்டுள்ளது. அதேபோல், கருங்கடல் பகுதியிலும் தொடர்ந்து கடற்படை பயிற்சியில் ஈடுபட்டு வருவது உச்சக்கட்ட பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மகாராணி எலிசபெத்துக்கு கொரோனா தொற்று உறுதி



பிரித்தானியா ராணி இரண்டாம் எலிசபெத்திற்கு (வயது 95) கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில்,

மகாராணிக்கு இலேசான அறிகுறி மட்டுமே தென்படு கிறது. அவருக்கு மருத்துவ உதவி அளிக்கப்படுகிறது. அனைத்து விதிமுறைகளையும் அரசி பின்பற்றுவார். அதேநேரத்தில் தனது கடமைகளையும் அவர் பின்பற்றுவார். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர், மகாராணி எலிசபெத்தின் மகனான இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமீலா ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவில் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கொரோனா தொற்றுக்குள்ளாகும் ஒருவர் 10 நாட்கள் தனிமைபடுத்திக்கொள்ள வேண்டும். அதில் 6 மற்றும் 7ஆவது நாளில் எடுக்கப்படும் பரிசோதனையில் முடிவு நெகட்டிவ் என வந்தால், தனிமைபடுத்துதலை முடித்துக்கொள்ளலாம்.

# ஆஸி. கடற்படை விமானத்தை சுட்டுவீழ்த்த குறி வைத்த சீனா

## தென் சீனக் கடல் பகுதியில் பதற்றம்

தென் சீனக் கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்ட தமது கடற்படை விமானத்தை சுட்டு வீழ்த்த, சீன போர்க்கப்பல் மின்காந்த அலை ஒளிக்கற்றை (லேசர்) மூலம் குறிவைத்ததாக அவுஸ்திரேலியா குற்றஞ்சாட்டியுள்ளது. இதனால் அங்கும் பதற்றம் ஏற்றபட்டுள்ளது.

தென் சீனக் கடல் பகுதி முழுவதும் தனக்கு சொந்தமானது என்று சீனா கூறி வருகிறது. இதனால், மற்ற நாடுகளின் கப்பல்கள், போர்க்கப்பல்கள் இந்த எல்லைக்குள் வருவதை அது தடைசெய்து வருகிறது. மீறி



வரும் கப்பல்களை தனது போர்க்கப்பல்கள் மூலம் அச்சுறுத்தி வருகிறது. இதற்கு சவால் விடும் வகையில், அமெரிக்கா அடிக்கடி தனது விமானந்தாங்கி கப்பல்கள், போர்க்கப்பல்களை இந்த கடல் பகுதிக்கு அனுப்பி, சீனாவை சீண்டி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் நட்பு நாடான அவுஸ்திரேலியா, தென் சீனக் கடல் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்ட தனது நாட்டு கடற்படை விமானத்தை சுட்டு வீழ்த்த, சீன போர்க்கப்பல் மின்காந்த அலை ஒளிக்கற்றை (லேசர்) மூலம் குறி வைத்ததாக குற்றஞ்சாட்டியுள்ளது.

டோரஸ் நீரிணையில் கடந்த வியாழக் கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. லேசரை வீசிய போர்க்கப்பல் உட்பட 2 சீன போர்க்கப்பல்கள் தற்போது அவுஸ்திரேலியா வின் கிழக்கே பவளக் கடல் பகுதியில் முகாமிட்டுள்ளன.

இதுபோல், லேசர் மூலம் குறிவைப்பது விமானத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும், சில நேரங்களில் விமானிகளின் பார்வையும் பறிபோய் விபத்து ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

சீனாவின் இந்தச் செயலுக்கு அமெரிக்கா வும், அவுஸ்திரேலியாவும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அமெரிக்க கண்காணிப்பு விமானங்கள், ஹெலிகொப்டர்களின் மீதும் ஏற்கனவே பலமுறை சீனா இதுபோல் லேசர் ஒளிக்கற்றையை வீசி அச்சுறுத்தியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியில் அரசியல்வாதியை புரட்டியெடுத்த ஊடகவியலாளர்



உக்ரைனில் இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் ரஷ்ய ஆதரவு அரசியல்வாதி யொருவர் ஊடகவியலாளரால் சரமாரியாகத் தாக்கப்பட்டுள்ளார்.

நேரலை நிகழ்ச்சியில் உக்ரைனின் ஊடகவியலாளர் யூரி புட்சோவ் என்பவர் ரஷ்ய சார்பு அரசியல்வாதியான நெஸ்டர் ஷுஃப்ரிச் என்பவரை நேர்காணல் செய்துகொண்டிருந்தார். அப்போது ஆயிரக்கணக்கான உக்ரேனிய அகதிகள் ரஷ்யாவிற்குள் நுழைந்து வருவதாக நெஸ்டர் குறிப்பிட்டார்.

ஆனால், அதற்கு யூரி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். உக்ரைன் எல்லையில் படைகளை குவித்த ரஷ்ய ஜனாதிபதி புட்டினின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவிக்க நெஸ்டர் மறுத்ததால், யூரி புட்சேவ் கடும் கோபமடைந்தார்.

இதையடுத்து அரசியல்வாதியான நெஸ்டர் ஷுஃப்ரிச்சை கீழே தள்ளி தலையில் சராமரியாக அவர் குத்தினார். இதில் நெஸ்டருக்கு இரத்தம் கொட்டியது.

# நெஷனல் சுப்பர் லீக் தொடரின் சம்பியனான ஜவ்னா

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில், டயலொக் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற அணிக்கு 50 ஓவர்கள்கொண்ட 5 அணிகள் பங்குபற்றிய நெஷனல் சுப்பர் லீக் தொடரின் இறுதிப்போட்டியில் கண்டி அணியை வீழ்த்திய தனஞ்ஜய டி சில்வா தலைமையிலான ஜவ்னா அணி சம்பியன் மகுடம் சூடியது.

கண்டி, பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு போட்டியாக ஆரம்பமான குறித்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கண்டி அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை ஜவ்னா அணிக்கு வழங்கியது. அதனடிப்படையில் களமிறங்கிய ஜவ்னா அணி 48.3 ஓவர்கள் நிறைவில் 258 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.






49 ஓவர்களில் 259 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 45.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 221 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது. பந்துவீச்சில் பிரமோத் மதுஷான் 4 விக்கெட்டுகளையும், நிமந்த மதுசங்க 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக துனித் வெல்லாலகே, தொடர் ஆட்ட நாயகனாக தனஞ்ஜய டி சில்வா, தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக நுவனிது பெர்னாண்டோ, தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக புலித தரங்க ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

Dialog NATIONAL SUPER LEAGUE 50 OVER TOURNAMENT
நாளைய சாம்பியன்களை வலுவூட்டும்
Dialog

## ஒப்பந்த பிரச்சினையால் வெளியேறிய போக்னர்



பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் குவாட்டா கிளாடியேட்டர்ஸ் அணியின் சகலதுறை வீரர் ஜேம்ஸ் போக்னர், தனது ஒப்பந்தத்தை மதிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி குறித்த தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.

"துரதிர்ஷ்டவசமாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எனது ஒப்பந்தம், கட்டணங்களை மதிக்காததால், கடந்த 2 போட்டிகளிலிருந்து விலகி, ஒட்டுமொத்தமாக தொடரிலிருந்து வெளியேறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது" என அவர் ஒரு ட்வீட்டில் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபை போட்டியில் முழுநேரப் பங்கேற்பு இருந்தபோதிலும் அவரிடம் தொடர்ந்து பொய் கூறி வருவதாக குற்றஞ்சாட்டினார்.

பாகிஸ்தானில் சர்வதேச கிரிக்கெட்டை மீண்டும் பெற உதவிசெய்ய விரும்பினாலும் இப்படி இடைநடுவே வெளியேறுவது வலிக்கிறது என குறிப்பிட்டுள்ளார். இதற்கு பதிலளித்த பிசிபி, அவரின் குற்றச்சாட்டுகளை கவனத்தில் எடுத்துக்கொண்டதாகவும், இது குறித்து விரிவான அறிக்கையை வெளியிடுவதாகவும் கூறியது. செலுத்த வேண்டிய தொகையில் 70 சதவீதம் அவரது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். இருப்பினும், ஒப்பந்தத்தின்படி மீதமுள்ள 30 சதவீதத்தை தொடர் முடிந்த 40 நாட்களுக்குப் பிறகு அவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பி.எஸ்.எல். அணிகள் தங்கியிருந்த ஹோட்டலின் சொத்தை பால்க்னர் சேதப்படுத்தியதாகவும், கிளாடியேட்டர்களிடமிருந்து கூடுதல் பணத்தைக் கோருவதாகவும் ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. ஜேம்ஸ் போக்னர் "புறப்படுவதற்கு முன்பும், குடிபோதையில், ஹோட்டலின் சொத்துகளை சேதப்படுத்தினார், மேலும் செக்-அவுட்டின்போது நஷ்டஈடு செலுத்த வேண்டியிருந்தது" என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்தன. பாதுகாப்பு ஊழியர்களிடம் அவர் மீண்டும் தவறாக நடந்துகொண்டார் என்று வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## சம்பியன் மகுடம் சூடிய காத்தான்குடி விளையாட்டுக் கழகம்

(ஏ. அகீல் சிஹாப்)

காத்தான்குடி ஈகெயார் நிறுவனத்துடன் இணைந்து ஈகெயார் விளையாட்டுக் கழகம் நடத்திய கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற ஆறு அணிகள் பங்குகொண்ட அணிக்கு 20 ஓவர்கள் கொண்ட கடினபந்து கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டி கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் பொது மைதானத்தில் நடைபெற்றது.

ஈகெயார் நிறுவனத்தின் தலைவர் றிம்சான் தலைமையில் நடைபெற்ற சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டியில் காத்தான்குடி வி.க. – என்.டி. வி.க. அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய என்.டி. வி.க. அணியினர் 19.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 121 பெற்றனர். 122 எனும் இலக்கை எதிர்த்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காத்தான்குடி வி.க. ஆரம்பத்தில் சற்று தடுமாறியிருந்தாலும், அணியின் சிரேஷ்ட வீரர் நிப்ராஸின் நிதானமான துடுப்பாட்டத்தின் உதவியுடன் 16.2 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றிபெற்று சம்பியன் மகுடம் சூடியது.

இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக காத்தான்குடி விளையாட்டுக் கழகத்தின் நிப்ராஸ் தெரிவானார். தொடரில் அதிக ஓட்டங்களை குவித்த வீரராக என்.டி. விளையாட்டுக் கழகத்தின் நிப்ராஸ் (123), தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக அதே கழகத்தின் நௌசாத் ஆகியோர் தெரிவாகினர்.

பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக காத்தான்குடி நகரபிதா எஸ்.எச்.எம்.அஸ்பர் கலந்துகொண்டதுடன், அதிதிகளாக மண்முனைப்பற்று பிரதேச சபை உறுப்பினர்களான நஸீம், றஸீன் பி.ஏ, கத்தான்குடி இளைஞர் சேவை அதிகாரி ரம்ஸி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது சம்பியனான காத்தான்குடி விளையாட்டுக் கழகத்தின் முகாமையாளர் ஆஷிக் ஹாஜியார் தனது சொந்த நிதியில் இருந்து ரூ. 5 இலட்சம் பணத்தொகையின் கழகத்தின் வளர்ச்சிக்காக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.





## அரையிறுதியில் வடக்கு – கிழக்கு மாகாண அணிகள் நேருக்கு நேர் மோதல்

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் மாகாண அணிகளுக்கிடையிலான சுதந்திர கிண்ண உதைபந்து தொடரின் அனைத்து லீக் போட்டிகளும் நேற்று முன்தினம் நிறைவுக்கு வந்தன.

சொந்த மண், அந்நிய மண் என்ற அடிப்படையில் அரை இறுதிப்போட்டிகள் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளன. அணிகள் நிலையில் முதலாம் இடத்தைப் பெற்ற சப்ரகமுவ மாகாணத்துக்கும், நான்காம் இடத்தைப் பெற்ற தென் மாகாணத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட முதலாவது அரை இறுதிப்போட்டி காலியில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த அணிகள் சம்பந்தப்பட்ட இரண்டாம் கட்ட அரை இறுதிப்போட்டி இரத்தினபுரியில் மார்ச் 1 அல்லது 2ஆம் திகதி நடைபெறும். வடக்கு மாகாணத்துக்கும், கிழக்கு மாகாணத்துக்கும் இடையிலான முதலாம் கட்ட இரண்டாவது அரை இறுதிப்போட்டி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும். அதனைத் தொடர்ந்து இந்த இரண்டு அணிகளும் இரண்டாம் கட்ட அரை இறுதிப் போட்டியில் அம்பாறையில் மார்ச் 1 அல்லது 2ஆம் திகதி விளையாடும்.

இந்த இரண்டு கட்ட அரை இறுதிப்போட்டிகளிலும் ஒட்டுமொத்த கோல்கள் அடிப்படையில் வெற்றிபெறும் இரண்டு அணிகள் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும். ஒட்டுமொத்த கோல்கள் சமநிலையில் இருந்தால் வெற்றி அணி அல்லது அணிகள் பெனல்டி முறையில் தீர்மானிக்கப்படும்.




INDEPENDENCE TROPHY - CEYLON PROVINCIALS LEAGUE
2022 POINTS TABLE

| TEAM | | P | W | D | L | GF | GA | GD | PTS |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| SABARAGAMUWA | (Q) | 7 | 5 | 2 | 0 | 11 | 3 | 8 | 17 |
| NORTHERN | (Q) | 7 | 3 | 4 | 0 | 9 | 4 | 5 | 13 |
| EASTERN | (Q) | 7 | 2 | 5 | 0 | 5 | 1 | 4 | 11 |
| SOUTHERN | (Q) | 7 | 3 | 2 | 2 | 8 | 7 | 1 | 11 |
| WAYAMBA RAJARATA | | 7 | 2 | 2 | 3 | 11 | 13 | -2 | 8 |
| WESTERN | | 7 | 2 | 2 | 3 | 12 | 10 | -2 | 8 |
| CENTRAL | | 7 | 1 | 1 | 5 | 3 | 11 | -8 | 4 |
| UVA | | 7 | 1 | 0 | 6 | 4 | 14 | -10 | 3 |

## சம்பியனான லக்கி உதைபந்தாட்ட அணி

அட்டாளைச்சேனை லக்கி விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த லக்கி சம்பியன் கிண்ணம் - 2022 உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை லக்கி அணியும், சம்மாந்துறை எவகிறீன் அணியும் பங்குபற்றின. இதில் லக்கி அணி 3 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக்கொண்டது. லக்கி அணியின் சார்பில் சஞ்ஜீவ் ஒரு கோலினையும், டிலுக்ஸன் இரண்டு கோலினையும் அடித்தனர்.





இப்போட்டியில் லக்கி அணியினர் மிகச் சிறப்பாக விளையாடியதுடன், சிறந்த பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டமை லக்கி அணியினர் வெற்றிபெறக் காரணமாக அமைந்தது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் மூத்த உதைபந்தாட்ட வீரர் ஹம்சா சனூஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில், சமாதான நீதவான்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி பஹத் ஏ. மஜீட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக அதிபர் எம்.ஐ.எம்.றியாஸ், மைதான பொறுப்பாளர் றஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், வீரர்கள் அறிமுகத்திலும் பங்கேற்றனர். இப்போட்டியில் லக்கி அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியதுடன், இரண்டாமிடத்தை எவகிறீன் அணி பெற்றுக்கொண்டது.

## மெண்டிஸ், சானக்கவின் நிதானத்தால் ஆறுதல் வெற்றிபெற்ற இலங்கை

## 20 தொடர் ஆஸி. வசம்

தசுன் சானக்க தலைமையிலான இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. முதல் நான்கு போட்டிகளிலும் அவுஸ்திரேலியா அணி வெற்றிபெற்ற நிலையில் ஐந்தாவதும், இறுதியுமான போட்டி நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்களை சேர்த்தது. துடுப்பாட்டத்தில் விக்கெட் காப்பாளர் மெத்யூ வேட் 43 ஓட்டங்களை குவித்தார். 155 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி குசல் மெண்டிஸ் மற்றும் தசுன் சானக்க ஆகியோரின் 83 ஓட்ட இணைப்பாட்டம் மூலம் 19.5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது.

இதன்மூலம் இலங்கை அணி ஆறுதல் வெற்றிபெற, ஆஸி. அணி தொடரை 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. போட்டியின்



ஆட்டநாயகனாக 69 ஓட்டங்களை குவித்த குசல் மெண்டிஸ் தெரிவாக, தொடர் ஆட்டநாயகனாக ஆஸி. சகலதுறை வீரர் க்ளேன் மெக்ஸ்வெல் தெரிவானார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7